மஹிந்த ராஜபக்ஷ சுயபுத்தியுடன் செயற்பட வேண்டிய தருணமிது

பக்கம் 16

# உதயன்

வானிலை
கூ.வெ. 30°C
கு.வெ. 29°C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 220 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 19, சனிக்கிழமை 04.07.2015

# வடக்கு-கிழக்கிலிருந்து 15 அமைப்புக்கள் ஐ.நா. ஆணையர் ஹுசைனுக்கு கடிதம்

## உள்ளக விசாரணைப் பொறிமுறையில் அவரது பரிந்துரை பின்பற்றப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுலை 4

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிவுறுத்தலை இலங்கை அரசு பின்பற்றவில்லை என்பதை சுட்டிக்காட்டி, வடக்கு – கிழக்கைச் சேர்ந்த 15 பொது அமைப்புக்கள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயில் அல் ஹுஸை னுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன. 'உள்ளக விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடன் எந்தவொரு கலந்தாய்வையும் இலங்கை அரசு செய்ய வில்லை' என்பதைச் சுட்டிக்காட்டியே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 28ஆவது கூட்டத் தொடரில் தொடக்கவுரை ஆற்றிய போதும், கடந்த மாதம் 29 ஆவது கூட்டத் தொடரில் தொடக்கவுரை ஆற்றியபோதும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், இலங்கையில் உள்ளகப் பொறி முறை ஒன்றை உருவாக்குவதாயின் அது பாதிக்கப்பட்ட பக்.24

## கருத்துத் தர ஐ.நா. மறுப்பு

கொழும்பு, ஜுலை 4

எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது குறித்து கருத்து வெளியிட ஐ.நா. மறுத்துள்ளது.

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் நடந்த நாளாந்த செய்தியாளர் சந்திப்பில், ஐ.நா. பொதுச் செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம், மஹிந்த ராஜபக்ஷ நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிட வுள்ளது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஐ.நா. பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர், அதுபற்றித் தாம் எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது என்று பதிலளித்துள்ளார். (உ–5)

## சிவில் பிரதிநிதிகளை நியமிக்க சட்டமா அதிபரின் ஆலோசனை

*அரசமைப்புச் சபையில் நேற்று முடிவு*

கொழும்பு, ஜுலை 4

19ஆவது திருத்தச் சட்டத்தினூடாக உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சபையில் சிவில் பிரதிநிதிகளை நியமிப்பது குறித்த சர்ச்சை தொடர்கின்றதால், இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோர அரசமைப்புச் சபை நேற்றுத் தீர்மானித்துள்ளது. அத்துடன், அடுத்ததாக எதிர்வரும் 9ஆம் திகதி கூடுவதற்கும் முடிவெடுத்துள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அரசமைப்புச் சபையின் முதலாவது கூட்டம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்த முதலாவது கூட்டத்தில் சபையின் உறுப்பினர்களான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரட்ன, இரா.சம்பந்தன் ஆகிய ஆறு பேர் பங்கேற்றுள்ளனர். சபையின் மற்றுமொரு உறுப்பினரான அமைச்சர் பக்.24

# சுதந்திரக் கூட்டில் மஹிந்த போட்டி

## மைத்திரியும் ஆதரவு தெரிவிப்பு
## தேர்தல் களத்தில் திடீர் திருப்பம்



கொழும்பு, ஜுலை 4

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற பங்காளிக் கட்சித் தலைவர்களுடனான விசேட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களான தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, திஸ்ஸ விதாரண ஆகியோர் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட நீண்ட நேரப் பேச்சுக்களின் பின்னரே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பக்.24

## சு.கவின் முடிவு விரைவில்

கொழும்பு, ஜுலை 4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்கீழ் போட்டியிட வேட்பாளர் நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் வேட்பாளர் நியமனம் வழங்குவது குறித்து கட்சியின் மத்தியகுழு கூடி ஆராயவுள்ளது என கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும நேற்றுத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்குவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மட்டுமே தீர்மானித்துள்ளது என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு விரைவில் கூடி தீர்மானம் எடுக்கும் என்றும் டலஸ் அழகப் பெரும நேற்றுத் தெரிவித்தார். பக்.24

## மைத்திரியும் மஹிந்தவும் 9 இல் ஒரே மேடையில்

கொழும்பு, ஜுலை 4

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் 9 ஆம் திகதி அநுராதபுரத்தில் இடம்பெறவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில் ஒன்றாக மேடையேறுவார்கள் என பங்காளிக் கட்சித் தலைவர்கள் நேற்று நம்பிக்கை வெளியிட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடுவதற்கு கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ள நிலையிலேயே, நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.ம.சு.முன்னணியினர் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டனர். (கு–சி)

## மஹிந்தவுக்கு ஆதரவில்லை பொது பல சேனா அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 4

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடப் போகிறார் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நிலையில், அவருக்கு தாம் ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை என்று பொதுபல சேனா அறிவித்துள்ளது.

பொதுபல சேனாவின் தேசிய அமைப்பாளர் விதாரந்தெனியே நந்த தேரர், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்திருந்தாலும், பக்.24

## யாழ். மத்திய கல்லூரியிலேயே இம்முறையும் வாக்கு எண்ணல்

யாழ்ப்பாணம், ஜுலை 4

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் இம்முறையும் யாழ். மத்திய கல்லூரியிலேயே மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கான திட்டங்கள், தேர்தல்கள் திணைக்களத்தினால் வகுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்கு எண்ணும் நிலையமாக யாழ். மாவட்டச் செயலகமே செயற்பட்டது. 2013 முதல் பக்.24

## மைத்திரியைக் கொல்ல முயன்ற புலிக்கு 10 வருட கடூழியச் சிறை

கொழும்பு, ஜுலை 4

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலைசெய்வதற்கு முயற்சித்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, பொலன்னறுவை மேல் நீதிமன்ற நீதிபதி அமின்டர் செனவிரத்ன முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிபதி, மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொஹமது சுல்தான் காதர் மொஹிடீன் ஏ.கே.ஏ. சேனன் என்றழைக்கப்படும் சிவராஜ் ஜெனிவன் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 10 ஆயிரம் ரூபா தண்டப் பக்.24

## 11 ஆண்டுகள் தடுப்பிலிருந்த இராணுவ மேஜர் விடுதலை

### புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் நிரபராதி எனத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 4

இராணுவத்திலிருந்துகொண்டு விடுதலைப் புலிகளுக்குத் தகவல் வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவ மேஜர் விசாரணையின் பின்னர் நிரபராதியென யாழ். மேல்நீதி மன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் விசாரணையில் இருந்து வந்த இந்த வழக்கு வழமைபோன்று பிரதம நீதியரசரின் அனுமதி பக்.24

# சேதன விவசாய முறைமை பூகோள ரீதியில் அவசியம்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 04

சேதன விவசாய முறைமை என்பது பூகோள ரீதியில் அத்தியாவசியமான தேவையாக உருவெடுத்துள்ளது என வடமாகாண ஆளுநர் பளிகக்கார தெரிவித்துள்ளார்.

சூழலியல் விவசாயத்தை நோக்கி என்ற தொனிப்பொருளில் வடமாகாண விவசாய அமைச்சினுடைய ஏற்பாட்டிலே நேற்று இடம்பெற்ற சேதன விவசாயம் தொடர்பான கலந்துரையாடலில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கையில் மட்டுமல்ல பூகோள ரீதியாகவே இந்த விடயங்கள் அத்தியாவசியமானதாக இருக்கின்றன. இந்த சேதன விவசாய முறைமை என்பது பூகோள ரீதியாகவே மிகமுக்கியமான அவசியத் தன்மையை கொண்டுள்ளது.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சேதன விவசாயம் என்பது எங்களுடைய நீடித்த பேண்தகு சுகாதார நிலைமைகளுக்கு அவசியமானதாக, உணவுப் பாதுகாப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு நிலைமைகளுக்கு அவசியமானதாக இருக்கின்றது. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கையில் மட்டுமல்ல பூகோள ரீதியாகவே இந்த விடயங்கள் அத்தியாவசியமானதாக இருக்கின்றன. இந்த சேதன விவசாய முறைமை என்பது பூகோள ரீதியாகவே மிக முக்கியமான அவசியத் தன்மையைக் கொண்டுள்ளது.

இது புலமைகள் கோட்பாடு சார்ந் தது மட்டுமல்ல இது வாழ்வுக்குரிய அதாவது வாழ்வியலுக்குரிய ஜீவ அம்சமாகவுள்ளது. இது தொடர்பில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் நாம் அபாயகரமான சூழலை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதேபோன்று இந்த முறையானது யாழ்ப்பாண மக்களுக்கு உயிரூட்டமான ஓர் முறையாக விளங்குகின்றது. ஏனென்றால் அசேதன வளமாக்கிகளை விவசாயத்துக்குப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது. பெருமளவான நிலத்தடி நீர் மூலங்கள் மாசடைந்திருக்கின்றன. இதற்கான தீர்வாக இந்தச் சேதன விவசாய முறைமை அமைந்துள்ளது.

விவசாயிகளுக்கு, மாகாண மத்திய கட்டமைப்புக்கள் மற்றும் புலமைசார் கட்டமைப்புக்கள், பல்கலைக்கழகக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து வேலை செய்ய முடியுமா? என்ற அந்த முக்கியத்துவமான விடயம் இந்த நிகழ்வின் நோக்கமாகும்.

வடக்கு–தெற்கு நல்லெண்ணத்தை வளர்த்தல், நம்பிக்கையை கட்டியெழுப்புதல் என்பதையும் இந்த நிகழ்வு அளிக்கிறது – என்றார்.

சூழலியல் விவசாயத்தை நோக்கி என்ற தொனிப்பொருளில் சேதன விவசாயம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் அதிதிகளாக வடமாகாண ஆளுநர் கௌரவ பளிகக்கார, மேல்மாகாண ஆளுநர் க.சி. லோகேஸ்வரன், தென்மாகாண ஆளுநர் கேமகுமார நாணயக்கார, வடமாகாண பதில் முதலமைச்சரும் கல்வி அமைச்சருமான த.குருகுலராஜா, வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் அமைச்சர்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், விவசாயிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த–ரி–86)

## மாணவிகள் துஷ்பிரயோகம்: ஓய்வு பெற்ற பிரதி அதிபர் கைது

நெல்லியடி, ஜூலை 4

வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் மாணவிகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பிரபல ஆசிரியர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது சந்தேக நபரை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மாணவிகள், பெற்றோர் மற்றும் அப்பகுதிக்கு பொறுப்பான சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே குறித்த ஆசிரியரை அவரின் வீட்டில் வைத்து நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியளவில் கைது செய்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓய்வு பெற்ற பாடசாலை பிரதி அதிபரான இவர் தனிப்பட்ட வகுப்புகளை நடத்தி வந்த நிலையில் மாணவிகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது நீதிவான் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். சந்தேக நபர் சார்பில் முன் வைக்கப்பட்ட பிணை விண்ணப்பமும் மன்றால் நிராகரிக்கப்பட்டது. (ற–109)

## கோயிலுக்கு சென்றவர் விபத்தில் உயிரிழந்தார்

### அவரது கையிலிருந்த மோதிரமும் மாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஒட்டுசுட்டான் கோயில் தேருக்குச் சென்ற குடும்பஸ்தர் விபத்தில் சிக்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவர் காயப்பட்டு மயங்கிய நிலையில் அவருக்கு உதவி செய்வது போல நடித்து அவர் அணிந்திருந்த பெறுமதியான மோதிரத்தை யாரோ திருடியுள்ளனர் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் வட்டு தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கிஷ்ணகுமார் கஜேந்திரன் (வயது –31) என்பவர் உயிரிழந்தார். அவரது மனைவியும் 5 வயதுப் பெண் குழந்தையும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய தேர்த்திருவிழாவுக்காக மோட்டார் சைக்கிளில் பிற்பகல் 3 மணியளவில் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே விபத்து இடம்பெற்றது. வீதியை விட்டு விலகிச் சென்று மரத்துடன் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்தையடுத்து அவர் மயங்கிவிட்டார். மனைவியும் மகளும் படுகாயமடைந்திருந்தனர்.

அந்த இடத்தில் அவர்களுக்கு உதவியவர்களில் ஒருவரே குடும்பஸ்தர் மயங்கிக் கிடந்த நிலையில் அவர் அணிந்திருந்த பெறுமதிமிக்க மோதிரத்தைத் திருடிச் சென்றுள்ளனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார். புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்தனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டிருந்தார். (ற–4)

## விபத்தில் இருவர் படுகாயம்



கிளிநொச்சி, ஜூலை 4

வவுனியா ஓமந்தை பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மீன் ஏற்றி வந்த படி ரக வகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து ஓமந்தை பகுதியில் உள்ள பாலத்துடன் மோதியே விபத்துக்குள்ளானது.

அதில் படுகாமடைந்த வாகனத்தின் சாரதி, அருகிலே இருந்த நபர் ஆகிய இருவரும் அங்கு நின்றவர்களால் உடனடியாக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டன. இது தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற–21)

## சிகிச்சை முடிந்து திரும்பிய மாணவன் மீது தாக்குதல்

வவுனியா, ஜூலை 4

வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பிய பல்கலைக்கழக மாணவன் மீது மறுபடியும் விடுதி மாணவர்கள் தாக்குதல் நடத்தியதில் அவர் மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா பம்பைமடு பல்கலைக்கழக வியாபாரகற்கை நெறி மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த 7 மாணவர்கள் கடந்த புதன்கிழமை மாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் நேற்று சிகிச்சை முடிந்து தமது விடுதிக்கு திரும்பிச் சென்றுள்ளனர்.

அவர்களில் டபியூ.எம்.மதுக ஹசந்த விக்கிரமசிங்க என்ற 2ஆம் வருட மாணவன் மீதே மறுபடியும் நேற்று மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கைமூட்டு விலகிய நிலையில் அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதுகுறித்த விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## பிரதேசவாதம் என்பது சமூகத்தைக் கொன்றுவிடும் விடயம்

### அதற்கு இடமளிக்கக் கூடாது என மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ் தெரிவிப்பு

கல்முனை, ஜூலை 4

பிரதேசவாதம் என்பது சமூகத்தைக் கொன்றுவிடும் விடயம். இது சமூகத்தில் வளர்வதற்கு ஒரு போதும் இடமாளிக்கக் கூடாது.– இவ்வாறு மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ் தெரிவித்தார்.

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் ஏற்பாட்டிலான வருடாந்த இப்தார் நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை வெள்ளவத்தை மெரைன்ட் கிரேண்ட் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளையின் தலைவர் வைத்தியர் சனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:–

பிரதேசவாதம் எமது சமூகத்தில் வளர்வதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. இந்த நோய் இன்று பாடசாலைகள் முதல் உயர் கல்வி நிறுவனங்கள் வரை காணப்படுகின்றது. இதனைஅழிப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

பிரதேசவாதத்தின் மூலம்எதனையும் சாதிக்க முடியாது என மக்கள் அனைவரும் அறிந்திருக்க வேண்டும். – என்றார்.

இந்த நிகழ்வில் '2020 இல் ஸாஹிரா' எனும் பாடசாலையின் எதிர்கால செயற்திட்டமொன்றும் வெளியிடப் பட்டது. (ற–10)

## வீரகத்தி விநாயகர் ஆலய சங்கடஹர சதுர்த்தி விரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சங்கடஹரசதுர்த்தி விரதம் இன்று சனிக்கிழமை 5.30 மணிக்கு ஆரம்பமாகி மூல மூர்த்தி பூஜை வசந்த மண்டப பூஜை என்பன நடைபெறும். (ஐ)

# தேசிய சூழல் பாதுகாப்புக்கு தேர்தலின் பின் நடவடிக்கை

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
உள்நாட்டு உணவு உற்பத்தி, போதைப் பொருள் தடுப்பு போன்று சூழல் பாதுகாப்புக்காக தேர்தலின் பின்னர் விரிவான செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சூழல் மற்றும் மிருக வதைக்கு எதிரான அமைப்பின் பிரதிநிதிகளுடன் கொழும்பு விசாகா கல்லூரியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த 3 விடயங்களும் இன்று நாட்டில் முக்கிய பிரச்சினையாக உள்ளன. இதற்குத் தீர்வு வழங்குவதற்கு தமது அரசு முக்கிய பொறுப்பாகக் கருதி நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார். அதற்கான பணிகளை ஜனாதிபதி அலுவலக இணைப் பகத்தின் ஊடாகவும் குறித்த நிறுவனங்களின் பங்களிப்புடனும் தயாரிக்கப் பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்த இறக்குமதியாகும் உணவு வகைகள் பலவும் எமது நாட்டிலேயே தயாரிக்கக் கூடியவை. அத்துடன் உள்ளூர்ப் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை அளிக்கின்ற அரசு என்ற வகையில் துரித தீர்வைத் தேடவேண்டும். அதுமட்டுமன்றி கடுமையான துன்பச் செயலாக மாறியிருக்கின்ற போதைப் பொருள்ளைத் தடுப்பதற்கு விரிவான தேசிய வேலைத் திட்டம் ஒன்று தேவை. சூழல் பாதுகாப்பு இன்று எமக்குச் சவாலாக எழுந்துள்ளது. எதிர்கால சந்ததியினருக்காக சூழலைப் பாதுகாப்பதற்கு அரசுக்குப் பெரும் பொறுப்பு உள்ளது என்றும் தெரிவித்தார். அபிவிருத்தியும் சூழல் பாதுகாப்பும் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய விடயங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பம் எவ்வளவுதான் முன்னேறினாலும் நன்மை, கருணை, மனிதாபிமானம் என்பவை சீர்குலைந்



துள்ள சமூகத்தில் அந்த முன்னேற்றத்தினால் எவ்வித பயனையும் பெற முடியாது என்றும் தெரிவித்துள்ளார். இலங்கை மக்கள் சமூகம், நல்லொழுக்கம், பணிவு, மனிதாபிமானம் என்பவற்றில் எந்தவொரு நாட்டுக்கும் இரண்டாவதாக இல்லை. தொழினுட்பத்துடன் முன்னேறினாலும் எமது கலாசாரத்தைப் பாதுகாக்க அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.- என்றார். (ற-4)

# வறட்சி தணிப்பு செயற்றிட்டத்துக்கு ரூபா 30 மில்லியன் நிதி ஒதுக்கீடு

யாழ்.மாவட்டத்தில் வறட்சி தணிப்புச் செயற்றிட்டம் முன்னெடுப் பதற்காக 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இடர்முகாமைத்துவ அமைச்சினூடாக, இந்த ஆண்டுக்குரிய செயற்றிட்டங்களை மேற்கொள்ள 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உவர் நீர் தடுப்பு அணை, குளங்கள் புனரமைப்பு, கேணிகள் புனர்நிர்மாணம், மழை நீர் சேகரிப்புத் தொட்டி நிர்மாணம் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு டிசெம்பர் மாத இறுதிக்குள் இதற்குரிய செயற்றிட்டங்கள் யாவும் நடைமுறைப்படுத்தி முடிக்க வேண்டும்.

இடர்முகாமைத்துவ அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட வெள்ளத் தணிப்புச் செயற்றிட்டங்கள் வினைத்திறனுடன் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், யாழ். மாவட்டத்தில் எதிர்காலத்தில் வெள்ளப் பெருக்கால் பாதிப்படைவோர் தொகை குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-5)

# கஞ்சாவுடன் கைதானோருக்கு 14 நாள்கள் விளக்கமறியல்

நெல்லியடி, ஜூலை 4
வடமராட்சி அம்பன் பகுதியில் விசேட அதிரடிப் படையின் சுற்றிவளைப்பில் 180 கிலோ கேரளா கஞ் சாவுடன் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய திடீர் சுற்றி வளைப்பில் விநியோகத்துக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 180 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப்பொதிகள் கைப்பற்றப்பட்டிருந்தன. இப்பொதிகள் இந்தியாவில் இருந்து கடல் வழியாக கொண்டு வரப்பட்டு, கரையில் வைத்து பொதி செய்யப்பட்டு விநியோகத்திற்கு தயார் செய் யப்பட்டிருந்தது. அந்தச் சமயம் பதுங்கியிருந்த விசேட அதிரடிப்படையினர் கஞ்சா பொதிகளை கைப்பற்றியதோடு நான்கு சந்தேகநபர்களையும் மடக்கி பிடித்து கைது செய்திருந்தனர்.

செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த மரியாம்பிள்ளை கிறிஸ் வசிகரன் (வயது - 48 ), காட்டுப்பள்ளி புதிய வீதி ஏறாவூரைச் சேர்ந்த அப்துல் ரகுமான் முகமத் றவூப் (வயது-37), ஓடுகுடவத்தை கொழும்பைச் சேர்ந்த சூசைப்பிள்ளை டானியல் (வயது - 52), செம்பியன்பற்றை சேர்ந்த தங்கக்குமார் அன்ரன் அனிஸ்ரன் (வயது-29) ஆகியோரே கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப் படையினரால் பருத்தித்துறை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் ம்ுற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேக நபர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-109)

# கோஷ்டி மோதல்: 22 பேருக்கு விளக்கமறியல்

நெல்லியடி, ஜூலை 4
கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் கோஸ்டி மோதலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 22 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அல்வாய் விளையாட்டு மைதானம் தொடர்பில் இரு தரப்புகளுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் பெரும் கோஷ்டி மோதலாக மாறியிருந்தது. அதையடுத்து 5 க்கு மேற்பட்ட இளைஞர்கள் வாள்வெட்டு, அடி காயங்களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். வைத்தியசாலைக்கு முன்பாகவும் இளைஞர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 22 சந்தேகநபர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் 22 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-109)

# தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



மன்னார், ஜூலை 4
தலை மன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 தமிழக மீனவர்களையும் மீண்டும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

தமிழக மீனவர்கள் 14 பேர் தலை மன்னார் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கடந்த 2 ஆம் திகதி மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளினூடாக மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன் போது விசாரண்ணகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த 14 தமிழக மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த 14 தமிழக மீனவர்களும் மீண்டும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது குறித்த மீனவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.(ற-56)

# கத்தியால் குத்திக் கொலை

## 5 ஆண்டு கடூழியச் சிறையும் ரூ. 10 லட்சம் அபராதமும் விதித்தது மன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4
சடுதியாக ஏற்பட்ட கோபத்தினால் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தவருக்கு யாழ்.மேல் நீதிமன்று நேற்றுக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததோடு பாதிக்கபட்ட குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடாகப் 10 லட்சம் ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டது.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்குத் நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி சுதுமலையைச் சேர்ந்த சீவரத்தினம் லவன் (வயது-22) என்பவர் கொல்லப்பட்டார். அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் முதலாவது சந்தேகநபராக அதே இடத்தைச் சேர்ந்த ரவீந்திரன் ஜெயச்சந்திரன் (வயது -30), இரண்டாவது சந்தேகநபராக கஜேந்திரன் (வயது -25) ஆகிய சகோ தரர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர்கள் மீதான வழக்கு விசாரணையில் இருந்து வந்தது. விசாரணை நிறைவில் நேற்றுத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அதன்போதே குற்றச்சாட்டிலிருந்து இரண்டாவது சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டார். முதலாவது குற்றவாளிக்கு, இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவைப் பிரிவின் கீழ் தண்டிக்க வேண்டிய குற்றத்துக்கு உட்பட்டுள்ளதால் அவருக்கு 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தவிர பாதிக்கப் பட்ட குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபா நஷ்ட ஈடு செலுத்துமாறும் நீதிமன்று தீர்ப்பளித்தது. (ற-4)

# அதிபர்களின் இடமாற்றங்கள் திட்டமிட்டவாறு நடைபெறும்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 4
வடக்கு பிரதம செயலாளர், கல்வி அமைச்சருடைய கூற்றை அடுத்து வடக்கு பாடசாலைகளின் அதிபர்களுடைய இடமாற்றத்திற்கு தேர்தல் ஆணையாளர் சம்மதித்தார் எனவும் அதன் அடிப்படையில் இடமாற்றங்கள் திட்டமிட்டவாறு இடம் பெறும் எனவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபரை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று கோரி மாணவர்களால் இரண்டாவது நாளாக நேற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கல்வி புறக்கணிப்பை அடுத்து குறித்த பாடசாலைக்கு வந்திருந்த கல்வி அமைச்சின் செயலாளர் மாணவர்கள் மத்தியிலே உதயன் பத்திரிகையில் வெளிவந்த வடக்கு பாடசாலை அதிபர்களின் இடமாற்றத்திற்கு தேர்தல் ஆணையாளர் தடை என்ற செய்தி தவறு எனக்கூறியிருந்தார்.

இதுகுறித்து அவரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக எமது கல்வி அமைச்சரும் பதில் முதலமைச்சருமாகிய த. குருகுலராஜாவிடம் கூறியிருந்தோம். அதையடுத்து வடக்கு மாகாண பிரதம செயலாளரும், கல்வி அமைச்சரும் அதிபர்களுடைய இடமாற்றம் தொடர்பாக தேர்தல் ஆணையாளருடன் பேசியுள்ளார்.

அதனடிப்படையில் இது எங்களால் ஏற்கனவே செய்யப்பட்ட விடயம் என்பதால் அதற்கு தடையில்லை எனக் கூறி அதற்கான அனுமதி தரப்பட்டது. அத்தோடு தேர்தல் ஆணையாளர் நாயகத்தால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் எதிர்வரும் 6ஆம் திகதியில் இருந்து தான் எந்த விதமான இடமாற்றங்களோ அல்லது திறப்பு விழாக்களோ அல்லது வைபவங்களோ தேர்தல் முடிவடைந்த பின் இரண்டு கிழமை வரை எந்த பாடசாலைகளும் அனுமதி இல்லை எனக் கூறப்பட்டுள்ளது.

எனவே குறித்த பாடசாலை அதிபரினுடைய இடமாற்றம் உட்பட அனைத்து இடமாற்றங்களும் திடமிட்டவாறு இடம்பெறும். குறித்த இடமாற்றங்களில் எந்தவிதமான அரசில் அழுத்தங்களோ, பழிவாங்கல்கல்களோ அல்லது செல்வாக்குகளோ கிடையாது. இது அந்தந்த பாடசாலையின் பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழுவினர்களுடைய கோரிக்கைகளை ஏற்று அதனடிப்படையிலேயே இந்த இடமாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன, - என்றார். (ற-21

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, ஜூலை 4

வவுனியா நகர்ப்பகுதியில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் வவுனியா போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த புதன் கிழமை மாலை நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் கிளிநெச்சியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றார் என்றும் அவரிடம் இருந்து 4 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்த விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ற)

## முகாமையாளர் சம்மேளனத்தின் விரிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 'தேசவழமைச் சட்டம்' பற்றிய விரிவுரை இன்று நடைபெறவுள்ளது.

மு.ப. 9.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் வளவாளராக சட்டத்தரணியும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி நா.கமலா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-10)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

கோண்டாவில் ஸ்ரீ சாமுண்டேஸ்வரி சமேத ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் காலை 9.30 மணிக்கு பகல் உற்சவமும் மாலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று சுவாமி உள்வீதி உலா நடைபெறும்.(ற-10)

# மழையுடன் உயிர்த்தது பாதீனியம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

கடந்த மாதம் பெய்த கோடை மழையை அடுத்து குடாநாட்டை மீண்டும் பாதீனியங்கள் ஆக்கிரமித்துள்ளதால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாதீனிய செடிகள் வருடா வருடம் அழிக்கப்பட்டாலும் அவை மாரி மழையுடன் மீண்டும் பரவி விடுகின்றன.

கடந்த வருட இறுதியில் இந்தச் செடிகள் பரவி வளர்ந்ததை அடுத்து அவற்றை வடமாகாண விவசாய அமைச்சர் மற்றும் அமைப்பினர் தீவிரமாக செயற்பட்டு ஓரளவு அழித்து கட்டுப்படுத்தினார்கள்.

இதேவேளை குடாநாட்டில் சகல பிரதேசங்களிலும் பரவி முளைத்திருந்த இந்தப் பாதீனியச் செடிகள் கிருமிநாசினி விசிறப்பட்டு அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தச் செயற்பாடுகள் மூலம் அநேகமான பிரதேசங்களில் பரவி விவசாய நடவடிக்கைகளுக்கு பங்கம் விளைவித்த பாதீனியங்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

என்றாலும் கடந்த மாதத்தில் பெய்த கோடை மழையை அடுத்து இந்தப் பாதீனியங்கள் மீளவும் முளைத்து விவசாய நடவடிக்கைகளை ஆக்கிரமித்து காணப்படுகின்றன.

குடாநாட்டின் அநேகமான இடங்களில் இந்தப் பாதீனியங்கள் பெருகி தற்போது பூத்துக்காணப்படுகின்றன. இந்தப் பூ காய்த்து காற்றால் பரவி விடும் என்றும் மழைபெய்யும் பட்சத்தில் மீளவும் இவ்விதைகளில் இருந்து பாதீனியங்கள் பெருகும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இதற்காகவே இந்தப் பாதீனியங்கள் பூப்பதற்கு முன்பே அழிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். (ற-17)

## துப்பாக்கிச் சூட்டில் யானை சாவு

வவுனியா, ஜூலை 4

வவுனியா நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் இம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், ஆண் யானையொன்று உயிரிழந்துள்ளது என்று நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிராமங்களில் சட்டவிரோதமாக பயன்படுத்தப்படும் துப்பாக்கியால் இரண்டு நாள்களுக்கு முன்னர் இந்த யானை சுடப்பட்டிருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஒலுமடு வயல்வெளிப்பகுதியில் இந்த யானை நேற்றுமுன்தினம் உயிரிழந்து கிடப்பதைக் கண்ட பிரதேச மக்கள், பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து குறித்த இடத்திற்கு பொலிஸார் விரைந்துள்ளனர்.

இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தவுள்ளனர்.

ஒலுமடு பகுதியில் யானைகள் உட்புகுந்து மக்களின் விளைச்சலை நாசப்படுத்துவதாக மக்கள் தொடர்ந்து புகார் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், யானைத் தொல்லையால் கிராம மக்கள் இக்காரியத்தைச் செய்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. (ற)

## அதிபர் இடமாற்றத்தை கண்டித்து மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு



மன்னார், ஜூலை 4

மடு கல்வி வலயத்திற்குற்பட்ட மன்-அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அதிபரை இடமாற்றியதை கண்டித்து குறித்த பாடசாலை மாணவர்கள் நேற்று பாடசாலைக்குச் செல்லாது புறக்கணித்துள்ளனர்.

இதுகுறித்துப் பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த அதிபரின் இடமாற்றம் பாடசாலை மாணவர்களுக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளது. குறித்த அதிபரின் இடமாற்றத்தை நிறுத்தக் கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் அறிவித்தல் வழங்கினோம்.

எனினும், இதுவரையில் எது வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் நேற்றுமுன் தினம் காலை மடு வலயக்கல்வி பணிமனையில் இருந்து உயர் அதிகாரிகள் பாடசாலைக்கு வந்து அதிபரின் இடமாற்றக்கடிதத்தை அவரது கையிலே ஒப்படைத்தனர்.

காலை 9.30 மணியளவில் பாடசாலை அதிபரிடம் இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்டது. சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் காலை 10.30 மணியளவில் புதிய அதிபர் பாடசாலைக்கு வந்து கையொப்பமிட்டார்.

இது ஒரு சதியாகவே நாங்கள் கருதுகின்றோம். எமது பாடசாலையின் முன்னேற்றத்துக்கு இவ் இடமாற்றம் தடையாக இருக்கின்றது. இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் கதைத்து எது வித பலனும் கிடைக்காத நிலை யிலே மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.- என்றார்

குறித்த பாடசாலைக்கு நேற்று மாணவர்கள் எவரும் செல்லவில்லை. ஆசிரியர்கள் மாத்திரமே பாடசாலைக்குச் சென்றிருந்தனர். இந்த நிலையில் வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீகுணசீலன் குறித்த பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார். (ற-56)

## ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள் திறந்து வைப்பு



மன்னார், ஜூலை 4

வடமாகாணத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள் மற்றும் தாய்,சேய் மருத்துவ நிலையம் என்பன நேற்று வெள்ளிக்கிழமை காலை வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தலைமையில் மாகாண சபை உறுப்பினர்கள் இணைந்து திறந்து வைத்தனர். அதேவேளை, மன்னார் தாராபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட குறித்த நிலையத்தை திறக்க அக்கிராம பெண்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

வட மாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாண்டாரவெளி ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம், 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட உயிலங்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம், 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட எருக்கலம்பிட்டி தாய், சேய் மருத்துவ நிலையம் என்பனவே வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தலைமையில் இடம் பெற்ற குறித்த திறப்பு விழா நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், சட்டத்தரணி எஸ். பிரிமூஸ் சிறாய்வா, அயூப் அஸ்மின், றிப்கான் பதியுதீன் மற்றும் மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மாட்டீன் டயேஸ், வடமாகாண சுகாதார சுதேச மருத்துவத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். ஆர்.ஜுட், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி அன்ரன் சிசில் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக 11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் தாராபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை திறக்க வட மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தலைமையில் வடமாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் சென்றிருந்தனர். ஆயினும் அங்கு ஒன்று கூடிய அக்கிராம பெண்கள் குறித்த நிலையத்தை திறக்க எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அமைச்சர் றிஸாட் பதியுதீன் அவர்களின் முயற்சியால் குறித்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் றிஸாட் பதியுதீன் இல்லாமல் குறித்த நிலையத்தை திறக்க அனுமதிக்க மாட்டோம் என அங்கு கூடிய அக்கிராம பெண்கள் வட மாகாண சுகாதார அமைச்சர் பா. சத்தியலிங்கம் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரிடம் தெரிவித்தனர்.

அதையடுத்து அவர்கள் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ற வகையிலே திறக்கப்படும் என கூறி அங்கிருந்து அகன்றனர். (ற-56)

# மது ஒழிப்பு வாரத்தையொட்டி விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

## மன்னாரில் முன்னெடுப்பு







மன்னார், ஜூலை 4

மன்னார் மாவட்ட மதுவரிதிணைக் களத்தின் ஏற்பாட்டில் மது ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் மதுவரித் திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி என்.நந்தகுமார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளில் கடந்த 3 தினங்களாக மருதமடு ஆலயச் சுற்றாடலில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆலயத்தின் வாயிலில் உள்நுழையும் வாகன சாரதிகள் மற்றும் பக்தர்களுக்கும் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மதுபோதைக்கு அடிமையானர்வர்களை மீட்கும் முகமாக உள ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் சிறுவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் ஆலய சுற்றாடலில் வைத்து வழங்கப்பட்டது.

திருவிழாக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 4 வர்த்தகர்களுக்கு எதிராகவும், அரச சாரயத்தை அனுமதி பெறாமல் ஆலய சுற்றாடலில் வைத்து விற்பனை செய்ய 4 பேருக்கு எதிராகவும் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்வுள்ளது. (ஐ)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு 115 ஆசனங்கள்

## அடித்துக் கூறுகின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல



கொழும்பு, ஜூலை 4

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ.தே.க. 115 ஆசனங்களை பெற்று வெற்றி பெறுவது உறுதியாகும். மஹிந்த அணிக்கு வெறுமனே 55 ஆசனங்களே கிடைக்கும். மஹிந்த அன்றும் தோல்வியடைந்தார்; இன்றும் தோல்வியடைவார்; இதுதான் கசப்பான உண்மையாகும். ஐ.தே.க.வின் யானைச் சின்னத்தில் போட்டியிட விரும்பினால் எம்மோடு எவரும் வந்து இணையலாம்– இவ்வாறு பகிரங்க் அறிவிப்பு விடுத்தார் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மஹிந்த ராஜபக்ஷ அன்றும் தோல்வியடைந்தார், இன்றும் தோல்வியடையத்தான் போகின்றார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே .க. 115 ஆசனங்களைப் பெற்று வெற்றி பெறும். ஆனால் 75 க்கு மேல் ஆசனங்களை வெற்றி கொள்வோம் என கனவு கண்ட மஹிந்தவுக்கு அவரது அணியினருக்கும் 55 ஆசனங்களே கிடைக்கும். இது தான் கசப்பான உண்மையாகும்.

முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர் நாட்டில் ஏதாவது திட்டமிட்ட அபிவிருத்திகள், பொரு ளாதர முன்னேற்றங்கள் இடம் பெற்றனவா? வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதா? இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதா? எதுவுமே இடம் பெறவில்லை.

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு பிறகு ஸ்திரமான ஆட்சியை அமைப்போம். 1977 ஆம் ஆண்டு யுகத்தை மீண்டும் நாட்டில் ஏற்படுத்துவோம் அன்று மகாவலி அபிவிருத்தித் திட்டம், ஆடை உற்பத்தி தொழிற்சாலைகள் உட்பட நாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினோம்.

அதே போன்றதொரு யுகத்தை ஏற்படுத்துவோம். கடந்த ஆட்சியாளர்கள் கடன் வாங்கி பல திட்டங்களை முன்னெடுத்துள்ளனர். நாம் வெளிநாடுகளின் நிதியுதவியுடனேயே அனைத்தையும் முன்னெடுத் தோம். நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை மேற்குலக நாடுகள் காத்திருக்கின்றன.

ஐ.தே.க. வெற்றி பெற்று ஆட்சியமைத்ததும் மேற்குலக நாடுகள் எமக்கு நிதியுதவிகளை வழங்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இன்று மத்திய கொள்கை கிடையாது. இனவாதத்தை முதலீடாக வைத்துக் கொண்டே அரசியல் செய்கின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்டும் சுதந்திரக் கட்சி பாடம் படிக்கவில்லை இன்னமும் இனவாதக் கொள்கையையே கடைப்பிடிக்கின்றது. தேசப்பற்று தொடர்பாக பேசும் மஹிந்தவினதும் அவரது அணியினதும் ஆட்சியில் போரை முடித்த சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அத்தோடு போரை முடிக்க பங்களிப்பு செய்த 9 மேஜர் ஜெனரல்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டது. இதுவா அவர்களது தேசப்பற்று எனக்கேட்க விரும்புகின்றேன். எம்மோடு இத்தேர்தலில் எவரும் வந்து இணையலாம். ஆனால் ஐ.தே.க.யானைச் சின்னத்தில் தான் போட்டி யிட வேண்டும்.

தேர்தலுக்கு பின்னர் தேசிய அரசு உருவாகும். மஹிந்தவும் அவரது அணியினரும் கிணற்றுத் தவளைகளைப் போன்று செயற்படுகின்றனர். அதிலிருந்து வெளியே வர வேண்டும் நவீன உலகைப் பார்க்க வேண்டும். – என்றார். (ற)

# மஹிந்தவை மட்டும் நம்பிப் பயனில்லை

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பலப்படுத்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவு அவசியமானதே. ஆனால் மஹிந்தவை மாத்திரம் நம்பி களமிறங்கினால் தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் துணை அதற்கு அவசியம்.– இவ்வாறு சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மிகவும் அவசியமான நபர்களேயாவர். ஆனால் அவர்களை மட்டும் நம்பி களம் இறங்கினால் கட்சியை வெற்றிப் பாதையில் கொண்டுசெல்ல முடியாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் துணை இல்லாது கட்சியை மீட்டெடுப்பது கடினமான விடயமாகும். அதேபோல் அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவைப் பெற்ற ஒரு நபரையே பிரதமர் வேட்பாளராக்க வேண்டும். எவருடைய தனிப்பட்ட விருப்பத்தையும் கவனத்தில் கொண்டால் கட்சி சிதைவடையும் நிலைமை ஏற்பட்டுவிடும். இன்று கட்சிக்கு வெளியில் பலர் தமது தனிப்பட்ட கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். வெளி இடங்களில் தனியாக செய்தியாளர் சந்திப்புகளை நடத்தி கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஆனால் அவை எதுவும் கட்சியின் சொந்தக் கருத்தாகாது.

கட்சிக்கு என்று மத்திய குழு உள்ளது. கட்சியின் மத்திய குழுவில் ஒரு விடயம் கலந்தாலோசிக்கப்பட்டு இறுதியாக பொதுவான முடிவு எடுக்கப்படும். அதையே அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். – என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியதாவது:–

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது பலமானதும் யாராலும் பிளவுபடுத்த முடியாததுமான கட்சியாகும். ஒவ்வொரு கட்சியும் தேர்தலில் தோற்றவுடன் பிளவுபட்ட வரலாற்றை நாம் கண்டுள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலங்களில் எட்டுத் தடவைகள் பிளவுபட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி இரண்டு தடவைகள் பிளவுபட்டுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் கூட பிளவுகளை எதிர்கொண்டுள்ளன. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அவ்வாறான பிளவுகள் இதுவரையில் ஏற்படவில்லை.

இம்முறை நாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பரப்புரைக்கு எதிராகவே செயற்பட்டோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை பலப்படுத்தும் நோக்கத்தில் நாம் களமிறங்கினோம். ஆனால் நாம் தோல்வியை எதிர்கொண்டும் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் மீண்டும் கட் சியை ஒன்றிணைத்து பலமான கட்சியாக கூட்டுச் சேர்ந்துள்ளோம். கட்சியின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே தொடர்ந்து இந்தக் கட்சியை பலமான கட்சியாக இட்டுச் செல்வதே எமது நோக்க மாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இரண்டு தடவைகள் நாம் ஜனாதிபதியாக்கியுள்ளோம். அதேபோல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக்கியுள்ளோம்.

அப்போதெல்லாம் கட்சியின் ஒன்றுமை மற்றும் நாட்டின் நன்மையை மட்டுமே கவனத்தில் கொண்டு தீர்மானம் எடுத்தோம். ஆனால் இம்முறை மைத்திரிபால சிறிசேனவுக்கு எமது ஆதரவு இருக்கவில்லை. அவருக்கு எதிராகவே நாம் செயற்பட்டோம். ஆனால் அவர் இன்று கட்சியை ஒன்றிணைத்து மீண்டும் ஒன்றாக முன்செல்ல தயாராக உள்ளார். ஆகவே அதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேர்தலின் பின்னர் நாம் ஜனாதிபதியுடன் கைகோர்த்து செயற்பட ஆரம்பித்து விட்டோம். இதில் முன்னைய தலைவர்கள் இருவரையும் துணைக்கு அழைக்கின்றோம். இவர்களது துணை இல்லாது கட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

அதேபோல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களின் ஆதரவை முழுமையாக பெற்றுள்ளார். அவரது துணை மிகவும் அவசியமானதாகும். அதை யாரும் நிராகரிக்க முடியாது. எனவே இம்முறை பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பல இளம் உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதெனக் என்று கட்சி தீர்மானித்துள்ளது. அதேபோல் மிகவும் பலமானதொரு அணியைத் தயார்படுத்தி தேர்தலில் களமிறக்க நாம் தயாராக உள்ளோம். இம்முறை தேர்தலில் எமக்கு மிகப்பெரிய வெற்றியை தக்கவைத்துக்கொள்ள முடியும்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் அணியில் இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு , மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயகக் கட்சி ஆகிய முக்கிய கட்சிகள் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளன. ஆகவே அவர்களது வாக்கு வங்கியில் பிளவுகள் ஏற்பட ஆரம்பித்துவிட்டது. எனவே நாம் மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பலமான அரசை அமைப்போம். – என்றார். (ற)

# பிரதமர் வேட்பாளராக சமல்? மறுக்கிறார் சுசில் பிரேமஜயந்த

## திங்களன்று உண்மை தெரியவரும் என்கிறார்

கொழும்பு, ஜூலை 4

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக சமல் ராஜபக்ஷவை நியமிப் பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்ட கருத்து முற்றிலும் தவறாகும். கட்சியின் இரகசியங்கள் அனைவருக்கும் தெரியாது. நாட்டு மக்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இது குறித்து திங்களன்று உண்மைகள் வெளி வரும். – இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மெதமுலனவில் ஆற்றிய உரைஎமது மனங்களை கவலையுற வைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடும் நோக்குடன் அனைத்துக் கட்சிகளின் செயலாளர்களையும் நேற்று முன்தினம் தேர்தல் செயலகத்தில் வைத்து ஆணையாளர் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களின் கேள் விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக சமல் ராஜபக்ஷ போட்டியிடப் போவதாக நேற்று சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது தெரிவிக்கப்பட்ட கருத்து உண்மைக்கு புறம்பானவை யாகும். தேர்தலின்போது பிரதமர் வேட்பாளர்கள் எவரும் நியமிக்கப்பட்டவில்லை என்றே ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்திருந்தது. இந்த நிலையில் எவ்வாறு பிரதமர் வேட்பாளராக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை நியமிப்பதற்கு ஆலோசிக்கப்படுவதாக கூற முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உள்ளக இரகசியங்கள் எவருக்கும் தெரிவதற்கு வாய்ப்புகள் இல்லை. தற்போது கட்சியின் வேட்புமனு தெரிவுக்குழு கூடியுள்ளது. கட்சியில் நேர்முகப்பரீட்சை தற்போது மும்முரமாக நடைப்பெற்று வருகிறது. எனவே இதன் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி எந்தக் கட்சியில் போட்டியிடுவார் என்பது வெகுவிரைவில் தெரியவரும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான பேச்சு மிகவும் சாதகமாக நிறைவு பெற்றுள்ளது. கட்சியின் ஒற்றுமைக் குழுவின் அறிக்கையும் தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்தக் கட்சியில் போட்டியிடுவார் என்பதனையும் என்னுடைய நிலைப்பாடு என்ன என்பதனையும் நீங்கள் அடுத்த திங்கட்கிழமையன்றோ அல்லது செவ்வாய்க்கிழமையன்றோ அறிந்து கொள்வீர்கள்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மெதமுலனவில் உள்ள அவரது வாசஸ்தல வளாகத்தில் ஆற்றிய உரை எமக்கு மிகவும் வருத்தத்தையும் தந்துள்ளது. எனவே அந்த வார்த்தைகளின் பிரதிபயனை நாட்டு மக்கள் விரைவில் கண்டுக் கொள்வார்கள். அத்தோடு நாடாளுமன்ற தேர்தல் நீதியானதும் நியாயமானதுமாக நடத்தப்பட வேண்டும். எனவே நீதியான தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒத்தாசையாக இருக்கும். – என்றார். (ற)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் தோன்றும் நல்ல எண்ணங்களைச் செயற்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதுமையைப் புகுத்தி, இலாபம் காண்பீர்கள். பூர்வீகச் சொத்துக் கிடைக்க யோகமுண்டு. உறவினர் வருகையால், குடும்ப மகிழ்ச்சி வளரும்.

**இடபம்:** உங்கள் மனதில் இனம்புரியாத கவலை ஏற்படலாம். அக்கம் பக்கத்தவரிடம் குடும்ப விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் உயரும். உறவினர் ஒத்துழைப்பு, மனதுக்கு ஆறுதல் அளிக்கும்.

**மிதுனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கூடுதலாக வரும். பெண்கள் ஆடை, அணிகலன் வாங்கி மகிழ்வர். பிள்ளைகளின் செயல்பாடு, பெருமையளிக்கும்.

**கடகம்:** எண்ணத்தில் நேர்மை குணம் பிரதிபலிக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைவதால், இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். அரசு வகையில், எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிங்கம்:** முக்கிய பொறுப்பை, பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். திடீர்ச் செலவால், சேமிப்புக் கரையும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது நல்லது.

**கன்னி:** பெருந்தன்மை மிக்கவராக நடந்து கொள்வீர்கள். தொழில் வளர்ச்சிக்கு, கடந்த கால அனுபவம் பயன்படும். குடும்பத்தில் திடீர்ச் செலவு ஏற்படலாம். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது அவசியம்.

**துலாம்:** எவரிடமும் உயர்வு, தாழ்வு பாராட்டாமல் பழகுவீர்கள். புதிய நண்பர்கள் காட்டும் அன்பு, மனதை நெகிழ வைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை எட்டுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**விருச்சிகம்:** அனைவரின் அன்புக்கும் உரியவராகத் திகழ்வீர்கள். தீமையான சூழ்நிலையும், நன்மை தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி, விரைவில் வந்து சேரும்.

**தனுசு:** தன்மானத்துக்குச் சோதனை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், நடைமுறைச் செலவு கூடும். உடல்நலனில் அக்கறை காட்டத் தொடங்குவீர்கள்

**மகரம்:** யாருக்கும் வாக்குறுதி அளிப்பதைத் தவிர்க்கவும். தொழில் வ்ளர்ச்சிக்கு, கடந்த கால அனுபவம் துணை நிற்கும். பிள்ளைகளுக்காக, ஆடம்பரச் செலவு செய்ய நேரிடும். மனைவியின் பேச்சுக்கு மதிப்பளிப்பது நல்லது.

**கும்பம்:** மனதில் புதிய சிந்தனை பிறக்கும். சவால்களை வென்று, சாதனை புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெற்றோர் விருப்பம் அறிந்து செயல்படுவீர்கள்.

**மீனம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராகத் திகழ்வீர்கள். தொழிலில், உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். மாணவர்கள், அக்கறையுடன் படிப்பர்.

# என்ன கொடுமை சார் !




இறந்த தாத்தாவின் அருகில் அமர்ந்து கொண்டு செல்பி எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்ட பேரனின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவமானது சவுதி அரேபியாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நடந்துள்ளது.

இந்தப் புகைப்படத்தை எடுத்துக் கொண்ட அந்தப் பேரன், சமூக வலைத் தளத்தில் அதனை பதிவேற்றம் செய்து பிரியா விடை தாத்தா என குறிப்பிட்டுள்ளார்.

மதினாவை சேர்ந்த சுகாதார அதிகாரிகள், இந்தப் புகைப்படத்தை வைத்து எந்த பகுதியில் உள்ள மருத்துவமனையில் இருந்து அது எடுக்கப்பட்டது என்பது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

குறித்த இளைஞரின் பொறுப்பற்ற நடத்தை மற்றும் பொது ஒழுக்க விதி மீறலுக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

செல்பி எனும் மோகம் மனித சமூகத்தை ஆட்டுவித்து வருவது குறிப்பிடத்தக்கது. அதற்காக இப்படியெல்லாமா செல்பி எடுப்பாங்க !



# இதுக்கு நீங்க சரிப்பட்டு வரமாட்டீங்க

'திரிஷா இல்லனா நயன்தாரா' படத்தின் முத்தக் காட்சிக்கு 36 தடவை டேக் வாங்கி இருக்கிறார் ஜி.வி.பிரகாஷ்.

இந்தப் படத்தில் ஜி.வி.பிரகாஷ் மற்றும் மனிஷா யாதவ் சம்பந்தப்பட்ட முத்தக் காட்சி ஒன்றைப் படமாக்கி இருக்கிறார்கள். இந்தக் காட்சிக்கு மட்டும் 36 டேக் வாங்கியிருக்கிறார் ஜி.வி.பிரகாஷ்.

மனிஷா யாதவ் ஒன்றுமே சொல்லாமல் கூலாக இருக்க, ஜி.வி.பிரகாஷ் மிகவும் பதற்றமாகி விட்டாராம். இந்த இருவருடனும் இணைந்து ஜோதிலட்சுமியும் இக்காட்சியில் நடித்திருக்கிறார்.

இறுதியாக டேக் ஓ.கே ஆனவுடன் இயக்குநர் ஆதிக், ஒரு வழியாக சரியாக முத்தம் கொடுத்து விட்டார் ஜி.வி. பிரகாஷ் என்று சந்தோஷப்பட்டு இருக்கிறார்.



# முத்தழகு பொலிஸ் உடையில்

முத்தழகு பாத்திரமேற்று நடித்ததன் மூலம் பிரபல்யமான பிரியா மணி தெலுங்கு – கன்னடத்தில் எடுக்கப்பட்டு வரும் படத்தில் பிரியாமணி முதன்முறையாக பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். நடிப்பில் அசத்தினாலும் பிரியாமணிக்கு கொலிவூட் டில் வாய்ப்பு இல்லை. அவரும் எனக்கு தமிழ் படங்களில் நடிக்க ஆசையாக உள்ளது, நல்ல கதாபாத்திரத்திற்காக காத்திருக்கிறேன் என்று அவ்வப்போது கூறி வருகிறார். ஆனால் அவருக்கு வாய்ப்பு மட்டும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அவர் கன்னடப் படங்களில் கவனம் செலுத்திவருகிறார். கன்னடப்படங்களில் பிரியாமணி கவர்ச்சியாக நடித்து வருகிறார். அவர் தற்போது இசையமைப்பாளரும், இயக்குநருமான ஆர்.பி. பட்னாயக்கின் படத்தில் நடித்துவருகிறார். இன்னும் பெயர் வைக்கப்படாத இந்தப்படம் தெலுங்கு–கன்னட மொழிகளில் ரிலீஸ் செய்யப்படுகிறது. முதன் முதலாக பிரியாமணி பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். இது குறித்து பட்னாயக் கூறுகையில், படத்தில் பிரியா சக்திவாய்ந்த சிபிஐ அதிகாரியாக நடிக்கிறார். அவரைக் கவர்ச்சியாகவே பார்த்தவர்களுக்கு இது ஓர் இன்ப அதிர்ச்சியாக இருக்கும். படத்தில் நிறைய 'த்ரில்' இருக்கும். கர்தா வியம் படத்தில் வரும் விஜயசாந் தியை மக்களுக்கு நினைவூட்டுவார் பிரியாமணி என்றார்.

# கொலையாளி ரோபோ

மனிதர்களுக்கு உதவிகரமாக இருந்து வரும் ரோபோ, முதன் முதலாக மனிதனைக் கொலை செய்திருப்பது விஞ்ஞானிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

ஜேர்மனியின் பானடால் பகுதியில் பிரபல கார் நிறுவனத்துக்கு சொந்தமான தொழிற்சாலையொன்று இயங்கி வருகிறது. இங்கு கார்களின் உதிரிப் பாகங்களை ஒன்றிணைக்கும் பிரிவில், தொழிலாளர்களுக்கு உதவியாக ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலையில் கடந்த திங்கட்கிழமை வழக்கம் போல பணிகள் நடந்து வந்தன.

அப்போது மிகப்பெரிய இயந்திரங்களைக் கையாளும் பிரிவில் இயங்கி வந்த ரோபோ ஒன்று திடீரென, அங்கிருந்த ஒரு 22 வயது ஊழியரை கவ்விப் பிடித்து அருகில் இருந்த உலோகத் தகட்டின் மீது வைத்து நசுக்கியது. இதில் அந்த ஊழியர் பரிதாபமாக இறந்து போனார். இது அருகில் இருந்த ஊழியர்களுக்கு மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தேவையற்ற உதிரிப்பாகங்களை எடுத்து நசுக்கும் அந்த ரோபோ, மனித தவறினாலேயே ஊழியரை கொன்றுவிட்டது என்றும், இதற்காக யார் மீது வழக்குப் போடுவது என்று தெரியாது அதிகாரிகள் குழம்பிப் போயுள்ளனர்.

## ஆவணக் காப்பகத்தின் நிகழ்ச்சித் தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 4
இலங்கை ஆவணக் காப்பகம் ஒழுங்கமைத்துள்ள நிகழ்ச்சித் தொடரின் 20ஆவது உரைநிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் 'மரபு, காலம், நிலை, மாற்றம்' எனும் தலைப்பில் பா.அகிலன்உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வு இல. 199 கோவில் வீதியில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் நடைபெறவுள்ளதாகவும் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–10)

## வழித்தட அனுமதியின்றி பயணிகளை ஏற்றிய சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 4
வழித்தட அனுமதியின்றி பயணிகளை ஏற்றி வந்த வாகனச் சாரதியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் வாகனச் சாரதிக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 8 ஆயிரத்து 500 ரூபாவும், தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 3 ஆயிரம் ரூபாவும், கறுப்புக் கண்ணாடி பொருத்திய தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.(ற–9)

## கஞ்சா கொடுத்து வாள் வாங்கியவர் சிக்கினார்

தென்மராட்சி, ஜூலை 4
போதைப் பொருளான கஞ்சா கொடுத்து வீச்சு அரிவாள் வாங்கிய ஒருவரைக் கைது செய்ததுடன் குறித்த வீச்சு அரிவாளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.
சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நுணாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞரை பொலிஸார் கடந்த புதன் கிழமை இரவு கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையையடுத்து போது கோப்பாய் கைதடி மட்டுவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மேலும் ஐந்து பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் விசாரணை செய்த போது, அவர்களில் ஒருவர் கஞ்சாவைக் கொடுத்து வீச்சு அரிவாள் ஒன்றை வாங்கியதை ஒப்புக் கொண்டதுடன் அதனை பொலிஸாரிடம் ஒப்படைத்துமுள்ளார். (ற–9)

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

தென்மராட்சி, ஜூலை 4
கொடிகாமம் பிரதேச முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா அண்மையில் கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.
கச்சாய் வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சு.புஸ்பராணி தலைமையில் நடைபெற்ற விழாவில் கச்சாய், கொடிகாமம், வரணி ஆகிய குடும்ப முன்பள்ளிகளின் சிறார்கள் பங்குபற்றியிருந்தனர்.
விழாவுக்கு முதன்மை விருந்தினராக வித்தியாலய அதிபர் திருமதி தி.இரஞ்சிதமலரும், சிறப்பு விருந்தினராக இலங்கை மனித உரிமைகள் இயக்கத்தின் வடக்கு மாகாணச் செயலாளர் கா.இராசதுரையும், கௌரவ விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்தின் மாவட்டத் தலைவர்களான லயன் ச.செந்தூரன், லயன் த.ரவீந்திரன் மற்றும் கிராம அலுவலர் கே.பரமானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற–9)

## வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.
முக்கிய ஆலயங்களின் வருடாந்த மஹோற்சவங்கள் ஆரம்பமாகியுள்ளதை அடுத்து வாழைப்பழத்தின் பாவனை அதிகரித்துள்ளது. அதனைவிட கடந்த மாதத்தில் காற்றுடன் பெய்த மழையினாலும் வாழைமரங்கள் பாதிக்கப்பட்டன. அனேகமான வாழைத் தோட்டங்களில் வாழைகள் குலைகளுடன் பாறி விழுந்துள்ளன. இதனை அடுத்து வாழைப்பழத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.
கதலிப்பழம் கிலோ 60 ரூபாவாகவும் இதரைப்பழம் கிலோ 50 ரூபாவாகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. (ற–17)


**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசனி அம்மன்**



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் ஜூலை மாதம் 04,05,06 ஆம் திகதிகளில் ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

பூசை நேரம்:
முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்
தொடர்பு: 021 221 9127, 077 801 2226
(61638) (5.7)

**NATIONS CAMPUS - JAFFNA**
www.idmedu.lk | www.facebook.com/idmnc.j | www.facebook.com/idmnc

**VACANCIES**

**Assistant Lecturer-[Business Management] (Male/Female) - 02**
- Business Management / Business Administration சார்ந்த துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- மேற்படி துறையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**Designer & Tutor (Male/Female) - 02**
- Adobe Photoshop, Adobe Illustrator, Adobe InDesign, Corel Draw, Adobe Flash, Adobe Fireworks, Adobe Dreamweaver, Autodesk 3Ds Max, Adobe Premiere, Adobe After Effects, Autodesk Maya, Adobe Audition ஆகிய மென்பொருட்களில் ஏதேனும் 06 மென்பொருட்களில் பரிட்சயமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரிகள் முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட தங்கள் சுயவிபரக் கோவையை 10.07.2015 ற்கு முன்னதாக கீழ் உள்ள தபால் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்கும் பதவியை விபரமாக (Subject Headings) குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

# 216, Nawalar Road, Jaffna.
E-mail : idmnc.jaffna@gmail.com
TEL : 021 222 9901


## சாவகச்சேரி நகராட்சிமன்றம் கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 17.07.2015 ஆம் திகதி பி.ப.2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதேதினம் பி.ப.2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு இக்ராட் 9 அல்லது அதற்கு மேல் உள்ள ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோர விரும்பினால் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி கேள்விப் படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலைவிவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT+NBT) |
|---|---|---|---|
| 01 | வீரபத்திரர் வீதி, மண்டுவில். | 12,100.000 | 2000+VAT11%+ NBT2% |

கேள்விப் பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் 15.07.2015 ஆம் திகதி பி.ப. 2.30 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப் பிரதி தவிசாளர், நகராட்சி மன்றம் சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்படவேண்டும். இணைப் பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி, யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கு (17.07.2015) ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சிமன்றம் அலுவலகம்.
சாவகச்சேரி.
03.07.2015 (சி.16613) (45.7.3)

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சி மன்றம்,சாவகச்சேரி.


**Majestic**
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில் — CEYLON THEATRES



ABCD 2
any body can dance
(Hindi) with English Subtitles
3D
பிளட்டினம 10.30 / 2.30 / 6.30



"ஜெயம்" ரவி,
ஹன்சிகா மோத்வானி நடித்த
ரோமியோ ஜூலியட்
சில்வர் 10.15 / 2.15 / 6.15



ஆதி
நிக்கி கல்ராணி நடித்த
யாகாவாராயினும் நாகாக்க
ப்ரொன்ஸ 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.com

**வீட்டுடன் காணி தேவை**
மானிப்பாய்,உடுவில்,
மருதனார்மடம் வீதியில் வீட்டுடன்
2 பரப்புக் காணி தேவை.
தொடர்பு: 0773730695
(61499) (3.7)

**வீடு/Rooms வாடகைக்குத் தேவை**
யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி பிரதேசங்களில் குறுகிய காலத்திற்கு வீடு/Rooms வாடகைக் குத்தேவை. (தனியாக,Annex)
தொடர்பு: 077 005 1796 (61641)(9.3)

**சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்குண்டு**
சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(56048) (4.3.6) தொடர்பு: 077 614 6434

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி நல்லூர் வீதியில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(55702)(12.3.7) தொடர்பு: 077 614 6434

**வீடு விற்பனைக்கு**
கடுக்காயடி வீதி, நல்லூரில் 2பரப்புக் காணியுடன் 5 அறைகளுடன் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 802 5788, 077 919 5868
(61648) (9.3)

**CAR FOR SALE**
ISUZU GEMINI, Diesel, 1650cc, 32 - xxxx, A/c, Power Steering, Power Shutters, Power Breakes, Alloy wheels, MintConditions.
Contact: 077 463 6767
(61640)(9.3)

**வேலையாள்கள் தேவை**
சங்கென் நிறுவன்த்தின் - யாழ்ப்பாணம், கைதடி,முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு- எலக்ரீசியன்ஸ், பிளம்பர்ஸ், பெயின்ரர்ஸ் தேவை
தொடர்பு:
071 534 9942, 071 238 7076
077 762 6241
(c 16283)(3.5.7)

**தொழிலாளர்கள் தேவை**
சங்கென் நிறுவனத்தின் கல் அரியும் ஆலைக்கு தகுந்த தொழிலாளர்கள் தேவை. (நிரந்தரம் / தற்காலிகம் )
தொடர்பு: 21/1, கண்டி வீதி. நாவற்குழி.
021 320 2868, 077 248 7772

**மணமகள்கள் தேவை**
- 1985 இல் பிறந்த 10இல் சூரியனும் செவ்வாயும் 27½ பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு இஞ்சினியர் அல்லது விரிவுரையாளர் மணமகள் தேவை.
- 1985 இல் பிறந்த 2இல் செவ்வாய் 42பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் இஞ்சினியர் C.I.M.A முடித்த மணமகள் தேவை.
- 1982 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 19¾ பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு BSc இற்கு மேல் படித்த மணமகள் தேவை.
- 1983 இல் பிறந்த கத்தோலிக்க வேதமுடைய மிருகவைத்தியர் டாக்டருக்கு பட்டதாரிமணமகள் தேவை.
- 1986 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 12¾ பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 1982 இல் பிறப்பு 7 இல் செவ்வாய் 65½ பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு BSc இற்கு மேல் படித்த மணமகள் தேவை.
- 1982 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய சைவபோசன டாக்டர் மணமகனுக்கு சைவபோசன பட்டதாரி மணமகள் தேவை.
- 1982 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 21 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
- 1980 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் C.I.M.A முடித்த மணமகள் தேவை.

தொடர்பு : காலக்கண்ணன் திருமணசேவை, இல 62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, சுடமாவடி.
T.P : 077 607 0862

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்லத்துரை
தில்லையம்மா

பிறப்பு
17.09.1937

இறப்பு
03.06.2015


மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவரும் போற்ற வாழ்ந்து காட்டிய அன்னையே - நாங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர் ஒளிமளமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு அணைந்தும் அணையாத தீபமாய் என்றும் எங்களின் இதயத்தில் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் குலவிளக்கே - அம்மா நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப்பிரியாது.

இல 17/3 முள்ளி வீதி,
அரியாலை யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவு தினம்

அமரர்
J.S.கிறிஸ்ததாஸ் JP
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



மண்ணில்
18.08.1933

விண்ணில்
04.07.2005

**பெயர் சொல்ல நின்றவரே**

எத்தனை புதுமைகள் காட்டிய அப்பாவே!
என்னென்ன செயல்களிலும் பெயர் சொல்ல நின்றவரே!
விந்தைகள் பலவற்றின் வேராகி வாழ்ந்தவரே!
விளம்பர அறிவிப்புக்களில் நேரத்தை சொல்லிட நித்தமும்
கடைப்பிடித்த உங்கள் "உடல்மொழியை"
நல்ல தமிழ் ஊடகங்கள் இன்றும் பின்பற்றுகின்றன!
பத்தாண்டுகள் பறந்தோடியும் மாறாத நினைவுகளோடு
பெருமையாகவும் இருக்கின்றோம்! உங்கள் வழி தொடர்கின்றோம்.

தங்கமால்
அல்வாய் தெற்கு அல்வாய்.
T.P. 021 226 3921

கி.நேசமணி (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
05.06.1933

ஆண்டவன் அடியில்
10.07.2009

திதி: திருதியை (04.07.2015)

அமரர் **ஆறுமுகம் சங்கரப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற மின்சாரசபை உத்தியோகத்தர்)

ஆண்டுகள் ஆறு சென்றாலும் - அப்பா!ஆறாது எம் துயரம்
நாள்கள் பல நகர்ந்தாலும் - தினமும்
நீங்காது உங்கள் நினைவுகள்
ஆயிரம் உறவுகள் எமை சூழ்ந்திருந்தாலும் - அப்பா!
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?கோடான கோடி செல்வம்
கொட்டிக் கொடுத்தாலும் - அப்பா?
உங்கள் ஆறுதல் வார்த்தைக்கு சமமாகுமா?
பண்பாய் பரவசமாய் பார்போற்ற
பலவழிகள் காட்டி நின்ற - அப்பாவே!
வழி தெரியாது விழி இன்றி தவிர்ப்பவன் போல
வாடி நாம் நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப்பிரார்த்தனை செய்து கொண்டு
உங்கள் ஆசியை வேண்டி நிற்கும்.

பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(16611)(9.3.7)

குடும்பத்தினர்.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வசாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வசாவிளான் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது புதிய நிர்வாக சபைத்தெரிவும் இடம்பெறவுள்ளது.(ஐ)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
தம்பாப்பிள்ளை
சிந்தாமணி



அன்னையின் மடியில்
05.02.1944

ஆண்டவன் மடியில்
18.06.2011

ஆண்டுகள் நான்கு அகன்றாலும் உங்கள் நினைவுகள் அகலாது தாயே ! அன்பு என்னும் உறைவிடமே அம்மா பாசம் எனும் சுடர்ஒளியே தாயே! உங்கள் குரல் கேட்காதோ எங்கள் காதுகளில் ஏங்கித் தவிக்கின்றோம் அம்மா, எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுடன் உயிர் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

சிந்தாமணி பவனம்
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## நன்றி நவில்கின்றோம்

அமரர் கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசன்




எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு எமது வழிகாட்டி கடந்த 26.06.2015 இறை பதமெய்திய செய்தி கேட்ட நேரம் தொடக்கம் எமக்கு ஆறுதல் வார்த்தை கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் 28.06.2015 அன்று கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையிலும், 29.06.2015 அன்று சாவகச்சேரி இல்லத்திலும் இடம்பெற்ற இறுதி நிகழ்வுகளில் திரளாக வந்து கலந்து கொண்டு எமக்கு தமது அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
சங்கம் ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[16614][3,7,9]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி **பாலசுப்பிரமணியம்**
**கமலாம்பிகை**

கமலமென மலர்ந்தது
11.07.1922

நிமலனடி சேர்ந்தது
04.06.2015

கருவறையில் நீங்கள் சுமந்துபெற்ற
உங்கள் மனாம் என்னையும்
மருமகளாய் நீங்கள் தேர்ந்தெடுத்த
என் மனைவி தன்னையும்
இருவிழிகளாய் இனிது காத்து வாழ வழிகாட்டிய
பெருமாட்டியே! பேசும் தெய்வமே! எங்கள் குலவிளக்கே
பெரும் பெருமான் திருவடியில் பேரமைதி நீங்கள் பெற்று
ஒருமாதம் சென்றாலும் ஓயாது எங்கள் நினைவலைகள்
தாயே எம் நெஞ்சில்

அன்னாரின் இறுதி மரியாதையில் கலந்துகொண்டு, தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்.மேலும் ஏனைய வழிகளில் உதவியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மகன் - பா.தர்மபாலா,
மருமகள் - த.சிவகாமி.
இளவாலை வடக்கு, இளவாலை.

# தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறப்பு விழா

மாங்குளம், ஜூலை 4

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் தொழில் நுட்ப ஆய்வு கூடம் திறப்பு விழா இன்று சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் திருமதி பஞ்சாச்சரம் புஸ்பராணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் கஜதீபன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுகூடத்தைத் திறந்து வைக்கவுள்ளனர். (ற-422)

# அசாத் சாலி ஏமாற்றம்

மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி எதிர்வரும் நாடாளுமன் றத் தேர் தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ள நிலையில் பிரதமரின் முடிவால் ஏமாற்றம டைந்துள்ளதாக தெரியவருகிறது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் ,மத்திய மாகாண சபையின் உறுப்பினராகவும் உள்ள அசாத் சாலி எதிர்வரும் நாடாளு மன்ற தேர்தலின்போது கண்டி மாவட்டத்தில் போட்டியிட முடி வெடுத்திருந்தார்.

இதற்கான வாய்ப்பைத் தனக்கு வழங்குமாறு அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைச் சந்தித்து கேட்டிருந்ததாகக் கூறப் படுகிறது. இதற்குப் பதிலளித்த பிரதமர் ,ஐக் கிய தேசியக் கட்சி சார்பில் கிழக்கில் போட்டியிடுமாறு கடுந்தொனியில் தெரி வித்துள்ளார். பிரதமரின் இந்த முடிவால் அசாத்சாலி மனவருத்தமடைந் துள்ளதுடன் பெரும் ஏமாற்றமும் அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (த-ரி)

# நவீனமாயமாகும் வழுக்கையாறு இந்து மயானம்

மானிப்பாய், ஜூலை 4

வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானம் நவீனமயப்படுத்தப்பட வுள்ளது. முதற் கட்டமாக மயானம் அமைந் துள்ள சூழல் பகுதி சுற்றிவர முட்கம்பி அடித்து எல்லையிட்டு வரையறுக்கப் படவுள்ளது. வழுக்கையாறு இந்து மயான அபிவிருத்தி சங்க தலைவர் கலக் விசுவ நாதன் இதற்கான நடவ டிக்கையை எடுத்துள் ளார்.

வலி.மேற்கு பிரதேச சபையிடம் இருந்து பெறும் நில அளவை வரைபடத்துக்கு அமைவாகவே மயான சூழல் பாதுகாக்கப்படவுள்ளது. (ற-50)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 4

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற எப்.எ.ஓ பிரதிநிதி சு.திரு ஞானசம்பந்தர் கலந்து கொள்வார். (ஐ)

# இதோ வெளிவந்துவிட்டது!

**தமிழ் வாசகர்களின் முகப்பு**




அரசியலோ பாலியலோ கலக்காத
ஒரு பரிணாமப் படைப்பு

**Top 4 in June**

**சுய தொழில் கலைகள்**
சுவையான சிற்றுண்டி வகைகள், தையல், வண்ணக்கோலங்கள்

**இலவசம்**

தரம் 5 சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்

**முஸ்லிம் வாசகர்களின் முகப்பு**




## ஜூலை மாத அறிவுப் பயணத்தில்

04 – நிறைவான அகவாழ்வு மூலம் வன்முறையைத் தவிர்ப்போம்
05 – கணவன், மனைவி, பிள்ளைகளின் ஒத்துழைப்பில் சிறக்கும் குடும்பம்
06 – றம்ழான் நோன்பு உணர்த்திநிற்கும் தேக ஆரோக்கியம்
08 – நீங்கள் நலமா?
10 – உறவுகள் சுகமானது [நெடுந்தொடர்]
13 – எறிப்பந்தாட்டத்தில் சாதிக்கும் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்
14 – பல்கலைக்கழகம் என்பது ஒரு கோயில்; சரியாக வணங்குபவர்கள் சாதிக்க முடியும்
16 – மாண்புறு ரமழான்
16 – மறக்க நினைத்த நினைவுச் சுவடுகள்
17 – ஜோக்ஸ்
18 – தலைவியின் ஏக்கப் பெருமூச்சு
19 – சாதனை படைத்த விண்வெளி வீராங்கனை சுனித்தா வில்லியம்ஸ்
20 – மண்ணிலே பொன்
21 – பாராட்டுப் பெறும் Top 1 நிகழ்வுகள்
22 – விழுமியக் கல்விக்கு முன்னுரிமை வழங்குவோம்
24 – கலைஞர் தேசமானிய கலாரெத்னா ஜுல்பிகா ஷெரீபின் அறிமுகம்...
27 – தற்கொலைக் குண்டு
29 – சித்திரம் பேசுதடி கண்ணம்மா – போட்டி
30 – தன்னை விட்டுவிடுங்கள் என்று அவள் மிகவும் கெஞ்சினாள்...
32 – பொது அறிவுப் போட்டித் தொடர்
33 – "நளீம் லதீப்பின் தனிமனித முயற்சி" வியக்கத்தக்க கலைக் கண்காட்சி
34 – ஆளுமை மேம்படுத்தலில் முன்னணிவகிக்கும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
36 – கடலோடு உறவாடி கடலோடு போராடி...
37 – 55 ஆவது ஆண்டு நிறைவுகாணும் நாஸா விண்வெளி
38 – விவாத திறமையாளராக ஒரு களம்
40 – பெற்றோர் நெருங்கிப் பழகவேண்டிய பருவ வயது பிள்ளைகள்...
42 – இரத்த தொடர்பற்ற ஒரேயொரு தூய உறவு நட்பே!
44 – பவளவிழா காணும் கீனஸ் உலகசாதனை புத்தகம்
46 – இப்படியும் நடக்கின்றது
47 – "ஒளிஅரசி" குறுக்கெழுத்துப் போட்டி
48 – ஒளியுடன் வாழ்வு
49 – பக்கவிளைவற்ற ஒரே மருத்துவம் யோகாசனம்
50 – இம்மாதம் உங்களுக்கு எப்படி?
51 – விதி வலியதா?
52 – நந்தவனப் பூக்கள்
54 – எதிர்ப்பிலேயே வாழுங்கள்!
55 – பெண்களுக்கு ஏன் அழகு அவசியம்?
57 – தன்னம்பிக்கையின் அடையாளச் சின்னம்
58 – திகில்த் தொடர் – இருட்டில் வைத்த குறி
60 – மன அழுத்தத்தைக் குறைப்பது எப்படி?
61 – தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்
65 – நற்பழக்கங்கள் பழகுவோம்...

**இலவச பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

## இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன்

## உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு: 0718 628379 / 011 5737592

வடமாகாண தொடர்புகளுக்கு: 077 6569617 / 077 2772726

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினவிழாவும்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தின விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஒறேற்றர் சுப்பிரணியம் அரங்கில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் கே.மகேந்திரலிங்கம் கலந்து கொள்வார். நிகழ்வில் நிறுவுநர் நினைவுப் பேருரையை கே.ஞானபாஸ்கரன் நிகழ்த்துவார். (ஐ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை, 04
கிளிநொச்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் திருநகர் இளையதம்பி நடராசாவின் 'கரைசேராப் படகுகள்' சிறுகதைத் தொகுதி வெளியீடு இன்று பி.ப. 4 மணிக்கு திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமை வகிக்க வுள்ளார். நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம்கலந்துகொள்ளவுள்ளார். (ற–10)

## ஓராண்டு நினைவஞ்சலி

### விஜயகுமார் லக்ஷன்

தோற்றம் 1996.07.08 மறைவு 2014.06.15



உன் அன்பான பேச்சும்
அழகான திருமுகமும்
எத்தனை ஆண்டுகள்
சென்றாலும்
எம் நினைவை விட்டு
நீங்காது எம்
உடலை விட்டு
உயிர் நீங்கும் வரை
உன் நினைவு எம்
நெஞ்சை
விட்டு நீங்காது.

குடும்பத்தினர்.
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

### செல்வி திருச்செல்வம் மேரி கிளமென்ரா வனிதவதி (வனிதா)



அன்னை மடியில் 28.03.1970 ஆண்டவன் அடியில் 30.06.2015

யாழ். காங்கேசன்துறை ஊறணியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் மேரி கிளமென்ரா வனிதவதி (வனிதா) 30.06.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை திரேசம்மா தம்பதிகள், காலஞ்சென்ற லீனப்பு மற்றும் லூர்த்தம்மா தம்பதிகள் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் மேரிஸ்ரெலா தம்பதிகளின் அன்பு மகளும் , கொன்ஸ்ரன்ரைன் வர்ணசீலன் (வர்ணன்) , அருட்தந்தை றொட்ரிகோ வசந்தசீலன் (வசந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் , புனிதசெல்வி (நிலா)யின் அன்பு மைத்துனியும் கொன்ஸ் ரெலன், கொன்ஸ்விக் ஆகியோரின் அன்பு மாமியும், டேவிட், காலஞ்சென்ற பெனடிக்ற் மற்றும் ஸ்ரீபன் இராசநாயகம் ஆகியோரின் மருமகளும் விமலராணி அவர்களின் அன்புப் பெறாமகளும் மற்றில்டா, மேரி கிறிஸ்ரி (குஞ்சு) , கசில்டா (சுதா) ஆகியோரின் அன்பு மருமகளும் நிஷாந்தினி , மிரோல்ட், மயூலிக்ஸ், ஸ்ரீபனி ஆகியோரின் அன்பு மச்சாளும் பபிதரனின் அன்பு உடன் பிறவாச் சகோதரியும் ரிபிக்ஷனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 06.07.2015 திங்கட்கிழமை பி.ப 02.15 மணியளவில் பிரான்ஸிலுள்ள தூய பேதுரு பவுல் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். அன்றைய தினம் (06.07.2015) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்திலும் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
மேரிஸ்ரெலா 0033 143 908 125
கொன்ஸ்ரன்ரைன் வர்ணசீலன் 0049 163 704 0358
விமலராணி 0033 624 736 358
ஸ்ரீபன் 0033 625 042 812
டேவிட் 021 226 4605 (சக்கோட்டை)

தகவல்:
குடும்பத்தினர்

## தென்மராட்சி பிரதேச தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவு

தென்மராட்சி, ஜூலை 4
தென்மராட்சி பிரதேச சலாசாரப் பிரிவினரால் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பிரதேச மட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
அவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:–

**பாடசாலை ரீதியிலான போட்டிகள்**

**பாலர் பிரிவு :**

**கையெழுத்துப் போட்டி ( தமிழ்)**
உதயசூரியன் தஜிந்தினி – மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை
வரதன்துஸானா – மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை
ஜெயச்சந்திரன் சம்சிக்கா – சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
காண்டீபன் டேயனுகா –சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

**கையெழுத்துப் போட்டி ( ஆங்கிலம் )**
காண்டீபன் டேயனுகா – சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
யசோக்குமார் பிரதிக்ஸா

**கவிதை பாடல் போட்டி**
சிவசுந்தரலிங்கம் மோகனவாணி சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
கலைச்செல்வன் அபிசேக் – சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
ஜோதிரட்ணராஜா துர்க்காஶ்ரீ – சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
அகிலன் சயூரி – சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

**கனிஷ்ட பிரிவு**

**கட்டுரைப் போட்டி**
புஸ்பராஜா யதுர்சனா – எழுதுமட்டுவாழ் ஶ்ரீகணேசா வித்தியாலயம்
ஜெ.நிதர்சா – எழுதுமட்டுவாழ் சிறி கணேசா வித்தி.
கனகராஜா கஜன் – எழுதுமட்டுவாழ் ஶ்ரீகணேசா வித்தி.

**கவிதைப் போட்டி**
புஸ்பராஜா யதுர்சனா–எழுதுமட்டுவாழ் ஶ்ரீகணேசா வித்தி.
சிவராஜா சிவரம்யா– சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**கவிதைப் போட்டி ( ஆங்கிலம் )**
சிவராஜா சிவரம்யா– சாவகச்செரி மகளிர் கல்லூரி

**கவிதை பாடும் போட்டி**
விக்டர் ரமேஸ் சிசிலி – சாவகச்சேரி ஶ்ரீபழநி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை

**கவிதை பாடும் போட்டி ( ஆங்கிலம் )**
மகேந்திரன் கீதாஞ்சலி – சாவகச்சேரி இந்துக் கல்லூரி
விக்டர் ரமேஸ் சிசிலி – சாவகச்சேரி ஶ்ரீபழநி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை

**சிரேஷ்ட பிரிவு**

**கட்டுரைப் போட்டி**
பீ.மேரி சிந்துஜா – கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
கணேசமூர்த்தி கீர்த்தனா – சாவகச்சேரி மகளிர் கல்லூரி
உருத்திரராஜா மிதுஸியா –சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

**கவிதை பாடும் போட்டி ( தமிழ் )**
சுந்தரலிங்கம் நிரோஜன் – சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

**பாடல் நயத்தல் போட்டி**
ஸ்ரனிலோஸ் ஸ்ரலா – சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
சந்திரநாதன் சர்மினி – கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
ஜெயக்குமார் கௌசல்யா – சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**திறந்த பிரிவு**

**கவிதைப் போட்டி ( தமிழ் )**
ம.விவேகானந்தன் – டச்சு வீதி சாவகச்சேரி
டிலானி தங்கராசா – மீசாலை கிழக்கு மீசாலை
ரஞ்சனா நவரத்தினம் – நுணாவில் மேற்கு சாவகச்சேரி

**கவிதைப் போட்டி ( ஆங்கிலம் )**
ம.விவேகானந்தன் – டச்சு வீதி சாவகச்செரி
பாடலாக்கப் போட்டி ( தமிழ் )
ரஞ்சனா நவரத்தினம் – நுணாவில் மேற்கு
நந்தகுமார் சஞ்சயன் – கண்டி வீதி சாவகச்சேரி
முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் – மந்துவில் மேற்கு

**பாடலாக்கப் போட்டி ( ஆங்கிலம் )**
திருமதி உருத்திராதேவி சண்முகநாதன் – டச்சு வீதி சாவகச்சேரி

**சிறுகதைப் போட்டி**
ரஞ்சனா நவரத்தினம் – நுணாவில் மேற்கு
ஸோபனா ஜெயச்சந்திரன் – நாவற்குளி தெற்கு
டீலானி தங்கராசா – மீசாலை கிழக்கு

**சிறுவர் கதையாக்கப் போட்டி ( தமிழ் )**
திருமதி உருத்திராதேவி சண்முகநாதன் – டச்சு வீதி சாவகச்சேரி

**இலக்கிய விவரணப் போட்டி**
சரவணமுத்து அகிலன் – கல்வயல் சாவகச்சேரி
நடராஜா லோசனவனிதை – கண்டி வீதி சாவகச்சேரி
நித்தியானந்தன் ஹரன் – கண்டி வீதி கைதடி தெற்கு. (ற–9)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூலை, 4
வேதநாயகம் தபேந்திரனின் 'யாழ்ப்பாண நினைவுகள் – பாகம் 1' நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பி.ப 3 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுக்கு சபையின் தலைவர் வை.சுப்பிரமணியம் தலைமை வகிக்கவுள்ளார்.
நிகழ்வில் அறிமுகவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பணிப்பாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்தவுள்ளதுடன் நூல் நயப்புரைகளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வ.வசந்தகுமார், சுழிபுரம் ஆறுமுக வித்தியாலய ஆசிரியர் கவிஞர் கை.சரவணன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ற–10)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1981.05.09
மறைவு 2013.06.25
திதி: 04.07.2015



### அமரர் யோகராஜா ஶ்ரீகாந் (ராஜன்)

ஆயிரம் உறவுகள் அவனியிலே
இருந்தாலும் உங்கள் உறவிற்கு ஈடாகுமா?
ஈராண்டு அல்ல – ஈரேழு ஜென்மங்கள்
கழிந்தாலும் உங்கள் நினைவுகள்
மறந்திடுமா....

யாழ்ப்பாணம். மனைவி

## ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 4
அமரர் சிவத்திரு கலாநிதி வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு விழா மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த மலருக்கு சைவ சித்தாந்தம் தேவார திருவாசகம் முதலான திருமுறைகளின் பெருமையைக் கூறும் ஆக்கங்கள், ஈழத்தில் சிவ வழிபாடு, தமிழிசை தமிழ்மொழி – வரலாறு – கலை – பண்பாடு முதலான துறைகள் சார்ந்த பிற மலர்களில் பிரசுரமாகாத தனித்துவமான ஆய்வுக் கட்டுரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.
கட்டுரைகள் அனுப்பும் அறிஞர்கள் கட்டுரைகளுடன் தமது புகைப்படம் ஒன்றையும் கலாநிதி. க.வைத்தீசுவரக் குருக்கள், கந்தரோடை, சுன் னாகம் என்னும் அஞ் சல் முகவரிக்கோ அல் லது baladhuvarahan @ gmil. com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (ற–10)





## விரைவில் அறிமுகமாகும் HTC Aero

தொடர்ச்சியாக ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்து கைபேசிச் சந்தையில் சிறந்த இடத்தில் இருக்கும் சாம்சுங் நிறுவனத்துக்கு போட்டியாக HTC தனது ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்து வருகின்றது.
கைபேசிப் பாவனையாளர்கள் மத்தியில் குறுகிய காலத்தில் வரவேற்பைப் பெற்றுள்ள இந்த நிறுவனம் விரைவில் HTC Aero எனும் ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.
இது தொடர்பான உத்தியோகபூர்வ தகவல் Evan Blass என்பவரால் டுவிட் செய்யப்பட்டுள்ளது.
இதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் Sprint கைபேசி வலையமைப்பு சேவை நிறுவனத்தின் ஊடாக இது அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேஸ்புக் அப்பிளிக்கேஷனில் அதிரடி வசதி


பேஸ்புக் அப்பிளிக் கேஷனில் புதிய வசதி ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. அதாவது ஒன்லைனில் இருந்தவாறே புகைப் படங்களை விரும்பியவாறு எடிட் செய்து நேரடியாக தரவேற் றம் (Upload) செய்யக் கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள் ளது. இதேவேளை கடந்த வாரம் iOS சாதனங் களுக் கான பேஸ்புக் அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பு வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

பேஸ்புக் சமூக வலைத்தளத்தை மொபைல் சாதனங் களில் இலகுவாகப் பயன்படுத்து வதற்காக விசேட அப்பிளிக்கேஷன்கள் உருவாக்கப்பட்டுள்ளமை நாம் அறிந்ததொன்றே இந்த நிலையில் iOS இயங்குதளத்தில் செயல்படும் அப்பிளின் மொபைல் சாதனங்களுக்கான




## விபத்துக்களைத் தடுக்க உதவும் தகவல் கண்ணாடி

கார் செலுத்தும்போது எத்தனை கிலோ மீற்றர் வேகத்தில் செல்கிறோம், பெற்றோல் எவ்வளவு இருக்கிறது என்ற விவரங்களை டேஷ்போர்டில் உள்ள மீற்றர்களைப் பார்த்துத்தானே தெரிந்துகொள்ள முடியும். அமெரிக்க நிறுவனம் கண்டுபிடித்துள்ள மினி அங்மென்ட்டு விசன் என்ற கண்ணாடியை அணிந்து கொண்டால் எந்த மீற்றரையும் பார்க்க வேண்டியதில்லை.
கார் முன்புறக் கண்ணாடியில் எவ்வளவு வேகத்தில் செல்கிறோம், முன்னால் செல்லும் வாகனங்கள் எவ்வளவு தூரத்தில் செல்கின்றன என்பதுடன், நெருங்கிச் சென்றால் எவ்வளவு அரு கில் சென்றுள்ளோம் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். மேலும், காருக்கு வெளியே ஏதாவது பொருள் இருந்தாலோ, வீதித்தடைகள் இருந்தாலோ வெளியிலும் பார்க்க முடியும். இதனால், விபத்துகள் பெருமளவில் குறையும் வாய்ப்பு உள்ளது



## வெலி ஓயாவில் கைத்தொழில் பேட்டை

மன்னார், ஜூலை 4
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படும் பிரதேச கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வெலிஓயா பிரதேச செயலகப் பகுதியில் கைத்தொழிற் பேட்டை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்லை நேற்று முன்தினம் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன் நட்டார்.
நிகழ்வை ஆரம்பித்து வைத்த அமைச்சர் ரிசாத் பதியுதீன் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:–
50 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள வெலிஓயா கைத்தொழில் பேட்டையின் ஆரம்ப வேலைகளுக்கு முதல் கட்டமாக 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
இந்தக் கைத்தொழில் பேட்டையில் ஆடைத்தொழிற்சாலை மற்றும் பல தொழிற்சாலைகள் அமைக்கப்படும். இதனூடாக இந்த வருட இறுதிக்குள் 1000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கிறதோ அந்தக்கட்சியுடன் இணைந்து மக்களுக்கு சேவை செய்யத் தீர்மானித்துள்ளோம்.– என்றார். (ற)

## மழையுடனான வானிலை தொடர்ந்து நிலவும் சாத்தியம்



கொழும்பு, ஜூலை 4
நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளை இடியுடன் கூடிய மழை பெய் யலாம் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.
மன்னார், அம்பாந்தோட்டை, புத்தளம், காலி ஆகிய கரையோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.
அத்துடன் மழை பெய்யும்போது தென்மேற்குக் கரையோரமாக 20–40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுவதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுவதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.
இதனால் இரவு நேரங்களில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களை அவதானமாக இருக்கும் படி வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ற)

# பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் நியமனக் கடிதங்கள்

### கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் வழங்கினார்



கொழும்பு, ஜூலை 4
பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள், நேற்றுமுன்தினம் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணனால் நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியின் சௌமிய கலையரங்கத்தில் வைத்து வழங்கப்பட்டன.
மூன்றாம் கட்டமாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் 158 ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினர் அ.அரவிந்தகுமார் உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
இந்த நிலையில் நிகழ்வில் உரையாற்றியிருந்த கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாவது:–
பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் எதிர்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அரச உத்தியோகத்தர்களாக உருவாக்கப்பட வேண்டும். இதுவே எனது நீண்ட நாள் கனவாகும். அதற்கான சந்தர்ப்பம் தற்பொழுது கிடைத்துள்ளது. எமது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளும் தோட்ட தொழிலாளர்களாகவோ அல்லது வீடுகளில் வேலை செய்பவர்களாகவோ இருக்கக் கூடாது.
நாங்களும் இந்த நாட்டில் மற்ற சமூகங்களைப்போல அரச தொழிலில் உள்வாங்கப்பட்டு அரச உத்தியோகத்தர்களாக மாற வேண்டும். இந்தக் கனவு நனவாக நான் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படவுள்ளேன்.
எமது பிள்ளைகள் கிராம சேவகர்களாக, பொலிஸ் அதிகாரிகளாக, மாவட்ட செயலகங்களிலும், பிரதேச செயலாளர் காரியாலயங்களிலும் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக நாம் அவர்களைத் தயார்படுத்த வேண்டும். அதற்கான முறையான கல்வியை அவர்களுக்கு வழங்க வேண்டும். – என்றார். (ற)

# இந்தோனேஷியா விமான விபத்து புதிய தகவல்கள்; வெளிவந்தன

ஜகார்த்தா,ஜூலை 4

இந்தோனேஷியாவில் நடைபெற்ற இராணுவ விமான விபத்தில் 142 பேர் உயிரிழந்துள்ளதைத் தொடர்ந்து, விமான விபத்துக்கான காரணத்தை இராணுவ அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

இந்தோனேஷிய இராணுவத்துக்குச் சொந்தமான இராணுவ விமானம் ஒன்றில் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் உட்பட சுமார் 122 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் செய்துள்ளனர்.

சுமத்திரா நகருக்கு அருகில் உள்ள மெடானிலிருந்து புறப்பட்ட அந்த



இராணுவ விமானம் இரண்டு நிமிடங்களுக்குள் அங்குள்ள ஹோட்டல் மற்றும் மசாஜ் மையத்தின் மீது விழுந்து வெடித்துச் சிதறியது.

அந்த விபத்தில் விமானத்தில் பயணம்செய்த 122 பேர்களுடன் ஹோட்டல் மற்றும் மசாஜ் மையத்திலிருந்த நபர்களும் என மொத்தம் 142 பேர் உயிரிழந்தனர்.

இராணுவ விமானத்தில் வீரர்களின் குடும்பத்தினர் உட்பட, பிற பயணிகள் சுமார் 70 டொலர்கள் செலுத்திப் பயணம் செய்துள்ளனர். அதிக எண்ணிக்கையில் நபர்கள் பயணம் செய்ததால்தான் விமானம் விபத்துக்குள்ளானது என மக்களிடையே முறைப்பாடு எழுந்தது.

அந்த முறைப்பாட்டை மறுத்து இராணுவ அதிகாரிகள் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 51 வருடங்கள் பழைமையான அந்த விமானத்தில் சுமார் 12.5 தொன் வரை நிறையுள்ள பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். ஆனால், விபத்து நடந்தபோது விமானத்தில் 8 தொன் நிறையுள்ள பயணிகளே இருந்துள்ளதால், விமானம் நிறை காரணமாக விபத்துக்குள்ளாக வாய்ப்பில்லை.

விமானம் புறப்பட்ட இரண்டு நிமிடங்களில் அதில் இருந்த 4 என்ஜின்களில் ஒரு என்ஜின் தவறான விதத்தில் செயற்பட்டுள்ளது.

அதனால், விமானத்தின் இறக்கைகளும் செயலிழந்ததால் விமானம் விபத்துக்குள்ளாகி இருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# 71 ஊடகர்கள் 2015 இல் படுகொலை





ஜெனிவா, ஜூலை 4

2015 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 71 பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக அதிர்சித் தகவல் வெளியாகிள்ளது. பிரஸ் எம்பளம் கேம்பைன் என்ற அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகின் 24 நாடுகளில் இந்த வருடம் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை 71 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். பத்திரிகையாளர்கள் படுகொலை கடந்த வருடத்தை விடவும் இந்த வருடம் 7 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

பிரான்ஸ், லிபியா மற்றும் ஈராக் உள்ளிட்ட நாடுகளில் பத்திரிகையாளர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். யேமன், லிபியா, ஈராக், சிரியா, தெற்கு சூடான் மற்றும் உக்கரைனில் நடைபெற்ற போரின்போது 17 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர். இலத்தீன் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள போர்ப் பகுதியில் 30 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகள் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்து மிகுந்த நாடுகள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரான்ஸ் அரசுக்கு நெருக்கடி

## 5 வயதுச் சிறுமி பாலியல் துஸ்பிரயோக விவகாரம்

பாரிஸ்,ஜூலை 4

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புர்கினா பசோவில் 5 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து அதனை வீடியோவில் பதிவு செய்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரண்டு இராணுவ வீரர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தீவிரவாதத்தை ஒடுக்கும் நோக்கில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் இராணுவ வீரர்களை சில மாதங்களுக்கு முன்னர் ஐ.நாவின் உத்தரவின் பேரில் மத்திய குடியரசு நாடுகளுக்கு பிரான்ஸ் அரசு அனுப்பி வைத்திருந்தது.



புர்கினா பசோவில் சுமார் 220 பிரான்ஸ் இராணுவ வீரர்கள் முகாம்கள் அமைத்து தங்கி இருந்தனர். இராணுவ வீரர்களுக்குத் தேவையான உதவிகளை அங்குள்ள கறுப்பின சிறுவர், சிறுமிகள் செய்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்னர், தங்களுக்கு உதவியாக வந்த சிறுமிகளை 16 இராணுவ வீரர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியானது.

முறைப்பாடுகள் தொடர்பான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கப் பெறாததால், தன்னுடைய இராணுவ வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்க பிரான்ஸ் அரசு தயக்கம் காட்டி வந்துள்ளது.

ஆனால், பாலியல் சித்திரவதைக்கு உள்ளான 5 வயது சிறுமி ஒருத்தியின் தந்தை ஆதரம் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளமை பிரான்ஸ் இராணுவத் துறைக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. சிறுமிகளை ஒரு வீரர் பாலியல் சித்திரவதை செய்ய அதனை மற்றொரு வீரர் வீடியோவில் பதிவு செய்துள்ளார்.


அந்த வீடியோவைக் கைப்பற்றிய அந்தச் சிறுமியின் தந்தை, அதனை அந்த நாட்டில் உள்ள பிரான்ஸ் தூதரக அலுவலகத்தில் ஒப்படைத்து நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, இராணுவ உயர் அதிகாரிகள், முறைப்பாட்டில் சிக்கியுள்ள இரண்டு இராணுவ வீரர்களை தற்காலிகமாக பணியிலிருந்து நீக்கியுள்ளதாகவும், அவர்கள் இருவர் மீதும், பிற வீரர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாலியல் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதி அளித்துள்ளனர். (ஐ)

# இந்தியாவுடன் இராணுவ உறவை மேம்படுத்த அமெரிக்கா திட்டம்

வொஷிங்டன்,ஜூலை 4

இந்தியாவுடனான இராணுவ உறவை ஆழமாக வலுப்படுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அமெரிக்க இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள தேசிய இராணுவ அணுகுமுறை– 2015 அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:



அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு ரஷ்யா, சீனா மற்றும் வடகொரியா நாடுகள் தொடர்ந்து அச்சுறுத்தலாக உள்ளன. அதேசமயம் இந்தியாவுடனான இராணுவ உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும். சர்வதேச அமைதிக்கு சீனாவின் வளர்ச்சி மிக முக்கியம் என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளது.

ஆனால் மிரட்டல் நடவடிக்கைகளை கைவிட்டு பேச்சு மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள சீனா முன்வர வேண்டும். அமெரிக்காவுடன் இராணுவ மோதலை அந்த நாடுகள் விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய எல்லையில் சீன இராணுவ வீரர்கள்

## இந்தியாவின் குற்றச்சாட்டுக்கு சீனா மறுப்பு

பீஜிங், ஜூலை 4

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சீனா தனது இராணுவப் படைகளை குவித்திருப்பதாக இந்திய இராணுவத் தலைமைத் தளபதி தெரிவித்துள்ளமை அடிப்படை ஆதாரமற்றது என்று சீனா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் எல்லைப் பகுதியில் சீன இராணுவம் 5 ஆயிரம் இராணுவ வீரர்களைக் குவித்திருப்பதாக இந்திய இராணுவத் தலைமைத் தளபதி பிக்ரம் சிங் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் இந்தக்குற்றச்சாட்டை சீனா முற்றிலுமாக மறுத்துள்ளது.

இந்திய எல்லையில் சீன இராணுவம் ஊடுருவல் குறித்த குற்றச்சாட்டுக்கு இருதரப்பும் பழைய முறையின்படி பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று சீன வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பிலிப்பைன்ஸில் படகு விபத்து;36 பேர் சாவு

மணிலா,ஜூலை 4

பிலிப்பைன்ஸ் நாட்டில், லெய்ட்டி மாகாணம், ஆர்மாக் நகரில் இருந்து 173 பேருடன் 'எம்.பி. நிர்வாணா' என்ற படகு, கமோட்டெஸ் தீவில் உள்ள பிலார் நகருக்குச் சென்று கொண்டிருந்தது.

அப்போது திடீரென ஏற்பட்ட சூறாவளி காற்றினால் அந்தப் படகு நிலை குலைந்து கவிழ்ந்தது.

இது தொடர்பாக உடனடியாக கடலோரக் காவல் படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்கள் விரைந்து மீட்புப்பணிகளை மேற்கொண்டனர்.









அந்தப் படகு விபத்தில் 36 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

118 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் 19 பேரின் கதி என்ன என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. (ஐ)

# வெள்ளை மாளிகைக்குள் ஒளிப்படம் எடுக்க அனுமதி

## 40 வருடங்களின் பின்னர் தடை நீக்கம்

வொஷிங்டன்,ஜூலை 4

கடந்த 40 வருடங்களுக்கு முன்பு வெள்ளை மாளிகைக்குள் ஒளிப்படம் எடுக்க விதிக்கப்பட்ட தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி மிச்செல் ஒபாமா தனது இன்ஸ்டாகிராம் வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.



உலகின் அதிகாரமிக்க மாளிகைகளில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையும் ஒன்றாகும். அதிகார சக்தியின் அடையாளமாக விளங்கும் இந்த மாளிகையில் சுற்றுலாப் பயணிகள் ஒளிப்படம் எடுப்பதற்கு கடந்த 40 வருடங்களுக்கும் மேலாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வெள்ளை மாளிகையில் ஒளிப்படம் எடுப்பதற்கான தடை தளர்த்தப்படுவது குறித்த அறிவிப்பை, ஜனாதிபதியின் மனைவி மிச்செல் ஒபாமா, தனது இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார்.

ஒளிப்படத் துறையை ஊக்குவிக்கும் வகையில் புதிய அடையாளத்துடன் வெள்ளை மாளிகை இனித் திகழும் எனவும் தனது இன்ஸ்டாகிராம் வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வெள்ளை மாளிகையில் குவிந்த ஏராளமான சுற்றுலாப் பயணிகள், ஒளிப்படங்களை எடுத்து 'செல்பி வித் வையிற் ஹவுஸ்' என்று தங்களது சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்து வருகின்றனர்.

வெள்ளை மாளிகையில் ஒளிப்படம் எடுக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும் வீடியோப் பதிவு செய்ய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 150 பேர் சுட்டுக்கொலை

## நைஜீரியாவில் தீவிரவாதிகள் அட்டூழியம்

அபுஜா,ஜூலை 4



நைஜீரியாவில், மூன்று கிராமங்களுக்குள் புகுந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவங்களில் 150 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

போர்னோ மாகாணத்தில் உள்ள குகாவா மற்றும் அதன் அருகிலுள்ள இரண்டு கிராமங்களிலேயே அந்தக் கொடூரச் சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது. துப்பாக்கிகளுடன் சென்ற 50இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் அந்தப் பகுதிகளில் புகுந்துள்ளனர். பின்னர் அங்குள்ள மசூதிகளில் றம்ழான் நோன்பு வழிப்பாடுகளை நடத்திக் கொண்டிருந்த ஆண்களையும், சிறுவர்களையும் குறிவைத்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கி சூடுகளை நடத்தியுள்ளனர்.

வீட்டில் இருந்த பெண்களையும் தீவிரவாதிகள் விட்டு வைக்கவில்லை. அந்தத் தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதோடு பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

குகாவா கிராமத்தில் மட்டும் அதிகபட்சமாக 97 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில் போகோஹரம் தீவிரவாதிகள் அந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்துள்ளது.

நைஜீரியாவில் முகமது உகாரி தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்ட நாள் முதல் அரசுக்கு எதிராகவும் அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைத்துத் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். (ஐ)

# டார்ஜிலிங்கில் மீண்டும் நிலச்சரிவு

டார்ஜிலிங்,ஜூலை 4



டார்ஜிலிங் மலைப் பகுதியில் மீண்டும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால் அங்கு வசிக்கும் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

இடைவிடாத கனமழையைத் தொடர்ந்து மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் நேற்று முன்தினம் 25 இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி 38 பேர் உயிரிழந்துள்ளனர். காணாமல் போன 23 பேரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 500 இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த நிலையில் டார்ஜிலிங்கில் உள்ள கயாபாரா வனப் பகுதியில் நேற்று நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

அதனால் வீதிகள் துண்டிக்கப்பட்டு நூற்றுக்கணகான சுற்றுலாப் பயணிகளும் உள்ளூர் வாசிகளும் காட்டுக்குள் சிக்கித் தவித்து வருகின்றனர். நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசியப் பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# கொலம்பியாவில் குண்டு வெடிப்பு

போஹோடா, ஜூலை 4

கொலம்பியாவில் இரண்டு இடங்களில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களின்போது 8 பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புக்கள் தீவிரவாதிகளின் சதிச்செயல் என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தலைநகர் போஹோடாவில் தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு முன்னால் திடீரென குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. அதில் அந்தக் கட்டிடத்தின் கண் ணாடிகள் மற்றும் சேதம் அடைந்த பகுதிகள் வீதியில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது விழுந் துள்ளன. அதில் 8 பேர் காயம் அடைந்துள்ளனர். (ஐ)

# சீனாவில் நிலநடுக்கம்

பீஜிங், ஜூலை 4



வடமேற்கு சீனாவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கமானது சின்ஷியாங் மாகாணத்தில் இருந்து சுமார் 160 கி.மீ. தொலைவில் குமா கவுண்ட்டி அருகில் உள்ள ஹோடன் நகரில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் இழப்புக்கள் ஏற்பட்டனவா என்பது குறித்து உடனடியாகத் தகவல்கள் வெளியாகவில்லை.

அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியாக விளங்கும் இந்தப்பகுதியில் இந்த வாரத்தில் ஏற்பட்ட 2 ஆவது நிலநடுக்கம் இதுவாகும். இந்த வருடத்தில் மட்டும் 8 முறை நில[illegible] ஏற்பட்டுள்ளமை குறிப்[illegible]க்கது. (ஐ)

# சர்ச்சையில் அரச குடும்பம்

லண்டன்,ஜூலை 4



பிரிட்டன் மகாராணியான இரண்டாம் எலிசபெத்தைத் தவிர்த்து விட்டு, அரச குடும்பத்தின் ஒட்டு மொத்த அதிகாரத்தையும் தனது சொந்தத் தாயாருக்கு இளவரசி கேட் மிடில்டன் வழங்கி வருவதாகப் பரபரப்பான குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இங்கிலாந்தைச் சேர்ந்த இணையத்தள செய்தி நிறுவனம் ஒன்று அண்மையில் பரபரப்பான அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது.

அதில், பிரிட்டன் அரச குடும்பத்தின் பாரம்பரியமிக்க சம்பிரதாயங்களை மீறி இளவரசி கேட் மிடில்டன் செயல்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, மகாராணியான இரண்டாம் எலிசபெத்தை ஓரங்கட்டும் வகையில், அரச அதிகாரங்களை தனது தாயாரான கரோல் மிடில்டனுக்கு கேட்மியுல்டன் வழங்கி வருவதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அந்தச் செய்தி நிறுவனம் சில உதாரணங்களையும் எடுத்துக் காட்டியுள்ளது.

கடந்த சில மாதங்களாக, அரச குடும்பத்தின் பக்கிங்ஹம் அரண்மனையை விட்டு வெளியேறித் தனியாக வசித்து வருவதுடன், தனது பிள்ளைகளான ஜோர்ஜையும், சார்லோட்டையும் தன்னுடைய தனிப்பட்ட கவனத்தில் கேட் மிடில்டன் வளர்த்து வருகிறார். ஆனால், [illegible] குடும்பத்து வாரிசுகளை மகா[illegible], இளவரசர் ஆகியோரின் ஆலோசனை மற்றும் கவனிப்பில் தான் வளர்க்க வேண்டும் என்பது காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் சம்பிரத்தாயம் ஆகும்.

ஏனெனில், வாரிசுகள் தான் எதிர் காலத்தில் பிரிட்டன் ராஜ்ஜியத்தை ஆளப்போகிறார்கள் என்பதால், அவர்களுக்கு அரச குடும்பத்தின் பாரம்பரியங்களை முறையாகக் கற்பித்து வளர்ப்பது அவசியம் ஆகும்.

ஆனால், அரச குடும்பத்தில் தற்போது உள்ள சூழ்நிலையில், தாத்தாவான இளவரசர் சார்லஸை தனது பிள்ளைகளுடன் கேட் மிடில்டன் நெருங்க விடுவதில்லை என முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இதற்கு மாறாக, கேட் மிடில்டனின் தாயாரான கரோல் மிடில்டன் தான், பிள்ளைகளை வளர்த்து வருவது, அவர்களுக்கு என்ன தேவை, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது உட்பட அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி வருகிறார்.

இதனை கேட் மிடில்டனும் விரும்பி வரவேற்பதாகவே தெரிகிறது.

ஆனால், பேரன் மற்றும் பேர்த்தியை நெருங்க விடமால் கேட் மிடில்டனும் கரோல் மிடில்டனும் செயற்பட்டு வருவது, இளவரசர் சார்லஸுக்கு பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளதாகவும், அதற்காக கரோல் மிடில்டன் சிறிதும் கவலை கொள்வதில்லை என அந்தச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

அதேபோன்று, அரச குடும்பத்தினர் பின்பற்றி வரும் பாரம்பரியமிக்கச் சம்பிரதாயங்களைக் கூட கேட் மிடில்டன் பின்பற்றுவதில்லை எனக் கூறப்படுகிறது.

அரச குடும்பத்தின் இளவரசியான அவர், பொது இடங்களில் ஒரு நடுத்தரக் குடும்பத்து பெண் போல் நடந்துக்கொள்வது மகாராணியையும், இளவரசர் சார்லஸையும் எரிச்சல் அடைய வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சில வாரங்களுக்கு முன்னர், பூங்கா ஒன்றில் தனது மகன் ஜோர்ஜுடன் விளையாடச் சென்றிருந்தபோது, மிக சாதாரண பெண்ணாக தன்னைக் காட்டி கொண்டுள்ளார் என்றும் ஜோர்ஜ் மீது சிலமுறை அடக்குமுறைகளைப் பிரயோகித்தார் என்றும் தகவல்கள் வெளியாகின.

இளவரசி சார்லோட் பிறந்தத[illegible]துப் பிறகு, அழகு நிலையம் ஒன்று[illegible]துச் சென்ற கேட் மிடில்டன், அங்கு[illegible]ள ஊழியர்களுடன் மிகச் சாதா[illegible]ண மாக நெருங்கிப் பழகினார் என்[illegible]ும், அங்குள்ள சேவைகளைப் [illegible]று வதற்கு இளவரசி என்பதை ம[illegible]து மிகச் சாதாரணமாக வேண்டு[illegible]ள் கள் விடுத்தார் எனத் தகவ[illegible]ள் வெளியாகின.

விபத்தில் இறந்துபோன இள[illegible]சி டயானா தன்னை ஒருபே[illegible]ம் இளவரசியாகக் காட்டிக்கொ[illegible]ா மல், மிகச்சாதாரணமாக [illegible]து இடங்களில் வலம் வந்ததால்[illegible]ன் இளவரசர் சார்லஸை விட்[illegible]ரி யும் அளவுக்கு விவாகரத்து[illegible]ற நேரிட்டது.

அதேபோன்று தற்போது இ[illegible]சி கேட் மிடில்டனும் அரச [illegible]ிர தாயங்களை மீறி ஓர் இ[illegible]சி போல் இல்லாமல் மிகச்ச[illegible]ார ணமாக செயற்படுவதாகத் தொ[illegible]து எழுந்து வரும் முறைப்பாடு[illegible]ல் அரச குடும்பம் கவலையி[illegible]ழ் கியுள்ளதாக செய்திகள் வெ[illegible]கி யுள்ளன. (ஐ)

நடேசு தயாளன்
அதிபர் யா/கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

# கற்றல் கற்பித்தற் செயலொழுங்கும் விளைதிறன்மிக்க ஆசிரியரும்

இன்றைய கற்றல் கற்பித்தல் செயன்முறையில் விளைதிறன் என்பது முக்கியத்துவப்படுத்தப்படும் ஒரு விடயமாகவுள்ளது. எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் எந்தளவுக்கு அடையப்படுகின்றன என்பது தொடர்பில் விளக்குவதாக விளைதிறன் அமைந்து காணப்படுகின்றது. கற்றல் கற்பித்தல் செயன்முறையின் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் இலக்குகள் எட்டப்படுவது தொடர்பில் ஆசிரியரது வகிபாகம் மிக முக்கியமானதாகும். கற்றல் கற்பித்தலை ஒரு விருப்புடன் கூடிய செயலாக முன்னெடுத்துச் செல்லும் ஆசிரியராலேயே இலக்கு நோக்கிய நகர்வை மேற்கொள்ள முடியும். அத்தகைய ஆசிரியரே விளைதிறன் மிக்க ஆசிரியராகவும் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுவார் என்பதோடு, தரமான கல்வியை வழங்கும் செயன்முறையிலும் அவரது வகிபாகம் முக்கியத்துவமுடையதாக விளங்கும். மாணவர்கள் அனைவரும் தரமான கல்வியைப் பெற்றுக் கொள்வதில் எத்தகைய வெற்றிகரமான அணுகுமுறைகள் அவசியமானவை என்பது நோக்கத்தக்கது. மாணவர்கள் சாதகமான கற்றல் நிலைகளினூடாக பெறுமதி மிக்க கற்றலை அடைந்து கொள்வது பற்றி கற்பிப்போர் சிந்திக்க வேண்டும். பொருத்தமான கற்றல் சூழலை தோற்றுவிக்க முனையும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விநிர்வாகிகள், பெற்றோர், நலன்விரும்பிகள் என்போர் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

1.ஆசிரியர்களும் மாணவர்களும் மகிழ்ச்சியுள்ள மனோ நிலையில் விளங்குதல்.

2. மாணவர்களது பின்புலம் பற்றியும், அவர்களது நடத்தைப் பாங்குகள் பற்றியும் அறிந்திருத்தல்.

3. மாணவர்களது கற்றல் முறை வேறுபாடுகள், விருத்தி நிலைகள், ஆர்வங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கின்றதா என்பதை நோக்குதல்.

4. கற்றல் வெளியீடுகள் பொருத்தமான மதிப்பீட்டுக்குள்ளாகின்றன என நோக்குதல்.

விளைதிறன்மிக்க ஆசிரியரானவர் தனது மாணவர்களது பின்புலம் பற்றி அறிந்தவராகவும் அந்தப் பின்புல நிலைமையானது அவர்களது நடத்தையில் தாக்கம் செலுத்துவதையும் அதனூடாகக் கற்றல் நிலைமைகளில் தாக்கம் ஏற்படுத்தும் விதத்தையும் அறிந்தவராகவும் விளங்குவார். எல்லா மாணவர்களும் கல்வியை ஒரே விதமாகப் பெறுவதில்லை என்பதையும், பல்வேறுவிதமான கல்விக்கொள்கைகள் கோட்பாடுகளின் பிரயோகத்தின் மூலமே மாணவர்களிடம் உன்னதமான கற்றல் நிலைமைகளை ஏற்படுத்தலாம் என்பதையும் எல்லோருக்கும் கல்வி என்ற செயன்முறையின் வெற்றியில் ஆசிரியர் தனது பங்களிப்பை வழங்குதல் மிக அவசியமானதாகும். இங்கு கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தனியாள் வேறுபாட்டு நிலைமைகளையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

கற்றல் வெளியீடும் நடத்தை மாற்றமும் கல்வியின் முக்கியமான தூண்களாகும். இவை இரண்டு கற்றல் தரத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன. ஆசிரியரானவர் பல்வேறுபட்ட காரணிகளைத் தனது கட்டுப்பாட்டடில் வைத்திருக்க வேண்டியவராயுள்ளார். அவை மாணவர்களிடத்தில் ஊக்கலையும், அடைவு நோக்கிய நகர்வை மாணவர்களினதும் நடத்தையையும் தீர்மானிப்பதாக இருக்கும்.



வகுப்பறையின் பௌதிக நிலைமைகள், பிள்ளையின் மனவெழுச்சி மட்டம், ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான உரையாடலின் தரம் என்பன மாணவரது உச்சமட்டக்கற்றல் செயற்பாட்டுக்குப் பங்காற்றுவதாக இருக்கும். ஆசிரியரது அதீத கவனிப்பானது வறுமை நிறைந்த பிள்ளைகள், சமூக அடைவு நிலைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ள பின்தங்கிய பிள்ளைகள், வேறுபட்ட சமூகக் குழுநிலைத் தாக்கத்துக்குட்பட்ட பிள்ளைகள் என்போர் மீது இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர இத்தகைய தாக்கத்துக்குட்பட்ட பிள்ளைகள் பசியுடனும் சோர்வுடனும் வரும் நிலையுள்ளது. அத்தகைய பிள்ளைகள் பாடசாலைச் செயற்பாடுகளில் அதீத ஈடுபாடு காட்ட முடியாதவர்களாயுள்ளனர். அதுமட்டுமன்றி அவர்களது பெற்றோரிடம் கல்வி அறிவு குறைவாகக் காணப்படுமிடத்து பிள்ளையின் கல்விச் செயற்பாடுகள் சவால் மிக்கதாகக் காணப்படும். பிள்ளை பற்றிய பின்புல அறிவு அற்ற ஆசிரியரி னால் பிள்ளையானது ஆபத்தின் விளிம்பில் நிற்கும் நிலையும் உருவாகும் என்பதோடு விளைதிறனான அறிவுறுத்தல்களையும் வகுப்பறைத் தந்திரோபாயங்களையும் பின்பற்ற முடியாதநிலையும் உருவாகும்.

ஆசிரியரானவர் சமூக நிலைமைகளுக்கு அப்பால் வகுப்பறையினுள் இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் பாடசாலைக்குள்ளான காரணிகளின் தாக்கமானது மாணவர்களின் நடத்தையில் எதிரொலிக்கும் நிலையுமுள்ளது. பல்வேறுபட்ட ஆற்றல் வேறுபாடு கொண்ட மாணவர்களிடத்திலே தனது கற்பித்தல் முறைகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை அறிவதற்கான ஆய்வினையும் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாணவனுக்கும் அவன் யார்? என்ற உணர்வை ஊட்டுவதில் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுடன் தொடர்ந்து மேற்கொள்ளும் ஈடுபாட்டினூடாக ஒரு மாணவன், முக்கியமானவனா? பிரகாசமானவனா? திறன் விருத்தி நிலையில் குறைந்தவனா? என்பதை குறித்த மாணவனுக்கு உணர்த்துதல் வேண்டும். இதற்கான செயற்பாடுகள், உரையாடல்கள், முக பாவனைகள் அவனோடு செலவிடும் கால அளவு என்பவற்றினூடாகப் புலப்படுத்தப்படும். ஆசிரியர் மாணவர் இடைவினையுறவில் அவர்கள் ஒவ்வொருவரது செயற்பாடும் புலக்காட்சிச் செயலொழுங்குக்குட்பட்டதாக அமைந்து இருக்கும் என்பது ஆய்வுகளின் முடிவுகளாகவுள்ளன. எனவே ஒவ்வொரு மாணவனது தனியான இயல்புக் கேற்றவாறாக ஆசிரியரது இடைவினையுறவு அமைந்து காணப்பட வேண்டும்.

வெற்றிகரமான ஆசிரியவாண்மைத்துவத்துக்கு மாணவர்கள் யாது செய்கின்றார்கள், அவர்கள் என்ன கூறுகின்றார்கள், அவர்கள் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பதை அவதானிப்பதும், அதற்காகப் பொருத்த மான செயலொழுங்கை மேற்கொள் வதனூடாக மாணவர்களது எதிர்வினைகளை அவதானிப்பதும் அவசியமானதாகும். கற்பித்தல் என்பது வெவ்வேறு பாடங்களை வாசிப்பதோ, குறிப்புக்களை முன் வைப்பதோ அல்ல. இதுவோர் பங்குபற்றலுடனான செயலொழுங்காகும். ஆசிரியரானவர் மாணவர்களிடமிருந்து பல்வேறுபட்ட குறியீடுகளை அல்லது வெளிப்பாடுகளை பெற்றுக் கொள்கின்றார். உற்று நோக்கல் செயன்முறையா னது மாணவர்கள் ஆசிரியரது கற்பித்தலோடு ஒன்றிணைந்துள்ளனர் என்பதையும், நெற்றியில் கைவைப்பதானது புரிந்துகொள்ள முயலுதலையும் புலப்படுத்துகின்றது. இதனை ஆசிரியர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியத்துவமானது, பல கற்பித்தல் உத்திகளை உள்ளடக்கியதாகும். அதில் முக்கியமானது மாணவர்களது நடத்தையை முகாமை செய்வதாகும். பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்குதல், மாணவர் நடத்தை தொடர்பாக உயர் எதிர்பார்க்கைகளைப் பெற்றுக் கொடுத்தல், ஏனைய மாணவர்கள் முன்னிலையில் விமர்சிப்பதைத் தவிர்த்தல், பெற்றோரது ஈடுபாட்டை பாடசாலை வகுப்பறை மட்டம் வரை நகர்த்துதல் என்பன விளைதிறன்மிக்க கற்றல் கற்பித்தலுக்கு அவசியமானதாகும். ஆளுமைத் திறன்மிக்க ஆசிரியரானவர் சிறப்பான கற்றல் திட்டமிடலுள்ளவராகவும், பாடசாலையின் களவிதிகளை இறுக்கமாகப் பின்பற்றுபவராகவும் விளங்குதல் வேண்டும். அதே போல், தான் கற்பிக்கும் வேளையிலும் வகுப்பறைக்குள் களவிதிகளைக் கையாளுதல் விளைதிறன் மிக்க ஆசிரியரது பணியாகவும் இருக்கும். இத்தகைய களவிதிகளைக் காட்சிப்படுத்தி வைத்திருப்பதோடு, அதனது நடைமுறை தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். களவிதிகள் காட்சிப்படுத்தப்படும்போது முக்கியமான மூலப்பதங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். விளைதிறன் மிக்க ஆசிரியரானவர் கற்பித்தலை நேசிப்பவராக விளங்குவார். கற்பித்தலை விருப்புடன் கூடிய செயலாகக் கொள்ளாத ஆசிரியரால் விளைத்திறனான செயற்பாட்டை மேற்கொள்ளமுடியாத நிலை உருவாகும்.

சிறந்த ஆசிரியரானவர் பாட விடயங்களை நன்கு தெரிந்தவராகவும், அதனை சிறப்பாகக் கற்பிக்கும் திறன் கொண்டவராகவும் விளங்குதல் வேண்டும். மாணவர்கள் அறிய வேண்டிய விடயங்களை வகுப்பறையினுள் கொண்டு சென்று நடைமுறை திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும்.

அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றைப் பெறக் கூடிய வகையிலான கற்றல் அனுபவங்களைப் பாடசாலைக்கு உள்ளேயும் பாடசாலைக்கு வெளியேயும் ஆசிரியர் தான் உள்ள போதும் மாணவன் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற செயலொழுங்கைத் திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தக் கூடிய திறன் ஆசிரியரிடம் காணப்படுதல் மிக இன்றியமை யாததாகும். இதற்காக வளங்களைத் திரட்டுதல், உச்சமட்டப் பயன்பாட்டுக்கு உட்பட்ட வகையில் பயன்படுத்துதல் தொடர்பில் ஆசிரியர் அறிவுடையவராக விளங்குதல் அவசியமானதாகும்.

ஆசிரியர் தனது அனுமானிப்புக்களையும், எதிர்பார்ப்புக்களையும் வினா எழுப்புதலூடாகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். கற்றல், கற்பித்தல் செயன்முறையில் மாணவர்களிடம் இருந்து ஆசிரியரும், ஆசிரியரிடமிருந்து மாணவர்களும் கற்கின்றார்கள் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். தரமான ஆசிரியரானவர் மாணவர்களுடன் நேரான உறவுகளை வளர்ப்பவராகவே விளங்குகின்றார் என்பதோடு மாணவர்களை மதிப்பவராகவும் விளங்குவார். பாட அலகை மகிழ்ச்சிகரமாக முன்வைப்பதோடு, மாணவர்களது இயலுமைகளையும் வளர்த்துக் கொள்பவராகவும் விளங்குவார். இவை எதனைப் புலப்படுத்துகின்றது எனில், நேரான ஆசிரியர், மாணவர் தொடர்பும் வகுப்பறைக் கவின் நிலையும் பாடசாலைக்கால அனுபவத்தை பெற்றுக்கொள்ள மாணவருக்கு அவசியமானது என்பதாகும்.

பாடசாலைக்கால அனுபவத்தைப் பெற்றுக்கொடுப்பதில் பயனுறுதி மிக்க கற்றல், கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவதனூடாக சிறந்த கற்றல் அனுபவங்களை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதோடு, ஆசிரியரும் விளைதிறன் மிக்க ஆசிரியராக சமூக அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது.

## நம்புட்டான் படுத்தும் பாடு

தற்போது நம்புட்டான் சீசன் ஆரம்பித்து விட்டது. தெருவோரங்களில் எங்கு பார்த்தாலும் நம்புட்டான் பழ வியாபாரம் சூடு பிடித்துள்ளமையைக் காண முடி கின்றது. ஆனால் விலைகளில்தான் பலத்த வேறுபாடு காணப்படுகின்றது.

சில வியாபாரிகள் 100 ரூபாவுக்கு 15 பழங்களை விற்கிறார்கள். சிலர் 13 பழங்களும், வேறு சிலர் 10 பழங்களும் என விற்பனை செய்வதைக் காண முடிகின்றது. ஒரு சீரான விலையில் பழங்களை விற்பனை செய்தால் நல்லது.

அதேவேளை கண்ட கண்ட இடங்களில் எல்லாம் நம்புட்டான் பழங்களின் கோதுகள் வீசப்பட்டுக் கிடப்பதையும் காண முடிகின்றது.

சிலர் பஸ்களில் பயணிக்கும் போதும் தமது சிறுபிள்ளைகளுக் குக்கூட நம்புட்டான் பழங்களை உண்ணக் கொடுக்கின்றனர். இந்தப் பழங்கள் தொண்டைக்குள் அடைத்தால் விளைவு விபரீத மாகத்தான் முடியுமென்பதை இவர்கள் ஏனோ உணர்வதில்லை.

நம்புட்டான் பழங்கள் வருடத்தில் ஒருமுறைதான் கிடைக்கக் கூடியவை. இதை வாங்கி உண்பதில் அனைவருக்கும் ஆர்வம் இருப்பதும் இயற்கைதான். ஆனாலும் அதிலும் சில ஒழுங்குமுறைகள் உள்ளதென்பதை நாம் மறந்து விடக்கூடாது.

*மா.புஸ்பராசா கொக்குவில்*

## ஒரு வீதிக்கு 2 பெயர்கள் எப்படி சாத்தியம்?




பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் இருந்து யாழ் பல்கலைக்கழகம் முன்பாக கடந்து சென்று காங்கேசன்துறை வீதியில் உள்ள நாச்சிமார் கோயில் வரையிலுமாக முடியும் வீதி இராமநாதன் வீதி என்று தான் அழைக்கப்படுகின்றது . ஆனால் தற்போது நாச்சிமார் கோவில் வீதி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்னுமொரு பெயர்ப் பலகை நடப்பட்டுள்ளது. வீதிப்பெயரிடல் பொதுவாக மாநாகரசபை, பிரதேசசபைகளின் அனுமதியுடன்தான் செய்யப்படுவது வழக்கம். அப்படியாயின் இதற்கு யாழ் மாநகரசபை எவ்வாறு அனுமதி வழங்கியது. ? வீதிப் பெயரை எவ்வாறு மாற்ற முடியும்? யாழ் மாநகரசபை பதிலளிக்குமா?

அந்த வீதியின் வலது பக்கத்தில் உள்ள பெயர்பலகை இராமநாதன் வீதி என்கிறது .அது மாநகரசபையினால் நேரடியாக நடப்பட்டது. இடது பக்கம் உள்ள பெயர்பலகை நாச்சிமார் கோயில் வீதி என்கிறது அது மாநாகரசபை சின்னத்துடன் சிறீலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் நடப்பட்டுள்ளது. ஒருவீதிக்கு 2 வெவ்வேறு பெயர்களில் பெயர்ப்பலகை நடப்பட்ட அதிசயம் இங்குதான் நடக்கிறது .

இது குறித்து விசாரணைநடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப் படுமா?

*த.தவரூபன் , திருநெல்வேலி*

## பயணிகளின் இடர் நீங்குமா?

மந்திகை மருத்துவமனைக்கு அருகில் அமைந்திருக்கும் பஸ்தரிப்பிடத்தில் பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


இங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பஸ்தரிப்பிடத்துக்கு முன்பாக மஞ்சள்கோடு இடப்பட்டமையால் அங்கு பஸ்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல முடியாதெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் அதற்கு மேற்குப் பக்கமாகச் சற்றுத் தூரத்தில் பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு பயணிகள் காத்து நிற்பதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஒதுங்கி நிற்பதற்கு மரங்களோ, கட்டடங்களோ இல்லாததால் மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் பயணிகள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் வீதிக்கு மிக அருகில் பஸ்தரிப்பிடக் குறியீடு அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு காத்து நிற்பதிலும் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதைவிட சில பஸ் சாரதிகள் பழைய பஸ் தரிப்பிடத்திலும் பஸ்களை நிறுத்திப் பயணிகளை ஏற்றிச் செல்வதால் பயணிகள் அங்கு நிற்பதா? அல்லது புதிய பஸ் தரிப்பிடத்தில் நிற்பதா? என்ற குழப்பத்திலும் ஆழ்ந்து விடுகின்றனர். இந்தக் குழப்பத்துக்கும் ஒரு முடிவு கட்டப்பட வேண்டும்.

இதேவேளை புதிய பஸ் தரிப்பிடத்தில் பயணிகள் தங்கி நிற்பதற்கு வசதியாக கட்டடம் ஒன்று அமைக்கப் படுமாயின் பெரும் உதவியாக இருக்கும். உரிய அதிகாரிகள் இதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

*கு.இராமச்சந்திரன் புலோலி*

### கேலிச் சித்திரம்



# என்ன செய்யப் போகின்றீர்கள்?

மறுபடியும் தேர்தல் வந்திருக்கின்றது. இம்முறை தேர்தல் களம், கடந்த காலங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றது. தென்னிலங்கையில் மாத்திரம் அல்ல, வடக்கு - கிழக்கிலும் தேர்தல் களம் புதியதொரு சூழ் நிலையிலேயே உள்ளது.

2009 ஆம் ஆண்டு வரையிலுமான தேர்தல்களில், தமிழ் மக்களின் தீர்மானிக்கும் சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்களின் தெரிவாக இருந்தது. தமிழ் மக்களின் ஒற்றுமை சிதையக் கூடாது என்பதற்காக, தமிழ் மக்களை ஓரணியில் வாக்களிக்கச் செய்து, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, தமிழீழ விடுதலைப் புலிகள் திகழச் செய்தனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் களத்தில் இல்லாத நிலையில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமை மீண்டும் கேள்விக்குறியாக்கப்பட்டது. வாக்குகள் சிதைக்கப்பட்டன. பல்வேறு கட்சிகளும் - சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டன. அப்போது தென்னிலங்கையில் பலமான சக்தியாக மஹிந்த ராஜபக்ஷ இருந்தார். அவரது ஆதிக்கம் வடக்கிலும் இருந்தது. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் என்பது, தமிழ் மக்களுக்கு வெறுப்பின் அடையாளமாகவே இருந்தது. வடக்கு - கிழக்கில் வாக்களிப்பு வீதம் மிக மோசமாகவே இருந்தது. ஆனால் தற்போதைய நாடாளுமன்றத் தேர்தல் இவற்றிலிருந்து மாறுபட்டு நிற்கின்றது. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் வடக்கில் நடந்தேறிய மூன்று தேர்தல்களின் வாக்குப் பதிவுகள் மிக உயர்வாகவே இருக்கின்றன. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தத் தேர்தல்களில் அமோக வெற்றியைப் பதிவு செய்திருந்தது.

இவ்வாறான புதிய மாற்றத்தின் பின்னணியிலேயே தற்போதைய தேர்தலை தமிழ் மக்கள் எதிர்கொள்கின்றனர். களத்தில் பல்வேறு கட்சிகள் இறங்கக் காத்திருக்கின்றன. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், மஹிந்தவினால் திட்டமிட்டு எவ்வாறு வாக்குப் பிரிப்புக்காக - கூட்டமைப்பின் சிதைவுக்காக - கட்சிகள் களமிறக்கப்பட்டனவோ அதே போன்ற நிலையே தற்போதும் ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்திருந்த நிலையில், அதனைக் கேள்விக்குறியாக்குவது தற்போது களமிறங்கியுள்ள கட்சிகள் - களமிறங்கவுள்ள சுயேட்சைக்குழுக்களின் முழுநேரப் பணியாக இருக்கின்றது.

இவ்வாறு களமிறங்கியுள்ள கட்சிகள், தாங்கள் ஏன் களமிறங்குகின்றோம், என்ன செய்யப் போகின்றோம், 5 வருட கால நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் என்னத்தைச் செய்வோம் என்பதை மக்களுக்குச் சொல்லவில்லை. மாறாக, மக்கள் மத்தியில் இருக்கின்ற ஒற்றுமையைச் சிதைக்கும் விதத்தில் - ஏனைய கட்சிகளுக்கு சேறு பூசும் விதத்திலான பரப்புரைகளையே முன்னெடுத்துள்ளனர்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள் நம்பியிருந்த ஆயுத பலம் இல்லாமல் செய்யப்பட்டு விட்டது. இனி இருக்கின்ற ஜனநாயகப் பலத்தை அவர்கள் பல தடவைகள் ஒற்றுமையாகப் பயன்படுத்தியும் அதன் பயன் அறுவடை செய்யப்படவில்லை. இனியும் அதே நிலைமை தொடரக் கூடாது.

எனவே தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக என்னத்தை முன்வைக்கப் போகின்றோம் ? அதை எப்படி முன்னெடுக்கப் போகின்றோம் ? அடுத்த 5 ஆண்டு காலத்தில் அதனைச் செய்து முடிப்பதற்காக வைத்துள்ள திட்டம் என்ன ? என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

சில விடயங்களில் இரகசியம் பேணப்பட வேண்டும். ஆனால் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை யாருக்கு இட வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு, தாங்கள் வாக்கிடுபவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரிந்தால்தான் பொருத்தமானவர்களைத் தேர்வு செய்ய முடியும்.

எனவே அரசியல் கட்சிகள் சேறு பூசுவதை விடுத்து, செய்ய இருப்பதை வெளிப்படுத்துங்கள். வாக்குக்காக வீடு தேடி வரும் எந்த அரசியல்வாதியிடமும், எங்கள் உரிமையைப் பெற்றுத் தர நீங்கள் வைத்திருக்கும் திட்டம் என்ன என்பதை மக்கள் கேட்க வேண்டும். இதனை விடுத்து, சேறு பூசல்களுக்கு கைதட்டிக் கொண்டிருந்தால், அடுத்த 5 ஆண்டு காலத்திலும் விடிவு என்பது கிடையாது.

பத்தி எழுத்து

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## வியூகம் அமைத்து செயற்பட வேண்டும்


2015 ஜனவரி 8 ஆம் திகதி 60 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களித்து அப்போது அதிக பிரசித்தமில்லாத ஒரு மனிதராகவிருந்த மைத்திரிபால சிறிசேனவை இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்து ஒரு ஜனநாயகப் புரட்சியை மலரவிட்டார்கள். துரதிர்ஷ்டவசமாக அவ்வாறு புரட்சியைத் தோற்றுவித்த மக்கள் அனைவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கவில்லை. வேறு ஒன்றிணைந்த அமைப்பைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கவில்லை. பல கட்சிகள், பல்வேறு சிந்தனைகளைக் கொண்டவர்களாக இருந்தனர். அவர்களுக்குள் அரசியல் கொள்கைகள், சமயக்கோட்பாடுகள் என்பவற்றில் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் காணப்பட்டன.

இருந்தாலும், இந்த வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒருமைப்பாட்டை அலலது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு ஆட்சியை முன்னெடுப்பது ஜனாதிபதிக்குப் பிரச்சினையாகவே இருந்தது. என்றாலும் அவர் தாம் ஒப்புக்கொண்ட காலக்கெடுவுக்குள் சில வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைந்தார். சிலவற்றில் வெற்றியும் பெற்றார். ஆனால் தாம் சார்ந்திருந்த கட்சியைத் தமது தலைமையின் கீழ் ஒன்றிணைத்துக் கொள்ள அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அதிக பயன் அளிக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் அந்தக் கட்சியில் இருந்த முக்கியமான தலைவரும், அவரைத் தழுவி நின்ற கட்சி முக்கியஸ்தர்களும் ஊழல், இலஞ்சம் நிர்வாகச் சீர்கேடுகள் புரிந்தவர்களாகவும் அவைகளுக்குத் துணைபோனவர்களாகவும் அடையாளப்படுத்தப்பட்டமையே. இது ஒருபுறமிருக்க, அப்படியானவர்களே பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களின் இன உணர்வுகளைத் தூண்டி அதன் மீதே தமது தலைமைத்துவத்தை நிலை நிறுத்திக் கொண்டவர்கள். அதனால்தான், சிறுபான்மை இன மக்களின் கோரிக்கைகளையெல்லாம் கொச்சைப்படுத்திக் கொண்டும், இனக் குரோதத்தைத் தூண்டி விட்டுக் கொண்டும் அவர்களால் ஒரு பகுதி மக்களுக்கு மாத்திரமே தலைமை வகித்துக் கொண்டு இருக்கமுடிகிறது. இப்பொழுது ஜனாதிபதி சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் தலைமையில் செயல்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இரண்டு துருவங்களாகப் பிரிந்து நிற்பது போல் தெரிகிறது.

சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் பொதுத் தேர்தலின்போது எவ்வாறான நிலைப்பாட்டில் தத்தமது பரப்புரைகளை நிகழ்த்தப் போகின்றன என்பது நிச்சயம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவதானிக்கப்படுவதாக இருக்கும். முழுத் தேசத்தின் மீதும், மக்கள் மீதும் அக்கறை காட்டுகின்ற கட்சிகளே சிறுபான்மை மக்களால் ஆதரவளிக்கப்படும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. முன்னாள் ஜனாதிபதியும் அவரது பங் காளிகளும் எவ்விதமான நிலைப்பாட்டை எடுப் பார் கள் என்பது ஏற்கனவே மெதமுலனவில் அவர் நிகழ்த்திய உரையில் கோடி காட்டப் பட்டுவிட்டது.

ராஜபக்ஷ எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர்த்து, அவரது சொந்த ஆளுமையை வைத்தே அதனை முன் நகர்த்துவதாய் இருக்கும். அவருடன் இணைந்துள்ள எந்த ஒரு கட்சியும், தனித்தோ தமது தலைவரின் செல்வாக்கில் மட்டுமோ வெற்றியை அணுகுவது சாத்தியமில்லை. ஒரு காலத்தில் நாட்டின் பெரிய கட்சிகளாக விளங்கிய கம்யூனிஸ்ட், சமசமாசக் கட்சிகளும்கூட மஹிந்தவின் நிழலில் இன்று நிற்பதைப் பார்க்கிறோம். டியூ குணசேகர, திஸ்ஸவிதாரண, விமல்வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன முதலியவர்கள் எல்லாம் மஹிந்தவின் அடிவருடிகளாக இன்று காணப்படுகிறார்கள்.

இவ்வாறு களநிலைமைகளை உன்னிப்பாகப் பார்க்கும்போது, மீண்டும் ஓர் இணைப்பாட்சி தோன்றுவது சாத்தியம் போல் தெரிகிறது. எனவே தான் எந்த ஒரு நிலைமையையும், தமிழ் மக்களின் ... ஷைகளுக்குக் குந்தகம் விளையாத வகை ... தரப்பினர் இப்போதே வியூகம் அமைத்து செய... ட ... டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது ... ன் ... அவர்கள் கருத்தில் கொள்வது ...



# மஹிந்த ராஜபக்ஷ சுயபுத்தியுடன் செயற்பட வேண்டிய தருணமிது

■ வந்தியத்தேவர்

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாகத் தெரிவித்து விட்டார். மஹிந்த கட்சியில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக போட்டியிட ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துவிட்டார்; ஐ.ம.சு. முன்னணியின் பிரதம வேட்பாளர் மஹிந்த தான் என கெஹலிய ரம்புக்வெல, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன போன்றவர்கள் தென்பகுதி மக்களை ஏமாற்றி வந்த நிலைக்கு ஜனாதிபதி முற்றுப்புள்ளியிட்டுள்ளார். தென்பகுதி அரசியல்வாதிகளில், மிகவும் மோசமாக நடந்து கொண்டு நாட்டைச் சீர்குலைத்த ஒருவர் மீள பிரதமர் பதவியைக் குறிவைத்துள்ளமை எதிர்காலத்தில் நாட்டை அதலபாதாளத்துக்குக் கொண்டு செல்லவே வழிவகுக்கும் என்ற உண்மையை பல்வேறு திசைகளில் இருந்து புத்திஜீவிகள்சுட்டிக் காட்டிய போதும் தயங்காது ஊழல் மோசடிகளை மறைக்க, முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும் என்பதுபோல் ஊழலையும் மோசடிகளையும், ஊழல் மோசடிவாதிகளால் தான்மறைக்க முடியும் என முடிவு செய்து வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன போன்றவர்கள் ஊழல் சக்கரவர்த்தியான மஹிந்தவுக்கு மீண்டும் முடிசூட ஐ.ம.சு. முன்னணியைப் பயன்படுத்த முனைந்தனர். மைத்திரி எந்தச் சவால்களையும் நாட்டுக்காக ஏற்கத் தயாராக திட சங்கற்பம் பூண்டிருந்தார் என்பதால் ஐ.ம.சு. முன்னணியூடாக தேர்தலுக்கு நிற்க முயன்ற மஹிந்தவைத் தூக்கியெறிந்து தனது முதல்கட்ட நடவடிக்கையை வெற்றிகரமாக்கியுள்ளார். மஹிந்த தன்னையும் தன்னைச் சார்ந்த மோசடிக்கும்பல்களையும் பாதுகாக்க வேண்டிய தேவையில் உள்ளார். அவர் எதிர்பார்த்திருந்த பிரதான கட்சி அவரை உதறித்தள்ளியதால், மனமுடைந்தாலும் முற்று முழுதாக மனமுடைந்து தேர்தலில் இருந்து ஒதுங்கிவிடுவதற்கு அவர் தயாராக இல்லை. ஒரு பெரிய பதவியில் அதாவது ஜனாதிபதிப் பதவியில் இருந்த மனிதர் அந்த உயர் பத விக்கான கௌரவத்தை மிதித்து விட்டு, மக்களால் விரட்டியடிக்கப்பட்டபின் அதற்கும் கீழான ஒரு பதவிக்குப் போட்டியிட முன்வந்தமை, அவரது பதவிமோகத்தை வெளிப்படுத்துகிறது. இது, பெரிய நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவப் பதவியில் இருந்தவர் பின்னாளில் ஒரு சாதாரண அலுவலக உதவியாளர் பதவியாவது பெற்றுவிடத் துடிப்பதுபோல் உள்ளது. ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகித்த எவரும் தாங்கள் பதவியை விட்டு விலகிய பின்னர் ஓய்வெடுத்துக் கொண்டு ஆறுதலாக இருப்பது தான் உலக வழமை. மஹிந்த ஜனாதிபதி பதவியில் இருந்து ஓரங்கட்டப்பட்டதும் கௌரவமாக மெதமுலன வீட்டில் ஆறுதலாக இருந்து வேண்டுமானால் விகாரைகளில் தர்மபோதனைகளை குழந்தைகளுக்குக் கூறி சந்தோசமாக தமது வாழ்க்கையைக் கொண்டு செல்லலாம். அதற்கு மாறாக நாட்டையும் விகாரைகளையும் களங்கப்படுத்தும் நிலைக்குத் திரும்பியிருக்கக் கூடாது. தனது சகாக்களான மோசடிக்கும் பல்களின் பேச்சுக்கு எடுபட்டு மீளவும் அரசியலில் புக முனைந்தமை ஒரு தவறான நடவடிக்கையாகவே தென்படுகிறது. இப்போது மஹிந்த ராஜபக்ஷ தனியான ஒருகூட்டணியில்போட்டியிடுவார் என பசில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். அவர் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியில் போட்டியிடுவாரெனவும் சில தக வல்கள் வெளியாகியுள்ளன. இது தேசப்பற்று என்றால் என்ன வென்றே தெரியாத விமல் வீரவன்ஸ போன்றவர்களின் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கமாகும். மஹிந்தவும் அவரது ஆதரவாளர் களும் என்னதான் இனத்துவேஷத்தைக் கிளப்பி ஆட்சியைப் பிடிக்கலாமெனக் கனவு கண்டாலும், அது இந்த முறை சாத்தியமாகுமா என்பதும் கேள்விக்குரியதே. மஹிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுவதையோ வேட்புமனுத்தாக்கல் செய்வ தையோ கூட, தென்பகுதியில் உள்ள கணிசமானவர்கள் விரும்பவில்லை போல் தெரிகின்றது. அவரைப் போட்டியிட வேண்டாம் எனக் கோரி ஆர்ப்பாட்டங்களும் இடம் பெறத்தொடங்கியுள்ளன. சி... தொழிற்சங்கங்களும் - அரசியல் கட்சிகளும் இணைந்து இதற்கான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளன. மஹிந்தவைத் தோற்கடிக்க கூட்டணி அமைக்கத்தயாராக உள்ளதாக பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவும் தெரிவித்துள் ளார். என்னதான் பெரிய மக்கள் ஆதரவு தனக்கு இருப்பதாக அவர் கருதிக்கொண்டாலும் பேரினவாதம் தொடர்ந்தும் முன்னர் போல் வீச்சாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. மாணவி வித்தியாவின் கொடூரப்படுகொலைக்கு எதிராக சிங்கள மக்களும் கிளர்ந்தெழுந்ததை நோக்கும்போது இதை ஓரளவுக்காவது நிச்சயப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு நிகழ்ந்த துயரத்தில் சிங்கள மக்களும் பங்கு கொண்டு இனநல்லுணர்வுக்கு வழங்கியுள்ள ஆதரவு இதனைவலியுறுத்துகின்றது. தொடர்ந்தும் இனவாத அரசியலை முன்னெடுப்பவர் களுக்கு வரப்போகும் தேர்தல் ஓர் எச்சரிக்கையாகவும் அமையக் கூடும். தற்போதைய நிலையில் வகுப்புவாதம் சாத்தியமில்லை என்பதால்மஹிந்த வெளவாலாக மாறித் தொங்கினாலும் கூட, அவருக்கு தேர்தலில் போதிய ஆதரவு கிடைக்கும் என்பது நிச்சய மற்றதே. ஏற்கனவே ஒருமுறை தோல்வி கண்டவர் தொடர்ந்தும் தோல்வியடைய விரும்பமாட்டார். கூட இருப்பவர்கள் உண்மை நிலைமைகளை மறைத்து அவரைத் தேர்தலில் நிறுத்தித் தோல்வியில்துவளவைக்கமுனைகிறார்கள் என்பது தான் உண்மை. சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதியில்லையா? என்பார்கள். விமல் வீரவன்ஸ மற்றும் தன்னுடன் நிற்பவர்களாகக் காட்டிக்கொள்பவர்கள் என்னதான் கயிறு கொடுத்தாலும் மஹிந்த தன் புத்தியைத் தீட்டிப் பார்க்க வேண்டும்.

> மஹிந்த ஜனாதிபதிப் பதவியில் இருந்து ஓரங்கட்டப்பட்டதும் கௌரவமாக மெதமுலன வீட்டில் ஆறுதலாக இருந்து வேண்டுமானால் விகாரைகளில் தர்மபோதனைகளை குழந்தைகளுக்குக் கூறி சந்தோசமாக தமது வாழ்க்கையைக் கொண்டு செல்லலாம். அதற்கு மாறாக நாட்டையும் விகாரைகளையும் களங்கப்படுத்தும் நிலைக்குத் திரும்பியிருக்கக் கூடாது.

# மஹிந்தவின் மீள் பிரவேசம் நாட்டுக்கு நன்மை பயக்குமா?

சேரலாதன்

என்னையும் இந்த நாட்டையும் நேசிக்கும் மக்களின் அழைப்பை என்னால் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் நிராக ரிக்க முடியாது. நிராகரிக்கும் மன நிலையும் எனக்கு இல்லை. ஆகவே இந்த நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கிப் போட்டியிடத் தீர்மானித்துள்ளேன். இவ்வாறு மெத முலனவில் அமைந்துள்ள தனது இல்லத்தில் வைத்து முன்னாள் ஜனபதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு தமது தேர்தலில் போட்டியிடுகின்ற விருப்பத்தைத் தெரிவித்திருக்கின்றமை எவருக்குமே ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. ஏனென்றால் மஹிந் தவின் முடிவு ஏற்கனவே எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால் இந்த நாட்டில் வாழ்கின்ற ஒட்டுமொத்த மக்களும் தன்னை அரசியலில் ஈடுபடுமாறு கேட்பது போன்றதொரு தோற்றத்தை ஏற்படுத்துவதைத் தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. அவர் மீது மட்டுமல்லாது அவரது குடும்பத்தினர், உறவினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் மீதும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணை களும் இடம்பெற்று வருகின்றன. தற்போதைய அரசின் மந்தமான நடவடிக்கைகள் காரணமாக விசாரணைகளில் மந்தநிலை காணப்படுகின்றதே தவிர, அவை கைவிடப்படவில்லை. தற்போது மஹிந்த அணியில் உள்ளவர்களில் பல ரும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. ஆகவேதான் தம்மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடும் பொருட்டு மஹிந்தவை மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துவதற்கு இவர்கள் துடியாய்த் துடிக்கின்றனர்.

இதேவேளை – தெற்கிலுள்ள பல பிரதேசங்களிலிருந்தும் மக்கள் மஹிந்தவின் இல்லத்துக்கு ஏற்றி இறக்கப்பட்டதாகப் பிறிதொரு தகவல் தெரிவிக்கின்றது. சில ஆயி ரம் பேர் இவ்வாறு அங்கு திரட்டப்பட்டிருக்கலாம். ஆனால் தேர்தல் வெற்றிக்கு இந்தத் தொகை போதுமானதாக அமைந்து விடாது என்பது தான் உண்மை நிலையாகும்.

மேலும் புலிகளுக்குச் சார்பானதொரு அரசாகவே தற்போதைய அரசு விளங்குவதாக மஹிந்த குறிப்பிட்டுள்ளமை எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை. புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் இருந்த கருணாவை ஆதரித்து அமைச்சரவையிலும் இடம்பெறச் செய்தவர் மஹிந்த என்பதை இந்த நாடே அறியும். அது மட்டுமல்லாது கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனும் அவரது செல்லப்பிள்ளையாகவே விளங்கினார். இந்த விடயங்களை மஹிந்த மறந்து விட்டவர் போன்று நடந்து கொள்கின்றமை அவரது குள்ளத் தனத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை – முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க மஹிந்த தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் ஊன்றிக் கவனிக்கத் தக்கன.

மக்களால் விரட்டி அடிக்கப்பட்ட இந்த நபர் வாய்மூடி இருக்க வேண்டும். அட்டை போன்று அரசியலில் ஒட்டிக்கொண்டு மக்களின் இரத்தத்தைக் குடிக்க நினைக்கக்கூடாது. நாட்டில் சட்டமும், நீதியும் சரியாகச் செயற்பட்டால் இன்று வெளி

“

**தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் மஹிந்த மீண்டும் அரசியல் பிரவேசம் செய்வதை அவர்கள் அறவே விரும்பவில்லை என்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் அவரது ஆட்சியில் அந்த மக்கள் அனுபவித்த கொடுமைகள் மிகக்கொடியவை. பொதுபல சேனா போன்ற இனவாத அமைப்புக்களுக்கு நீரும் எருவும் இட்டு வளர்த்த பெருமை மஹிந்த தரப்பினரையே சாரும்.**



யில் திரிகின்ற ஒருசிலர் சிறையில் தான் இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைதான் இந்தக் கட்டுக்குள் தள்ளப்பட்ட ஒன்றாகியுள்ளது. மஹிந்தவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாகப் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென ஒரு சாரார் அவரை வற்புறுத்தி வருகின்றனர். இதற்கு அவர் இணங்குவாராயின் பெரும் எதிர்ப்புக்களை அவர் எதிர்நோக்க வேண்டி நேரிடும். அவரது நேர்மையும் கேள்விக்குரியதாக மாறி விடும்.

இதேவேளை – மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போட்டியிடுவதற்கென சந்திரிகா புதிய கட்சியொன்றை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அன்னச்சின்னத்தில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேன போட்டியிட்ட போது ஆதரவளித்த கூட்டணிக் கட்சிகளுடனேயே அவர் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பாகப் போட்டியிடுவதற்கு மஹிந்த அனுமதிக்கப்பட்டால் மைத்திரி அணியைச் சேர்ந்த பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது சந்திரிகா அணியுடனோ இணைந்து செல்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்டவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது மஹிந்தவின் மீள் வருகை குழப்பமானதொரு நிலையை ஏற்படுத்தி விட்டது என்றுதான் கூற வேண்டும்.குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் நிலையில்தான் மஹிந்த உள்ளார். அவருக்கு குழப்பங்களையும், பிணக்குகளையும் பற்றிக் கவலையே இல்லை. பதவி ஒன்றே அவரது இலக்காக அமைந்துள்ளது. அந்தப் பதவியின் மூலமாகத் தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றிக்கொள்வதே அவரது இலட்சியமாகவுள்ளது. ஆனால் நாட்டின் மீதும் மக்களின் மீதும் பாசமுள்ள ஒருவராகத் தன்னைக் காட்டிக் கொள்வதற்கு அவர் தவற வில்லை. அவரது உண்மையான சொரூபத்தைப் புரிந்து கொண்டவர்களுக்குத்தான் உண்மை தெரியும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்று எதிர்வரும் தேர்தலிலும் சிறுபான்மை மக்களின் ஆதரவு மஹிந்தவுக்குக் கிடைக்கப்போவதில்லை. அவரது சமீப கால இனவாதக் கருத்துக்கள் அந்த மக்களை வெறுப்படையச் செய்துவிட்டன. மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வெற்றி வாய்ப்பு பிரகாசமானதாக மாறிவிடும்.

தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் மஹிந்த மீண்டும் அரசியல் பிரவேசம் செய்வதை அவர்கள் அறவே விரும்பவில்லை என்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் அவரது ஆட்சியில் அந்த மக்கள் அனுபவித்த கொடுமைகள் மிகக்கொடியவை. பொதுபல சேனா போன்ற இனவாத அமைப்புக்களுக்கு நீரும் எருவும் இட்டு வளர்த்த பெருமை மஹிந்த தரப்பினரையே சாரும். குறிப்பாக பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் எல்லை மீறிய நிலையில் காணப்பட்டபோதிலும், மஹிந்த அரசு அதனைக் கண்டு கொள்ளவே இல்லை. மஹிந்த அரசில் முக்கியமான அமைச்சராக விளங்கிய ரிஷாத் பதியுதீனின் அமைச்சு அலுவலகத்தில் புகுந்து தேடுதல் நடத்தும் அளவுக்கு அவர்கள் துணிவு பெற்றவர்களாக அன்று திகழ்ந்தனர். பொதுபல சேனா வின் நடவடிக்கைகளுக்கு கோத்தபாயவின் முழு ஆதரவு கிடைத்து வந்ததால் எவராலும் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஆனால் மஹிந்தவின் தோல்விக்கு பொதுபல சேனாவும் ஒரு காரணமாக இருந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவை ஒதுக்கித் தள்ளி வைக்கும் தமது நிலைப் பாட்டிலிருந்து நழுவி விடாமல் இருப்பாராயின் மஹிந்த மீண்டுமொரு தடவை தோல்வியைத் தழுவுவது நிச்சயமானதாகவே இருக்கும். மாறாக அவரது வெற்றிக்கு மைத்திரி உதவுபவராக இருந்துவிட்டால் இந்த நாடும் மக்களும் அவரை மன்னிக்கப்போவதில்லை.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 5 | | | 7 | |
| 3 | | | 6 | | | 8 | | |
| | | 2 | | | 3 | | | 6 |
| | | | | 7 | | | 3 | |
| | | 1 | | | | 4 | | |
| | 5 | | | 1 | | | | |
| 7 | | | 1 | | | 6 | | |
| | | 4 | | | 6 | | | 8 |
| | 1 | | | 9 | | | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 8 | 6 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 8 | 1 | 2 | 3 | 9 | 7 | 4 | 6 |
| 6 | 4 | 2 | 7 | 1 | 5 | 9 | 8 | 3 |
| 1 | 9 | 3 | 6 | 8 | 2 | 5 | 7 | 4 |
| 2 | 6 | 7 | 4 | 5 | 3 | 1 | 9 | 8 |
| 8 | 5 | 4 | 9 | 7 | 1 | 3 | 6 | 2 |
| 4 | 2 | 6 | 3 | 9 | 7 | 8 | 1 | 5 |
| 7 | 1 | 8 | 5 | 2 | 6 | 4 | 3 | 9 |
| 9 | 3 | 5 | 1 | 4 | 8 | 6 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | – | 90 | 40 | 60–80 | 80 | 80 | 40 |
| கத்தரி | 40 | 50 | 50 | 30 | 30–40 | 20 | 80 | 10–15 |
| கரட் | 120 | 130 | 160–220 | 120 | 200–250 | 160 | 220 | 240 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 40 | 50–60 | 60 | 80 | 45–50 |
| பயிற்றை | 100 | 60 | 140 | 80 | 100–110 | 60 | 140 | 90–100 |
| பாகல் | 140 | 150 | 130 | 180 | 160–180 | 200 | 150 | 130–140 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 90 | – | 100 | – | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | – | 80 | 100–120 | 100 | 100 | 90–100 |
| சி.வெங்காயம் | 120 | 100–150 | 120 –160 | 160 | 100–140 | 160 | 200 | 110–140 |
| பூசணி | 30 | 30 | 40 | 20 | 20–30 | 20 | 60 | 15 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 70 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 60–80 | 40 | 70 | 25–30 |
| கீரை | 20 | 20 | 30 | 05–07 | 15–20 | 10 | 30–35 | 15–20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 20 | 30 | 20 | 20 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 160 | 300 | 280 | 400 | 190–220 | 350 |
| புடோல் | 60 | 60 | 60 | 80 | 60–80 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 90 | 100 | 80 | 100 | 80 | 70 |
| வெண்டி | 120 | 120 | 100–140 | 120 | 120 | 60 | 120 | 70 |
| போஞ்சி | 200 | 150 | 140 | 160 | 140–160 | 140 | 240 | 120 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 160 | 100–120 | 200 | 160 | 130–140 |
| தேங்காய் | 50 | 25–30 | 50 | 40–50 | 40–60 | 50 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 | 90–100 | 90 | 120 | 100–110 |
| தேசிக்காய் | 100 | 180 | 120 | 80 | 50–60 | 60 | 160 | 50–60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30–40 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 130 | 100 | 120–140 | 140 | 200–240 | 200 | 200 | 190 |
| இராசவள்ளி | 120 | – | 120 | – | 80–120 | – | 180 | 90–100 |
| முருங்கைக்காய் | 300 | 150 | – | 220 | 150–200 | 200 | – | 150 |

## நாளை

ஆனி-20
ஞாயிற்றுக்கிழமை
05.07.2015
திதி: சதுர்த்தி
பி.இ. 01.26 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பி.இ.12.32 வரை
சுபநேரம்:
08.57-10.27 வரை
இராகுகாலம்:
04.27-05.57 வரை
சங்கடஹரசதுர்த்தி

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சுய வலிமை பெற்ற மனிதர்களாக ஆகுங்கள்

கண்டனச் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக்கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள். உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள். நமக்குத் தேவை, இரும்பைப் போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும் தாம். சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள். உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளாவனாகவும் இரு. பிரம்மச்சரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே எல்லா விதமான கல்வியறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்று விட முடியும். அத்தகையவன் ஒரே ஒரு முறை, தான் கேட்டதையும் அறிவதையும் மறவாமல் நினைவில் வைத்துகொள்கிறான். இப்படிப்பட்ட பிரம்மச்சரியம் நமது நாட்டில் இல்லாமற் போனதால்தான் எல்லாமே இன்று அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன. தைரியமும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர்கள் பலரின் நன்மைக்காக, பலரின் சுகத்துக்காக தங்களைத் தியாகம் செய்துதான் ஆக வேண்டும்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 600 | 600 | 650 |
| நண்டு | 200 | 400 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 600 | 500 | – | – |
| பாரை | 550 | 500 | – | 450 | 600 | 360 |
| சுறா | 600 | 500 | – | 600 | 600 | – |
| சீலா | 200 | 400 | 500 | 300 | 400 | 300 |
| விளை | 600 | 400 | 400 | 400 | 400 | 320 |
| முரல் | 250 | 400 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 600 | 800 | 400 | 450 | 400 | – |
| ஒரா | 300 | 400 | 300 | 350 | 400 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 100 | 250 |
| நகரை | 200 | 350 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 100 | 200 | 70 |
| ஒட்டி | 200 | 300 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 100 | 200 | 300 | 120 |
| பாலை | 300 | 300 | 300 | 300 | 300 | – |
| வாழை | 100 | 200 | – | 200 | 200 | – |
| கொய் | 100 | 200 | 100 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 200 | 200 | 200 |

# கொலஸ்ரோலை குறைக்கும் குடைமிளகாய்



குடைமிளகாயில் விற்றமின் ஏ, பி,சி, கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்துகள் உள்ளன. குடைமிளகாய் காரமற்றது என்றாலும், கலர் கலராய் உணவுகளுக்கு அழகூட்டுவது அதின் சிறப்புத் தன்மை. குடை மிளகாயின் சத்துகள் வாதம் தொடர் புடைய நோய்கள், வயிற்றுப்புண், மலச்சிக்கல் போன்றவற்றுக்கு எதிராகச் செயல்படுகின்றன.

கீமோதெரபி, ரேடியோ தெரபி போன்ற சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது வாய்ப்புண் தோன்றும், அவைகளை குடைமிளகாய் கட்டுப்படுத்தும்.

பல் வலி, மலேரியா, மஞ்சள்காமாலை போன்றவைகளை கட்டுப்படுத்தும் சக்தியும் குடைமிளகாயில் உள்ளது. குடை மிளகாயில், ப்ராஸ்டேட் புற்று நோயை உருவாக்கும் திசுக்களின் செயல்பாட்டை மந்தமாக்கும் சக்தி இருக்கிறது என்பது ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

இரத்தத்தில் உள்ள சீனிச் சத்தின் அளவைச் சம நிலைப்படுத்தி, நீரிழிவையும் கட்டுப்படுத்துகிறது.

இதில் கலோரிகள் மற்றும் கொழுப்பு ஆகியவை குறைவாக இருப்பதால், தேவையில்லாத கொலஸ்ஹிரோலின் அளவுகளும் அதிகரிக்காமல் இருக்கும்.

குடைமிளகாயில் உள்ள கேயீன் என்னும் வேதிப்பொருள், பலவிதமான உடம்பு வலிகளைக் குறைக்கிறது.

உடலில் இரத்த ஓட்டம் சீராக இருப்பதோடு, நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். எளிதில் வயதான தோற்றத்தைத் தருவிதையும் தடுக்கும்.

# குருப் பெயர்ச்சிப் பலன்கள்

## மிதுனம்

## உங்களுக்கு எப்படி?

சோதிட சிகாமணி
சிவ.சேதுபாண்டியன்

குரு பகவான் 05-07-2015 முதல் உங்கள் ராசிக்கு 3இல் வருகின்றார். எனவே எதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்கள் உடன்பிறந்தவர் உங்களுக்கு எதிராக மாறலாம். உங்கள் சொத்துக்களை அபகரிக்க நினைப்பார். எனவே எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மைத்துனர்கள் குடும்பத்தில் குழப்பத்தை உண்டு பண்ணுவார்கள். கணவன்– மனைவி உறவில் விரிசல் வரப் பார்க்கும். எனவே மைத்துனர்களை உங்கள் வீட்டுப் பக்கம் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அவர்கள் ஆலோசனைகளும் உங்களுக்கு கெடுதலைத் தரும். உறவினர்களும் உங்களுக்கு ஆதரவாக இல்லை. அதேசமயம் குரு பகவான் பெரிய அளவில் பாதகம் செய்யமாட்டார். சங்கடங்கள் குறையும். குரு பகவான் 3இல் சஞ்சரித்தாலும், உங்கள் சுயஜாதகத்தில் குருபகவான் சிறப்பாக இருப்பாரயானால் தற்போது சிரமங்கள் வராது. குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களிடம் நீங்கள் விட்டுக் கொடுத்துச் செல்லவேண்டும். மேலதிகாரிகள் உங்களுக்கு சாதகமாக இருப்பார்கள். குடும்பத்தில் மிகவும் சிந்தித்துச் செயல்பட வேண்டும். குடும்பத்தில் மட்டுமே தொந்தரவுகளைச் சந்திப்பீர்கள். காதல் திருமணம் செய்ய நினைத்தவர்கள் மிகவும் கஷ்டத்தை அடைவார்கள். அவர்கள் எண்ணம் ஈடேறாது.

**05-07-2015 -23-08-2015**
**குரு, கேது சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் நீங்கள் நல்ல பலன்களை அடைவீர்கள். சுபீட்சத்தை அடைவீர்கள். தொட்ட காரியம் துளிர்விடும். உற்றார்– உறவினர்களால் பலனுண்டு. அவர்கள் இப்போது உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். சகோதர சகோதரிகள், வேறுபாடுகள் மறந்து உதவிக்கரமாக இருப்பார்கள். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பெற்றோர்களால் மருத்துவச் செலவு கூடும். ஒருசிலர் வெளிநாடு போகப் போட்ட திட்டம் நிறைவேறும். மனைவி வழி உறவுகளால் நல்ல செய்திகளும் இலாபங்களும் வந்து சேரும். தூரதேசத்திலிருந்து நல்ல செய்திகள் வந்துசேரும்.

**24-08-2015 - 27-10-2015**
**குரு, சுக்கிரன் சாரத்தில்**

சுக்கிரன் சாரத்தில் குரு பகவான் உலாவரும் இந்த நேரத்தில் மிகவும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும். உங்களது அலட்சியப் போக்கால், கறுப்பாக உள்ளவர்கள் உங்கள் பொருளாதாரச் சரிவுக்கு காரணமாவார்கள். எனவே புதிய நண்பர்கள் சகவாசம் கூடாது. உடல் நிலையில் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும். சுய மருத்துவம் செய்யாமல், மருத்துவரின் ஆலோ சனைப்படி மருந்துவாங்கி சாப்பிட்டால் பக்க விளைவுகள் வருவதைத் தவிர்க்கலாம். பணப் பற்றாக்குறை வராது. ஏதாவது ஒருவகையில் பணம் வந்துசேரும்.

**28-10-2015 - 15-01-2016**
**குரு, சூரியன் சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் உங்களது குடும்பத்தில் எடுத்த காரியமனைத்திலும் ஜெயத்தைக் காணலாம். குழந்தைப் பாக்கியம் இல்லாத தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். பொன், பொருள் சேர்க்கைக்கு குறைவு வராது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து செயற்படுவார்கள். இதுவரை உடல் அசதியையும், அசௌகரியத்தையும் அடைந்த நீங்கள் மிகவும் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நண்பர்களாலும் வெளிவட்டாரப் பழக்கத்தாலும் பொருளாதார உயர்வுகள் ஏற்படும். அக்கம் பக்கம் குடியிருப்பவர்கள் இப்போது உங்களுக்குஉதவியாகஇருப்பார்கள்.



**16-01-2016 முதல் 07-02-2016**
**குரு, சூரியன் சாரத்தில் வக்ரம்**

இந்த காலகட்டத்தில் நீங்கள் எதிர்பாராதது அனைத்தும் நடக்கும். தடையாகும் என்று நினைத்த அனைத்துக் காரியங்களும் வெற்றியாகும். தற்காலிகப் பணிநீக்கம் பெற்ற அரச ஊழியர்கள் மீண்டும் பணியில் சேர்வார்கள். தொழிலாளர் ஒற்றுமை கூடி உற்பத்தி பெருகும். தொழிலதிபர்கள் அதிக இலாபம் பெறுவார்கள். அவர்களது தொழில்களில் இடையூறு எதுவும் வராது. தொழிலாளர்கள் கிடைக்க வேண்டிய சலுகைகள் அனைத்தையும் பெறுவார்கள். பெற்றோர்கள் உடல்நிலை சீராகும்.



**08-02-2016 - 14-06-2016**
**குரு, சுக்கிரன் சாரத்தில் வக்ரம்**

இந்தக் காலகட்டத்தில் பெரிய பாதிப்புகள் எதுவும் வராது. அந்நிய மதத்தவர், அந்நிய மொழியினரால் இலாபங்கள் வந்துசேரும். அயல் நாடு சென்றுள்ள அன்பர்கள் அதிகமான இலாபத்தைப் பெறுவார்கள். அரசியல் பிரமுகர்கள் எடுக்கும் முயற்சி கைகூடும். மக்கள் மத்தியிலும் செல்வாக்கைப் பெறுவார்கள். உடல்நிலை சீராகும். மனதில் ஏற்பட்ட இறுக்கம் குறையும். சேமிப்பு நிலையில் உயர்வுகள் உண்டு. இதுவரை உங்களுக்கு எல்லா வகையிலும் தொந்தரவு கொடுத்துவந்தவர்கள் விலகிச்செல்வார்கள். நீண்டகாலமாக விலகிச்சென்ற சொந்தங்கள் வந்துசேரும்.

**15-06-2016 - 09-07-2016**
**வரை குரு, சுக்கிரன் சாரத்தில்**

வேலை தேடும் இளைஞர்கள், தகுதிக்கேற்ப வேறு மாவட்டங்களில் வேலை செய்ய வாய்ப்புகள் கூடும். ஒருசில இளைஞர்கள் மத்திய அரசில் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். அயல் நாடுசெல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். நல்ல தொழில், வருமானத்தோடு வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். பெற் றோர் வழியில் எதிர்பார்த்த உத விகள் வந்து சேரும். சொந்தத் தொழில் செய்துவருகிறவர்கள் எதிர்பாராத இலாபத்தைப் பெறு வார்கள்.

**10-07-2016 - 1-08-2016**
**குரு, சூரியன் சாரத்தில்**

குருபகவான் கடந்த காலங்களில் ஏற்ற இறக்கங்களைத் தந்த நிலை மாறுபடும். வங்கியில் கேட்ட கடன் வந்துசேரும். விவசாயத்தை விரிவாக்கம் செய்யும் எண்ணம் ஈடேறும். தொல்லை கொடுத்துவந்த எதிரிகள் விலகிச் செல்வார்கள். பெற்றோர்களின் உடல்நலம் சீராகும். மருத்துவச் செலவுகள் குறையும். வீட்டைவிட்டுச் சென்ற மகன் இப்போது வந்துசேருவார். இருக்கும் இடமும் தெரியும். அரச பணி தேடுகின்றவர்கள் நல்ல வேலையை அடைவார்கள். சகோதரர்கள் ஒற்றுமை கூடும். கூட்டுத் தொழில் புரிகிறவர்கள் மத்தியில் இருந்து வந்த கோபம் மாறும். நேசக்கரம் நீட்டுவார்கள். 15 ஆண்டுகளாக குழந்தையில்லாத தம்பதியருக்கும் குழந்தைப் பாக்கியம் கிட்டும். பிள்ளைகள், பெற்றோர்கள் சொல் கேட்டு நடப்பார்கள்.

**அரச ஊழியர்கள்**

குரு 3இல் அமர்ந்து வேலைப்பளுவைக் கூட்டுவார். வேலை செய்யும் இடங்களில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு உண்டு. நல்ல முறையில் செயல் படும் அரச ஊழியர்கள் குருபகவான் அருளால் கூடுதல் வருவாயைப்பெறுவார்கள்.கையூட்டு பெறும் அரச ஊழியர்கள் இந்த வருடம் முழுவதும் நிதானமாகச் செயற்பட வேண்டும்.

**வியாபாரிகள்**

போட்டி வியாபாரிகளின் தொல்லை குறையும். கனிவான பேச்சால் வாடிக்கையாளர்களைக் கவரலாம். வாடிக்கையாளர்கள் உங்களை விட்டுச் சென்றுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கொள் முதல் சரக்குகளில் வியாபாரிகள் உபரி இலாபத்தைப் பெறு வார்கள்.

**தொழிலாளர்கள், தொழிலதிபர்கள்**

தொழிலாளர் மற்றும் தொழிலதிபர்கள் உறவுகளில் விரிசல் வராது. சேரவேண்டிய நிலுவைத் தொகை, பணிக்கொடை போன்றவற்றை முன் வந்து கொடுப்பார்கள். தொழிலதிபர்கள் புதிதாக தொழில் தொடங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். அரசில் எதிர்பார்த்த நிதியுதவி கிட்டும். தொழிலாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**பெண்கள்**

பெண்களைப் பொறுத்தவரையிலும் எதிலும் நிதானமாகச் செல்ல வேண்டும். புதிய பொருள்கள் வாங்கப் போட்ட திட்டத்தை தள்ளி வைக்க வேண்டும். ஒருசிலருக்கு வைத்தியச் செலவுகள் வந்து சேரும். மனம் எப்போதும் சஞ்சலமாக இருந்துவரும். தியானம், ஆலயத்துக்குச் செல்வது கைகொடுக்கும். கணவன்– மனைவி உறவுகளில் விரிசல் வராமலிருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவேண்டும்.

**மாணவர்கள்**

கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். எளிதில் வெற்றி பெறலாமென்று நினைத்து ஏமாந்து விடக்கூடாது. பாடங்களை திரும்பத்திரும்ப படிப்பதன் மூலமே ஞாபகசக்தி கூடும். உயர்கல்விக்காக காத்திருக்கும் மாணவர்கள் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி திறமையைக் காட்ட வேண்டும். உயர் கல்வி பயிலும் மாணவர்கள் சக மாணவர்களுடன் சுமுக உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**விவசாயிகள்**

விவசாயத்தில் கூடுதல் இலாபத்தைப் பெறுவார்கள். பணப்பயிர் நடுகை செய்தவர்கள் மிகுந்த இலாபத்தைப் பெறுவார்கள். கதிரறுக்கும் இயந்திரம் வைத்துத் தொழில் செய்பவர்கள் நல்ல தொழிலாளியிடம் ஒப்படைக்க வேண்டும். நஷ்டம் வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. வெங்காயம், புகையிலை உற்பத்தி செய்கின்றவர்கள் அதிக இலாபத்தைப் பெறுவார்கள்.

**அரசியல் பிரமுகர்கள்**

நீங்கள் செய்துவந்த நல்ல பணிகளை மக்கள் பாராட்டுவார்கள். ஒருசில அரசியல் பிரமுகர்கள், தலைமையால் பாராட்டப்பட்டு புதிய பதவிகளை அடைவார்கள். உங்கள் சுய ஜாதகத்தை முழுமையாகப் பரிசீலித்து, அதற்கான பரிகாரங்களையும் மேற்கொண்டு அரசியல் களத்துக்குச் செல்லுங்கள். வெற்றி உங்கள் பக்கம் தேடிவரும்.

**மிருகசீரிட நட்சத்திரக்காரர்களுக்கு:**

மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்களில் பிறந்துள்ள உங்கள் உடல்நிலையில் சிரமங்கள் எதுவும் ஏற்படாது. கூடுதலான பணவசதிகளைப் பெறுவீர்கள். கல்வி பயிலும் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சியுண்டாகும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும். பூர்வீக சொத்துகளில் இருந்துவந்த பிரச்சினைகள் குறையும். பேச்சு வார்த்தை மூலம் நல்ல தீர்வுகள் ஏற்படும்.

**திருவாதிரை நட்சத்திரக்காரர்களுக்கு:**

திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் நல்ல பலன்களை அடைவார்கள். உடல்நிலையில் அசௌகரியங்கள் ஏற்படாது. நிலுவைத் தொகைகள் கிடைக்கும். ஒருசிலர் புதிய வீடுகட்டி குடிபுகுவார்கள். இருக்கும் இடத்தை மாற்றியமைப்பார்கள். சிலர் திட்டமிட்டபடி அயல்நாடு சென்று பொருளீட்டுவார்கள். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

**புனர்பூச நட்சத்திரக்காரர்களுக்கு:**

உடல்நிலையில் சீரான நிலை ஏற்படும். பெற்றோர்கள் வழியில் ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் குறையும். நீங்கள் நேசித்த ஒருவரை இப்போது பிரிய நேரிடும். பிடிவாத குணம், உங்கள் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளது. உற்றார்– உறவினர்களோடு சுமுகமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். அரச பணியில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

**பரிகாரம்**

குரு பகவானையும், முருகக் கடவுளையும் வணங்கி வரவேண்டும். ஆலயம் செல்லமுடியாதவர்கள் வியாழன்தோறும் மஞ்சள் ஆடை அணிந்து, தட்சிணாமூர்த்தியை இருந்த இடத்திலிருந்து வணங்கலாம். 27 கொண்டைக்கடலை எடுத்து மஞ்சள் துணியில் முடிந்து பணப்பையில் அல்லது பையில் வைத்துக் கொள்ள வேண்டும்.



# தலையில் விழுந்த பழம்


ஒருநாள் முல்லா, ஆல மரத்தைப் போன்று சடைத்து வளரும் ஒரு மல்பெரி மரத்தின் நிழலில் அமர்ந்து களைப்பாறிக் கொண்டிருந்தார். அப்போது வழிப்போக்கனான ஓர் இளைஞன் அங்கே வந்து சேர்ந்தான். நீண்ட தூரத்திலிருந்து வெயிலில் அவன் நடந்து வந்திருக்க வேண்டும், நிழலைக் கண்டதும் அவனுக்குப் பேரானந்தமாய் இருந்தது. மரத்திலிருந்த வேரின் மீது தலைவைத்துப் படுத்துச் சற்று நேரம் களைப்பாறினான்.

அவனுடைய பார்வை முல்லாவின் மீது விழுந்தது. பிறகு அண்ணாந்து மரத்தைப் பார்த்தான். மரத்தின் சின்னஞ்சிறு பழங்கள் அவன் கண்களில் பட்டன. அவன் உரக்கச் சிரித்தான். முல்லா அவனைத் திரும்பி பார்த்துவிட்டு என்ன சிரிக்கிறீர்? என்று கேட்டார். கடவுளின் முட்டாள்தனத்தை எண்ணிச் சிரிக்கிறேன் என்றான் அந்த வழிப்போக்கன்.

கடவுள் அப்படி என்ன முட்டாள்தனம் செய்து விட்டார் என்று முல்லா ஆச்சரியத்துடன் கேட்டார். இந்த மரத்தைப் பாருங்கள், ஒரு பெரிய கூடாரத்தைப்போல எவ்வளவு பெரிதாக இருக்கின்றது. இந்த மரத்தின் பழங்களைப் பாருங்கள் எவ்வளவு சிறியனவாக நுண்ணியவையாக உள்ளன இவ்வளவு பெரிய மரத்தின் பழங்கள் எவ்வளவு பெரியவையாக இருக்கவேண்டும் என்று கூட தீர்மானிக்க முடியாத கடவுளை முட்டாள் என்று கூறுவதில் என்ன தவறு இருக்க முடியும்? என்றான் வழிப்போக்கன். முல்லா பதில் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டார். சற்று நேரம் கழித்து காற்று பலமாக அடித்தது. மரத்தின் கிளைகள் வேகமாக அசைந்தாடிக் கிளைகளில் இருந்த சின்னஞ்சிறு பழங்கள் பொலபொலவெனக் கொட்டின. சில பழங்கள் வழிப்போக்கனின் தலையிலும் விழுந்தன. முல்லா அவனைப் பார்த்து நண்பரே உமது தலைமீது ஏராளமான பழங்கள் விழுந்தன போலிருக்கிறதே! என்று கேட்டார். ஆமாம் காற்றில் அவை உதிர்ந்துவிட்டன என்றான் வழிப்போக்கன்.

கடவுள் முட்டாளாக இல்லாமல் புத்திசாலியாக இருந்து பெரிய பாறைக்கல்லைப் போன்ற பெரிய பழங்களை இந்த மரத்திலே காய்க்கச் செய்திருந்தாரானால் என்ன ஆகியிருக்கும். உமது தலை நசுங்கி நாசமாகப் போயிருக்குமல்லாவா? என்று கேட்டார் முல்லா. வழிப்போக்கன் யோசித்தான். நண்பரே, கடவுள் சிருஷ்டியில் அனாவசியமானதும் அர்த்தமற்றதும் எதுவும் இல்லை. எதையும் ஒரு காரணத்தோடுதான் இறைவன் சிருஷ்டித்திருக்கிறார். இவ்வளவு விசாலமான மரக்கிளைகளின் நிழலில் ஏராளமான மனிதர்களோடு விலங்குகளும் தஞ்சம் புகும் என்று கடவுளுக்குத் தெரியும். அதனால்தான் கடவுள் நிழல்தரும் பெரிய மரத்தின் பழங்களை மிகவும் சிறியனவாகப் படைத்திருக்கிறார் என்றார் முல்லா. ஐயா தாங்கள் யார் என்று தெரியவில்லையே, ஒரு மகான் போல் பேசுகிறீர்களே? என்று பயபக்தியுடன் கேட்டான் வழிப் போக்கன். கடவுள் மகான்களை சிருஷ்டிப்பதில்லை மற்ற உயிர்களைப் போல மனிதர்களையும் சிருஷ்டிக்கிறார். நான் உம்மைப்போல ஒரு மனிதன்தான் என்றார் முல்லா.




# அலைகள்

கடலோரம் குருவும் அவரது சீடர்களும் நின்று கொண்டிருந்தனர். அலைகள் கரையில் மோதிக் கொண்டிருந்தன. ஒரு சீடரைப் பார்த்து குரு கேட்டார், உனக்கு என்ன தெரிகிறது. திரும்பத் திரும்ப வந்து மோதும் அலைகளில், விடாமுயற்சி தெரிகிறது என்று சீடர் சொன்னார். அடுத்த சீடரைப் பார்த்துக் கேட்டபோது, துன்பங்கள் அலைகளைப்போன்று தொடர்ந்து வந்தாலும், நாம் கரையைப் போல் உறுதியாக நின்றால், துன்பங்கள் சிதறிப் போகும் என்று பதில் வந்தது.

குரு சொன்னார், சில நேரங்களில் அலைகளாய் இரு. சில நேரங்களில் கரையாய் இரு . அதே தண்ணீரைக் காட்டி குரு கேட்டார், இதுவே மேலும் குளிர்ந்தால் என்னவாகும்? என்று. பனிக்கட்டி என்றார் சீடர். கொதித்தால்...? என்று குரு கேட்க, நீராவி என்று பதிலளித்தார் இன்னொரு சீடர். அதற்கு குரு மனிதனும் குளிரும் போது திடமாகிறான், கொதிக்கும் போது ஆவியாகிறான். ஆவியாகவும், திடமாகவும், அலையாகவும், கரையாகவும், மனம் வைத்தால் மனிதனாகவும் கூட மாற மனிதனால் முடியும் என்றார்.





# தெரிந்து கொள்வோம்

- ஒலிம்பிக் போட்டியில் கபடி அறிமுகப் படுத்தப்பட்ட ஆண்டு, 1952.
- ஒருகாலத்தில் மாமன்னர்கள் மட்டுமே சாப்பிடும் பழமாக அத்தி இருந்தது.
- துருப்பிடிக்கும்போது இரும்பின் எடை கூடுகிறது.
- நெருப்புக்கோழியை, ஒட்டகப் பறவை என்றும் அழைக்கிறார்கள்.
- பச்சையம் இல்லாத தாவரம், காளான்.
- காகம் இல்லாத நாடு, நியூசிலாந்து.
- பாம்பு இல்லாத தீவு, ஹவாய்.
- எரிமலை இல்லாத கண்டம், ஆஸ்திரேலியா.
- தலை இல்லாத உயிரினம், நண்டு.

# சின்னான் குருவி



சின்னான் குருவி, மரங்களில் வாழும் பறவைகளுள் ஒன்றாகும். இது கொண்டைக்குருவி, கொண்டைக்கிளாறு, கொண்டலாத்தி என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. கொண்டைக்குருவிகள் பொதுவாக இருவகையானவை. ஒரு வகையின் கருங்கொண்டை நீண்டு, கொம்பு போல் முன் வளைந்திருக்கும். இது செம்மீசைக் கொண்டைக்குருவி என்றழைக்கப்படும். பொதுவாக இது மலைப் பகுதிகளில் காணப்படும். மற்றொரு வகை, செங்குதக் கொண்டைக்குருவி என்றும் அழைக்கப்படும். இதன் கொண்டை சற்றுச் சிறியது. இதை சமவெளிகளிலும் வீடுகளுக்கருகிலும் சிறு குன்றங்களிலும் காணலாம். உடல் கபில நிறத்தில் இருக்கும், வாலடி இரத்தச் சிவப்பாக இருக்கும். உற்சாகமான குரலில் பரபரப்புடன் இவை கூவும். மலைப்பகுதிகளில் முழுக்கருப்பான ஒரு கொண்டைக்குருவி உண்டு. இவற்றுள் முக்கியமானது மரகதத்தின் பசுமையும் இனிய குரலையும் உடைய மரம்வாழ் பச்சைக்குருவி வகையே. மைனாவை விடச் சிறிய பறவை இது.

தலையும் தொண்டையும் நல்ல கருப்பாகவும், உடலும் மூடிய இறகுகளும் பழுப்பு நிறமாகவும் இருக்கும்.

எண்ணெய்க்கறுப்பு நிறக் கருவிழி, கருநிற அலகு, கால்கள் கொண்டது. தெற்காசியாவில் இந்தியாவில் தொடங்கி இலங்கை, கிழக்கில் மியான்மர், தென்மேற்கு சீனா வரையில் இதன் பரவல் உள்ளது. மேலும், பிஜி, சமோவா, டோங்கா, ஹவாய், டுபாய் ஐக்கிய அரபு அமீரகம், நியூசிலாந்து ஆகிய நாடுகளிலும் (தீவுகளிலும்) சின்னான் குருவிகள் உள்ளன.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பட், டோமன் லபறடோ டாஸ் ஒண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**யாழ். அக்கூறியம்**
தட்டாதெரு, யாழ்ப்பாணம். **0759910060**

## வேலையாள் தேவை

பூங்கன்றுகள் பராமரிக்கவும், விற்பனை செய்யவும் ஆள்கள் தேவை

**யாழ். அக்கூறியம் 075 99 100 60**

## பெண் வேலையாள் தேவை

வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலை செய்யக்கூடிய பெண் தேவை.

**075 99 100 60**

## மணமகள் தேவை

யாழ் கௌரவ கிறிஸ்தவ குடும்பம் வயது-36, மொறட்டுவ Engineer, வெளிநாட்டு PR உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர்எதிர்பார்க்கின்றனர். R.C,இந்துக்கள் பரிசீ லிக்கப்படும். (61649) (3.5.7)

**தொடர்பு: 077 071 2304**

## தேவை

சாவகச்சேரியில் இயங்கும் பிடைவை விற்பனை நிறுவனத்திற்கு க.பொ.த உயர்தரம் படித்த பெண்பிள்ளைகள் தேவை. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் பங்களை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் கையளிக்கவும்.

(61396)

## மணமகள் தேவை

யாழ். இந்து குருகுலம், 1986, இடபராசி கார்த்திகை நட்சத்திரம், 7 இல் செவ்வாய் உள்ள அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மண மகளை பெற்றோர் தேடுகின்றனர். மாலை 6 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு: 0750774884**

## மேசன் உதவியாளர் தேவை

மன்னார் மடுச்சந்திக்கு அருகில் அமைந்துள்ள புதிய கட்டட நிர்மாணப்பணிக்கு பூச்சுவேலை, செங்கல்கட்டு வேலை செய்யக் கூடிய மேசன் உதவியாளர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு: 077 3614638, 077 9075 966**

## மரண அறிவித்தலும் அஞ்சலி நிகழ்வும்

### வல்லிபுரநாதன் தீபராஜ் (கணக்காளர் UK)



ஊர் மகிழ 19.04.1973 — பார் கலங்க 25.06.2015

யாழ்ப்பாணம் புளியங்கூடலைச்சேர்ந்த வல்லிபுரநாதன் பாக்கியலட்சுமி (தேவி) தம்பதிகளின் தலைத்தனை ஞனும் ஆவார்.

அன்னார் Rising Sum Hotel & Restaurant Horrow, Goldman estates Agents & Accounts southhall, VVN & Sons Ltd Southhall ஆகியவற்றின் உரிமையாளரும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவரும் Jolly Stars UK, Southhall Lanklans Cricket Club ஆகியவற்றின் துடுப்பாட்ட வீரரும் யாழ் இந்துக்கல்லூரியின் UK ஒன்றியத்தின் நிறைவேற்று அங்கத்தவரும்(trustee), Cricket Chairman of bessborough-CC (ESTD 1908) ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். அதேவேளை 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை கீழ்க்காணும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு நிகழும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிகழ்விடம்
வல்லிபுரநாதன் இல்லம், ஐக்கிய வீதி,
புளியங்கூடல்-4, ஊர்காவற்றுறை.

தகவல்
புளியங்கூடலூர் உறவுகள்.

(61655)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(லொறி உரிமையாளர், செயலாளர் - லொறிகள் சேவைகள் கூட்டுறவு சங்கம்)



சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைப்பிறப்பிடமாகவும், வைரவப் புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பத்மநாதன் (30.06.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி, பரதலிங்கம், பாலேந்திரன் ,காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, பரதராஜா, ஆகியோரின், அன்பு சகோதரனும் யசோதா, விஜயதீபன்,விஜிதா, சுகிர்தா,வித்தியா (பிருந்தா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீப்,காந்திமதி, வசந்தராஜா,சூரியகுமார், சுகிர்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் யாழதன்,விஷ்ணுகன்,கஜிதீபன் , சாகித்தியன், சன்றோ,அமறோ ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தவமணி(பவளம்) தேவதாஸன், தேவபாலன்,அன்னலட்சுமி மற்றும் கமலம் , மகேஸ்வரி (சந்திரா) சீதாலட்சுமி, குமாரசாமி,பிறேமா,பாக்கியவதி,காலஞ்சென்ற சிவகுருநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2015) ஞாயிற்றுக்கிழமை சிறுப்பிட்டியிலுள்ள அன்னாரின் சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கிந்துசிட்டி குடும்ப மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு(மடத்தடி),
நீர்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

### திருமதி இராசமணி தம்பையா



அளவெட்டி மத்தியைப்பிறப்பிடமாகவும் கணேஸ்வரம் அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி தம்பையா நேற்று (03.07.2015) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற க.தம்பையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் பூபாலசிங்கம், தனபாலசிங்கம், திருமதி சுப்பிரமணியம் புஸ்பராணி(வவுனியா), திருமதி ஜெயராஜரட்ணம் தயாமணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி பூ.செல்வராணி, திருமதி த.தர்மசாந்தினி, க.சுப்பிரமணியம்(கோண்டாவில்,வவுனியா), இ.ஜெயராஜரட்ணம்(பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், முருகையா, பொன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி கவிதரன், நிரஞ்சனா(பிரான்ஸ்), பூ.மிதுனா த.சஞ்சே, த.நிமல்காந், சு.தினேஸ்குமார், சு.பிரசாத் குமார், சு.உஷாயினி, சு.மனோஜ்குமார், ஜெ.ஜெயங்கா, ஜெ.ஜெயந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அளவெட்டி கணேஸ்வரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம்
(அளவெட்டி யா/கருவேப்புலம் பாடசாலை அருகில்)
அளவெட்டி.

தொடர்பு :- 077 472 9565
077 023 0828

தகவல் :-
குடும்பத்தினர்.

(61658)

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 05 . 06 . 1959 — இறப்பு 03 . 07 . 2015

### சகுந்தலாதேவி குமாரபதி

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலாதேவி குமாரபதி நேற்று (03.07.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குட்டியன் - பொன்னி தம்பதியரின் அன்பு மருமகளும்,குமாரபதியின் அன்பு மனைவியும்,அஜித் (லண்டன்), தட்ஷாயினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும்,சிவசேகரன் (வடமராட்சி) துஷாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும்,ரட்ணசிங்கம் (கனடா), நாகேஸ்வரி (கனடா),வசந்தன் (கனடா), மஞ்சுளா (கனடா),காலஞ்சென்ற சசிகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2015) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தில்லையம்பதி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.



பிறப்பு 20 . 01 . 1980 — இறப்பு 01 . 07 . 2015

### வைரமுத்து சசிகரன்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சசிகரன் 01.07.2015 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் வைரமுத்து - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும்,இரவீந்திரநாதன் -பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும்,பௌசியாவின் (கனடா) அன்புக் கணவரும்,அபிஷா (கனடா), தக்சயன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் ரட்ணசிங்கம் (கனடா),நாகேஸ்வரி (கனடா),வசந்தன் (கனடா),மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.'

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மனைவி (கனடா)

தகவல்:
குடும்பத்தினர்.
தில்லையம்பதி வீதி,
கோண்டாவில் வடக்கு,கோண்டாவில்.


(61653) (45.3.6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
09
06
1946







மறைவு
02
07
2015

## திருமதி அந்தோனிக்கம்மா மரியாம்பிள்ளை

தாழையடியைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிக்கம்மா மரியாம்பிள்ளை 2015.07.02 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேவியர்-மரியமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற E.L.S மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் குயின்வேயின்(ராணி), சத்தியவான் றமேஸ் (கட்சன், லண்டன்), காலஞ்சென்ற டெகாமிற் அமலராஜன் (நிக்சன்), டொனால் றியக்சன்(நெல்சன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் அமரன், யாழினி (லண்டன்), மலர், றென்சியா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கிளாறம்மா, வென்சஸ்லாஸ்(ராசா) மற்றும் சிறில், மணி, தங்கன், சிங்கராசா நேசன், காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அருளப்பு மற்றும் பச்சைக்கிளி, மேரிஸ்றொலா, ஆரோக்கியநாதன், காலஞ்சென்ற கொன்செற்றா மற்றும் புனிதம், செல்லா காலஞ்சென்ற சத்தியவதி மற்றும் புஸ்பம் சாள்ஸ் ஆகியோரின் மைத்துனியும் அனோஜினி, துசிந்தா, துஷாரா, அஸ்லின், அபிகேல், ஒலிவியா, ஒஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.07.2015) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியைத்தொடர்ந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 01,
2 ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

தொடர்பு :- 077 809 9730
0044 782 388 6784

(61657)

தகவல் :-
குடும்பத்தினர்.

# நாட்டுக்கு இன்று தேவை நல்லாட்சியா? நஞ்சாட்சியா?

## மக்கள் தீர்மானிக்கவேண்டும் என்கிறார் சஜித்

கொழும்பு, ஜூலை 4

நாட்டுக்கு இன்று தேவை நல்லாட்சியா? அல்லது நஞ்சாட்சியா என்பதை மக்கள் தீர்மானிக்கவேண்டும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த விடயம் குறித்து மக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களது சுயலாபங்களை மட்டும் கருத்திற்கொண்டு இம்முறை பொதுத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்கால சந்ததியினரையும் கருத்திற்கொண்டு இம்முறை தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும். நல்லாட்சி அரசு சாதாரண பொது மகனை மன்னராக்க முயற்சிக்கின்றது. இது நஞ்சாட்சிக்கே வழிவகுக்கும். குடும்பத்தையும் சுற்றத்தையும் போஷிக்கவே நஞ்சாட்சி அரசு முயற்சிக்கும்.

புதிய அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. அதன் ஊடாக பல்வேறு நன்மைகள் கிடைத்துள்ளன—என்றார். (த)

## மஹிந்தவுக்கு ஆதரவாக அனுராதபுரத்தில் பேரணி

கொழும்பு, ஜூலை 4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை பிரதமராக்கும் திட்டத்தில் இடம்பெற்றுவரும் மக்கள் பேரணி அடுத்து அநுராதபுரத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவும் கலந்துகொள்ளவுள்ளார்.

கேகொடையில் ஆரம்பமாகிய இந்தப் பேரணி மாத்தறை வரை வந்தடைந்து தற்போது மாற்றங்கள் செய்யப்பட்டு அநுராதபுர நகருக்குச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ அறிவித்ததை தொடர்ந்து எதிர்வரும் 9ஆம் திகதி அநுராதபுரத்தில் இடம்பெறவுள்ள பேரணி மேடையில் மஹிந்த தனது உரையை ஆற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி)

## ஆமைகளை கடத்த முயன்றவர் கைது


கொழும்பு. ஜூலை 4

இலங்கையில் இருந்து மலேசியாவுக்கு 124 ஆமைகளை கடத்த முயன்ற நபர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக மலேசியா செல்லத் தயாரான விமானத்தில் குறித்த பயணி இவ்வாறு 124 ஆமைகளையும் கடத்த முற்பட்டுள்ளார்.

இவர் தனது பயணப் பொதியுடன் ஆமைகள் மறைக்கப்பட்ட பொதியையும் வைத்துகொண்டு செல்ல முற்பட்டபோது விமான நிலையச் சுங்க அதிகாரிகளின் சோதனையின் போது பிடிபட்டுள்ளார்.

இதனை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன் விமான நிலையச் சுங்க அதிகாரிகளால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை

அருள்மிகு

**ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்**

**வைரவர் சாந்தி உற்சவம்**

04.07.2015 ஆம் நாள் சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூசையும் தொடர்ந்து வைரவப் பெருமான் வீதியுலா வருவார்.



அதைத் தொடர்ந்து **ஈழ நல்லூர் உதயசங்கர் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும்** தொடர்ந்து **ஈழ நல்லூர் "நாதஸ்வர இசை அரசு" P.S. பாலமுருகன் குழுவினரின் விசேட நாதஸ்வரக் கச்சேரியும்** நடைபெறும்.

உற்சவ நிறைவில் அனைத்து அம்பிகை அடியார்களுக்கும் வைரவப் பெருமானின் பிரசாதம் வழங்கப்படும்.
அனைத்து அடியார்களும் ஆலயத்துக்கு வருகைதந்து வைரவப் பெருமானின் அருள்பெறுக.

தொண்டர் சபை,
வீரமாகாளியம்மன்
தேவஸ்தானம்.

உ
ஓம் ஸ்ரீராம ஜெயம்

**அருளாசி பெற வாரீர்....!!**



ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் அருள்பெற்ற சித்தர்பீடாதிபதி, ஆத்ம சிரஞ்சீவி, ஆஞ்சநேய மைந்தன்

**ஸ்ரீ பரமசிவராஜா சுவாமிகள் (லண்டன்)**

அவர்களால் பக்தர்களுக்கு அருளாசி வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

**இடம் :** சுன்னாகம் கந்தரோடை
ஆலடி விரகத்தி விநாயகர் தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.

**காலம் :** 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை

**நேரம் :** காலை 10 மணி முதல் இரவு 7 மணிவரை


அனைவரையும் கலந்துகொண்டு ஆஞ்சநேய சுவாமியின் அருளாசிகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி

அனுசரணை :

சுடர் ஒளி | ஒளிஅரசி | 5 புலமைச்சுடர்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



செல்வி
**மேரி மாகிறீற்றா வேதநாயகம் (அமலராணி)**
(B.A, M.A, P.G, D.E.M)
(ஆசிரியர்)

பிறப்பு: 22.08.1960 | இறப்பு: 28.06.2014

04.07.2015 சனிக்கிழமை
காலை 6.00 மணியளவில்
**யாழ். மரியன்னை பேராலயத்தில்**
ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து அன்னாரின் ஆன்மசாந்திக்காக செபிக்குமாறும் அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**24/8,**
**மத்தியகிழக்கு வீதி,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

அவரின் பிரிவால் துயருறும்
**சகோதரன்.**

நித்தியஇளைப்பாற்றியை
மேரி மாகிறீற்றா வேதநாயகம் அவர்களுக்கு
அளித்தருளும் ஆண்டவரே.
முடிவில்லா பிரகாசம் இவருக்கு பிரகாசிக்கக்கடவது.
சமாதானத்தில் இளைப்பாறுவாராக! ஆமென்.

# மரண அறிவித்தல்கள்

## சித்தர் பாலசுப்பிரமணியம்(பாலா Sir)

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர் யா/மத்திய கல்லூரி, ஆசிரியர் சாயி பாடசாலை மானிப்பாய்)



உடுவிலைச் சேர்ந்த சித்தர் பாலசுப்பிரமணியம் 03.07.2015 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர் நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி லூசி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் அன்புக்கணவ ரும் ஜீவராஜா (HNB), கிரிதேவ் (Sampath Bank) ஆகியோரின் அன்புத் தகப்பனும் சண்முகராஜாவின் அன்புச் சகோதரனும் மேனகாவின் அன்பு மாமனாரும் அனுப்அபிநோஷன், கிரிஷேல் அபிலாஷா ஆகியோரின் அன்புப் பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (05.07.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(61664)

தகவல் :-
குடும்பத்தினர்.

## திருமதி வளர்மதி தனபாலன்



மாலுசந்தி அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வளர்மதி தனபாலன் நேற்று (03.07.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்க வேலாயுதம்-அருந்தவம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் இராசபாக்கியம் தம்பதியரின் மருமகளும், தனபாலனின் பாசமிகு மனைவியும், தர்சன், சத்தியா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2015) சனிக்கிழமை மாவைபாரதி சனசமூக நிலைய வீதி, மாவிட்டபுரம் தெல்லிப்பழையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் மாவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவை பாரதி
சனசமூக நிலைய வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

தகவல்:
த. தனபாலன் (கணவர்)
077 217 2294

# தமிழர் விடுதலையை விரைவாக்க கூட்டமைப்பைப் பலப்படுத்துங்கள்

## வடக்கு–கிழக்கு மக்களிடம் சுமந்திரன் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 04

தமிழருக்கான விடுதலையை – சுதந்திரத்தை விரைவுபடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடக்கு, கிழக்கு மக்கள் பலப்படுத்தவேண்டும். இதனை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமது வாக்குகளினால் தமிழ் மக்கள் நிரூபிக்க வேண்டும் .

இவ்வாறு கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உதவிச் செயலாளரும் அக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பல தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டுப் போர் 6 வருடங்களுக்கு முன்பு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு வந்தது. எமது மக்களும் எமது பிரதேசமும் பெரும் இழப்புக்களைச் சந்தித்தனர். போர் முற்றுப் பெற்றதே தவிர அடக்கு முறைகள் ஓயவில்லை.

முட்கம்பிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்டவர்களாய் தமது சொத்துக்கள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்தவர்களாக தோல்வியைத் தழுவிய ஒரு சமூகமாய் நின்றனர். இன்னமும் சொல்லப்போனால் அப்போதைய அரசு எமது சமூகத்தை மறுபடியும் தலைநிமிர முடியாத நிலையில் வைத்திருப்பதை தனது கொள்கையாகக் கொண்டிருந்தது.

இப்படியானதொரு நிலைமையில் எமது சமூக சர்வதேசத்திடம் பல உபகாரங்களை எதிர்பார்த்தே தமது நிலைமையைத் தக்கவைக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாகவும் பல சர்வதேச சமூகங்களுடன் நடத்திய பேச்சுகள், ஜெனிவா நகர்வுகள் போன்ற தலையீடுகளால் அரசினால் நமது சமூகத்துக்கு நிரந்தரமாக ஏற்படவிருந்த பாதிப்புக்கள் மட்டுப் படுத்தப்பட்டன.

இந்தச் சூழ்நிலையிலேயே எமது மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தரவும் போர் ஏற்படுத்திய பேரழிவிலிருந்து மீள எமது சமூகத்தைக் கட்டியெழுப்பவுமே 2015 முற்பகுதியில் குறித்த காலத்துக்கு 2 வருடங்கள் முன்பாகவே இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை நாம் எதிர்பார்த்தோம்.

மைத்திரிபால சிறிசேனவுக்கான எமது நிபந்தனையற்ற ஆதரவானது மஹிந்தவின் பரப்புரையின் விளைவாக தோற்கக்கூடாது என்பதை உறுதிசெய்யவும், எமது சமூகம் ஒரு மேம்பாடடைந்த நிலைமையை அடைவதற்கு அவர் வழிவகுப்பார் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயாகும்.

இதனைக் கவனமாக ஆர்ப்பாட்டமற்ற செல்லாளுமையாலும் தலையீட்டாலும் நாம் அடைந்து வருகின்றோம். நாம் எதிர்பார்த்த மாற்றமானது ஜனவரி 8ஆம் திகதியே ஆரம்பித்ததுடன் இன்னமும் படிப்படியாக நடைபெற்று வருகின்றது.

இது ஒருவர் நதியின் அக்கரையை அடைய வள்ளம் ஏறிய கதையைப் போன்றது. அக்கரையை வெற்றிகரமாக அடையவேண்டுமாயின் சூழ்நிலைகள் மோசமாக இருந்த பொழுதும் வள்ளத்தைத் தத்தளிக்க விடக்கூடாது. மாறாக நாம் பயணிக்கும் திசை சரிதானா என்பதை மாத்திரம் உறுதிசெய்துகொள்ளல் வேண்டும்.

அண்மையில் வலிகாமம வடக்கில் 1000 ஏக்கர் நிலப்பரப்பு மட்டும் விடுவிக்கப்பட்டமை குறித்து நாம் முழுமையாக சந்தோசப்பட முடியாவிடினும் கிழக்கின் சம்பூர் பிரதேச நில விடுவிப்பை நாம் அங்கீகரித்தே ஆகவேண்டும்.

நாம் அடிமட்ட நிலையில் மாற்றங்களை ஏற்படுத்த விளைகின்ற அதே வேளையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை நோக்கி நகர்வதே சாலச் சிறந்ததாகும்.

மாற்றத்திற்கான வழியானது பொதுத் தேர்தலையும் தாண்டிய ஒன்று என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிந்துள்ளதோடு மக்களின் நாளாந்த நடைமுறை வாழ்க்கை சவால்களையும் புதிய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குத் தவறவில்லை–என்றார். (த–சி)

# இலங்கை அரசியல் நிலைமை; அமெ. , இந்தியா அவதானிப்பு

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் களநிலைவரம் தொடர்பில் மேற்கத்தேய நாடுகள் மற்றும் இந்தியா கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கையில் உள்ள தமது தூதரகங்கள் மூலம் இலங்கைச் செய்திகளை உடனுக்குடன் பெற்று வருவதாகவும், எதிர்வரும் சில நாள்களில் இலங்கையின் பல பகுதிகளுக்கு அந்நாட்டுத் தூதுவர்கள் பயணம் செய்யவுள்ளதுடன், தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் தேர்தலில் களமிறங்கியுள்ள கட்சிகள் தமது பரப்புரை நடவடிக்கைகளில் அதிகம் இம்முறை சமூக ஊடக வலத்தளங்களைப் பயன்படுத்தவுள்ளதுடன் அதற்காக வெளிநாட்டு நிபுணர்களை வரவழைக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு எதிராக பரப்புரைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க சமூக ஊடக வலத்தளங்கள் அதிகம் பயன் படுத்தப்பட்டமையினால் இம்முறை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட இதர கட்சிகளும் பிரசாரங்களை இதன் மூலம் செய்ய திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தேர்தலில் மூன்றாம் அணியாகக் களமிறங்குவதற்கான அதிக வாய்ப்புக்கள் மஹிந்த தரப்புக்கு இருக்கும் நிலையில், அவர்களின் தேர்தல் பரப்புரை செலவினங்களை முன்னணி நாடொன்று ஏற்றுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்நாட்டின் அபிவிருத்திப் பணிகளை புதிய அரசு முடக்கி வருவதாக ஏற்கனவே குற்றம்சாட்டப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த–சி)

# அன்னம் தனித்து போட்டி

கொழும்பு, ஜூலை 4

அன்னம் சின்னத்தில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணி, இம்முறை பொதுத்தேர்தலில் தனித்து போட்டியிடும் என்று அந்த முன்னணியின் பொதுச்செயலாளர் ஷாமிலா பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஜனாதிபதி தேர்தல்களிலும் பிரதான இரண்டு கட்சிகளுடன் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி, இம்முறை தனித்து போட்டியிடும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர், தேர்தல்கள் ஆணையாளரிடம் உறுதியளித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவும் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் இந்த முன்னணியிலேயே போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 11 ஆண்டுகள்

பெற்று நேற்று நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ். நகரில் உள்ள விடுதி ஒன்றில் இராணுவத்தினர் 2004ஆம் ஆண்டு நிலைகொண்டிருந்தபோது அந்த விடுதியிலிருந்து அஸித பிரபாத் என்ற மேஜர் புலிகளின் உறுப்பினர் ஒருவருக்குத் தகவல்கள் வழங்கினார் என்று குற்றம்சாட்டிக் கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கரவாதத் தடைச்சட்ட தற்காலிக தடுப்புகள் சட்டப்பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியகுற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

அவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சில வருடங்களுக்கு முன்னர் அவர் கொழும்பு நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22ஆம் திகதி யாழ். மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அது தொடர்பான விசாரணை நடைபெற்று வந்தது. விடுதலைப்புலி உறுப்பினரும் சாட்சியமளித்திருந்தார். விசாரணைகளின் பின்னர் அவர் குற்றமற்றவர் என இனங்காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (உ–4)

## வடக்கு

மக்களுடன் கலந்தாலோசித்தே உருவாக்கப்பட வேண்டும் என்று ஆலோ சனை வழங்கியிருந்தார். அவ் வாறான ஆலோசனை செயன்முறை ஒன்று நடைபெற்று வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சும் அண்மையில் தெரிவித்துள்ள நிலையில், பாதிக்கப் [illegible] ளுடன் அது தொடர்பில் கலந்தா[illegible]வுகள் [illegible]வையும் ஐ.நா. குறிப்பி[illegible] படி [illegible]வில்லை என் [illegible]தச் [illegible]ம் சுட்டிக்காட்

ஜூன் 4 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற 'மீள்குடியேற்றம் சம்பந்தமான முழுமையான கொள்கை வரையறை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தை உருவாக்கல்' எனும் தலைப்பில் இடம்பெற்ற நிதி வழங்குநர் மாநாட்டில், ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உள்ளகப் பொறிமுறை ஒன்றிற்கு ஐ.நா. நிதி வழங்கத் தயார் என்று கூறியிருந்தார்.

வதிவிடப் பிரதிநிதியின் அந்தக் கருத்துக்கும் சிவில் அமைப்புகள் தமது கடிதத்தில் கண்டனம் தெரிவித்துள்ளன. எதிர்வரும் செப்ரெம்பரில் ஜெனிவா அறிக்கை வர முன்னரே இப்படியான அறிவிப்புக்கள் தவறானவை என்றும் அவை ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையின் பெறுமதியைக் குறைக்கும் தன்மையானவை என்றும் அவை சுட்டிக் காட்டியுள்ளன.

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்த கருத்து, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்துடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டதா என்பதை வெளிப்படுத்துமாறும் அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (உ–5)

## மஹிந்தவுக்கு

அவருக்கு நாம் ஆதர வளிக்க மாட்டோம். நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு பிர தானஅரசியல் கட்சியுடனும் பொது பல சேனா கூட்டணி அமைக்காது.

இந்த தேர்தலில் குறைந்தது இரண்டு அல்லது மூன்று பேரை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப முடியும் என்று பொதுபல சேனா நம்புகிறது. நாகபாம்பு சின்னத்தில், பொது ஜன பெரமுனவின் கீழ் தேர்தலில் போட்டியிடுவோம்" என்றும் அவர் தெரிவித்தார். (உ–5)

## சுதந்திரக்

இந்தத் தீர்மானத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான சுசில் பிரேமஜயந்த நேற்று அறிக்கை யொன்றினூடாக அறிவித்தார்.

அந்த அறிக்கையில்–

2015.07.02 ஆம் திகதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசப்பட்டதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற் கமைய அடுத்த சில தினங்களில் ஐ.ம.சு.முன்னணின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்படும்.

வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனைத்து கட்சிகளும் முழு மக்கள் சக்தியுடன் 2015 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுவதே எமது எதிர்பார்ப்பாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில், போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஜஜஷவுக்கு இடமளிக்கப்போவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டில் நேற்றுமுன்தினம் மாலைவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்தபோதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விசேட கூட்டத்தில் மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்க அனுமதியளித் துள்ளார்.

கட்சியின் எதிர்கால நல்னைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி மைத்திரி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் எனச் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (த–சி)

## யாழ். மத்திய

இந்த நடை முறை மாறியது அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் மற்றும் 2015 ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் யாழ். மத்திய கல்லூரியே வாக்கு எண்ணும் நிலையமாகச் செயற்பட்டது.

நடைபெறப் போகும் எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலிலும், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் வாக்கு எண்ணும் நிலையம் யாழ். மத்திய கல்லூரியிலேயே அமைக்கப்படவுள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறும் பாடசாலைகளில் வாக்கு எண்ணும் நிலையம் அமைக்கப்படாது என்று, தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்திருந்தார். இருப்பினும், யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும் உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், வாக்கு எண்ணும் நிலையம் அமைக்கப்படும் என்றி தெரிவிக்கப்பட்டது. (உ–5)

## சிவில்

சம்பிக்க இதில் கலந்துகொள்ளவில்லை.

19ஆவது திருத்தச் சட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி 214 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதில் அரசமைப்புப் பேரவையொன்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 10 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தப் பேரவையில் 7 அரசியல்வாதிகளையும், 3 சிவில் பிரதிநிதிகளையும் நியமிக்க அரசியல் கட்சிகளிடையே இணக்கம் ஏற்பட்டது. இருப்பினும், கடந்த ஒரு மாதத்திற்கும் அதிக காலமாக சிவில் பிரதிநிதிகளை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், அரசமைப்புச் சபையின் முதலாவது கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சிவில் பிரதிநிதிகள் மூவரை நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், இது விட யத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக சபையின் பிரதிநிதியான நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், அடுத்த கட்டமாக எதிர்வரும் 9ஆம் திகதி கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (த–சி)

## சு.கவின் முடிவு

எதிர்வரும் 6 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் காலம் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்குவது குறித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளது. (த)

## மைத்திரியைக்

பணமும் விதிக்கப்பட்டு, தண்டப் பணத்தை செலுத்தத் தவறின் மேலதிகமாக ஒருவருடம் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளைமோர் குண்டை வைத்து இந்தக் கொலை முயற்சியை மேற்கொண்டார் என அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

37 வயதான சந்தேகநபர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலன்னறுவையிலிருந்து மட்டக் களப்புக்கு 2006 ஆம் ஆண்டு ஏப் ரல் 23ஆம் திகதியன்று பஸ்ஸில் சந்தேகநபர் பயணித்து கொண்டி ருந்தபோது பொலிஸார் இவரைக் கைதுசெய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த–சி)

# சீனாவின் திட்டங்கள் மூலம் ஒரு லட்சம் பேருக்கு தொழில்

## கடந்த 5 வருட காலத்தில்

கொழும்பு, ஜூலை 4

இலங்கையில் சீனாவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மூலமாக கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் ஒரு லட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் 90 வீதமானவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என சீன வர்த்தக சம்மேளனப் பேச்சாளார் தெரிவித்தார்.

ஏ – 9 வீதி நிர்மாணப் பணிகளுக்காக வடக்கிலிருந்து 4,500 உள்ளூர் பணியாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதுடன் இதில் 2,800 பேர் தமிழர்கள் என அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த 5 வருட காலப் பகுதியில் பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு புதிய தொழில்நுட்பம் பற்றிய அறிவு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமை காரணமாக இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்கு நன்மை பயக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (த)

# பணிப் பெண்ணைத் தாக்கிய நீதியரசர் பதவி விலகட்டும்

## சட்டத்தரணிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 4

தனது வீட்டுப் பணிப்பெண் மீது தாக்குதல் மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள உயர் நீதிமன்ற நீதியரசரை வழக்கு விசாரணைகளில் உள்ளடக்கவேண்டாம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதம நீதியரசரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் டி ஆப்ருவை வழக்கு விசாரணைகளில் உள்ளடக்க வேண்டாம் எனக் கோரும் கடிதத்தைப் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவனிடம் இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் சமர்ப்பித்துள்ளது.

தனது வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரியும் பெண் மீது நீதியரசர் ஆப்ரு தாக்குதல் நடத்தினார் என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை கொழும்பு கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது.

நீதியரசர் பல தடவைகள் குறித்த பெண்ணின் தலையில் துப்பாக்கியால் அடித்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஏற்பட்ட காயங்களுடன் குறித்த பெண் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை– இந்த முறைப்பாடு தொடர்பில் தகவல்களை தெரிவிப்பதற்கு நீதியரசர் மறுத்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நீதியரசரைக் கைதுசெய்யவேண்டிய கட்டாயத்துக்குப் பொலிஸார் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை– நாட்டின் பிரஜைகளுக்கும் ஏனைய நீதிபதிகளுக்கும் மேலதிக சங்கடத்தை ஏற்படுத்தாத வகையில் நீதியரசர் ஆப்ரு பதவி விலகுவார் என எதிர்பார்ப்பதாக சட்டத் தரணிகள் பலர் கூறியுள்ளனர். (த)

# முக்கிய புள்ளிகள் சிலருக்கு வேட்புமனு வழங்காதாம் சு.க.?

கொழும்பு, ஜூலை 4

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற நிலையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சி சில முக்கிய உறுப்பினர்களுக்கு வேட்புமனு வழங்காது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வேட்பாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை நிறைவடைந்த நிலையிலேயே இந்தத் தகவல் கசிந்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் அமைச்சரும் சு.க. வேட்புமனு பிரிவுக்குழு உறுப்பினருமான சரத் அமுனுகம இதனைச் சூட்சுமமாகத் தெரிவித்தார்.

அவர் இதன்போது மேலும் கூறியதாவது:–

நாடாளுமன்றத்தில் புதிய தலைசிறந்த தலைவர்களுக்கு வரும் வாய்ப்புகள் இதற்கு முன்னர் வழங்கப்படவில்லை. எனினும், இம்முறை அதற்கு மாற்றமான முறையில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படும். அது மாத்திரமல்லாது, பெண்களின் அங்கத்துவத்தை அதிகரிப்பதற்காக அவர்களுக்கான வாய்ப்புகளும் அதிகரிக் கப்படும்.

திறமையானவர்களுக்கே இம்முறை தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை சிறிலங்கா சுதந்திரக் கட்சி வழங்கும். தற்போது கட்சிக்குள் பல கருத்துகளால் பிளவு அடைந்துள்ளமையால் என்றுமில்லாதவாறு இம்முறை புதுமுக இளையவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்துள்ளனர். நேர்முகப் பரீட்சை மண்டபமும் வேட்பாளர்களால் நிரம்பி வழிகின்றது.

முன்பு தேர்தல் மாவட்டங்களில் முக்கிய உறுப்பினர்கள் பலர் இருக்கின்றமையால் புதுமுகங்கள் போட்டியிட முன்வருவதில்லை. இந்நிலை தற்போது மாறியுள்ளமையால் பலர் முன்வருகின்றனர்–என்றார்.

முன்னர் வேட்புமனு பெற்றவர்களுக்கு இம்முறை வேட்புமனு வழங்கப்படமாட்டாதா?" என ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அவர்,

முன்பிருந்தவர்களும் தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள் என்ற நம்பிக்கையிலேயே நாங்கள் இது தொடர்பில் பேசுகின்றோம். எனினும், சிலர் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்துக்குள் விண்ணப்பிக்கவில்லையெனில், அவர்களது பிந்திய கோரிக்கை நிராகரிக்கப்படும். அது மாவட்ட ரீதியில் பிரபல அரசியல்வாதியாக இருந்தாலும் சரியே–என்றார்.

சு.க. இரண்டாகப் பிளவுபடும் நிலை ஏற்பட்டுள்ளதனாலா இவ்வாறான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது,

கட்சி பிளவுபட்டாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் தேர்தலுக்குத் தயார். அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் முன்னெடுத்திருக்கின்றோம். தலைமைத்துவம் தொடர்பில் நிலவும் கருத்து முரண்பாடான நிலையிலும் பெரும்பான்மை அங்கத்தவர்கள் விண்ணப்பித்துள்ளனர்–என்றார். (த)

# 16,000 விண்ணப்பங்கள் ஐ.தே.கவுக்கு குவிந்தன

கொழும்பு, ஜூலை 4

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடுமுழுவதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு 16 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவற்றைத் தெரிவுசெய்வதற்கு புதிய குழுவொன்றை நியமிக்க வேண்டும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மோசடிக்காரர்கள் அல்லாத சிறந்தநபர்களைத் தெரிவு செய்வதில் தமது கட்சி அதிக கவனம் செலுத்தி வருகின்றது. 16,000 விண்ணப்பங்களிலிருந்து குறிப்பிட்டளவானவர்களைத் தெரிவு செய்வது மிகவும் கடினமாகும். இதற்காக புதிய குழுவொன்றை அமைக்க வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

# ஹிருணிகா விரைவில் திருமணம்

மேல்மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர விரைவில் திருமணம் பந்தத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல ஆடையலங்கார கலைஞரும், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமான ஒருவரே ஹிருணிகாவைத் திருமணம் செய்து கொள்ளவுள்ளதாகத் த்கவல்கள் வெளிவந்துள்ளன. இருவருக்கும் இடையில் இதுவரை காலமும் இடம்பெற்ற காதல் உறவை அடுத்தே இரு வீட்டாரின் சம்மதத்துடன் இந்தத் திருமணம் நடைபெறவுள்ளது.

திருமண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஒரு சாட்சியாளராக இருப்பார் என ஹிருணிகாவின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை– நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட ஹிருணிகா சுதந்திரக் கட்சியில் விண்ணப்பம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

# ஜனாதிபதியாக ஏற்காத மஹிந்தவை பிரதமராகவும் ஏற்கமாட்டார் மக்கள்

## சொல்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூலை 4

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷவை ஏற்காத மக்கள் மீண்டும் ஒருபோதும் பிரதமராக ஏற்கப்போவதில்லை என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்றுத் தெரிவித்தார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:–

மஹிந்த ராஜபக்ஷ பிரதம வேட்பாளராகக் களமிறங்குவது அவரின் ஜனநாயக உரிமை. ஆனால், அவர் எதற்காக மீண்டும் தேர்தலில் களமிறங்க நினைக்கின்றார்? அதிகாரத்தைக் கைவிட முடியவில்லை. அவரால் அதிகாரம் இல்லாமல் இருக்க முடியாது. காரணம், வரலாற்றில் அவர் செய்த தவறுகள், ஊழல்கள் போன்றவற்றில் இருந்து விடுபடத் தான் அதிகாரத்துக்கு வரத்துடிக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதிப்பாரானால், அது மக்கள் வழங்கிய ஆணைக்கு அவர் இழைக்கும் பெரிய அநீதியாகும்.

இந்த நாட்டுக்குப் பழைய பொருள்கள் அல்ல, புதிய பொருள்கள்தான் தேவை. ஊழல்வாதிகளையும், கொள்ளைக்காரர்களையும் நாடாளுமன்றத்தில் காணப்படும் போதைப்பொருள் கலாசாரத்தையும் மாற்றி, ஒரு சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்கவும், மக்களுக்காகச் செயற்படும் நாடாளுமன்றத்தைக் கட்டியெழுப்பவும் சிறந்த சந்தர்ப்பம் ஒன்று மக்களுக்குக் கிட்டியுள்ளது. எனவே, ஜனாதிபதியாக ஏற்காதவரை பிரதமராக மக்கள் ஒரு போதும் ஏற்கத் தயாராக இல்லை என்பதே உண்மையாகும் – என்றார். (த)

# சந்திரிகா மட்டுமல்ல சு.கவும் யானைச் சின்னத்தில் வரலாம்

## ஏற்கத் தயார் என்கிறது ஐ.தே.க

கொழும்பு, ஜூலை 4

யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடத் தயார் என்றால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை ஏற்றுக் கொள்ளத் தயார். அதுமட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் எம்முடன் இணைந்து போட்டியிடலாம் என்று அழைப்பு விடுத்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, மோசடிக்காரர்கள் எவருக்கும் ஐ.தே.க வில் இடமில்லை என்றும் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவரது செயலாளர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், சந்திரிகாவுடன் இணைந்து போட்டியிடுவீர்களா என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கிரியெல்ல,

ஐக்கிய தேசியக் கட்சி என்ற அடிப்படையில் யானைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவதே எமது தீர்மானமாகும். இந்நிலையில், யானைச் சின்னத்தின்கீழ் போட்டியிடத் தயார் என்றால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் எம்முடன் இணைந்து போட்டியிடலாம். எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. யானைச் சின்னத்தின் கீழ் என்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் எம்முடன் இணைந்து போட்டியிடலாம். எந்தக் கட்சியும் போட்டியிடலாம். அரசியலில் எவரும் நிரந்தர நண்பனும் அல்ல. நிரந்தர எதிரியும் அல்ல. ஆனால், மோசடிக்காரர்களுக்கு இடமில்லை–என்றார். (த)

# ஊழல், மோசடிகாரர்களுக்கு வேட்புமனு; ஜனாதிபதி, பிரதமரே அதற்குப் பொறுப்பு

## சுட்டிக்காட்டுகின்றது 'கபே' அமைப்பு



கொழும்பு, ஜூலை 4

நாடாளுமன்றத் தேர்தலில் ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் போட்டியிட வேட்புமனு வழங்கினால் அதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே பொறுப்புக்கூறவேண்டும் என்று 'கபே' அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கபே அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:–

இந்த நாட்டின் பிரதான கட்சி களாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே காணப்படுகின்றன. இந்தக் கட்சிக ளின் தலைவர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளனர்.

கடந்த 9 மாத காலமாக ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யக்கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் குறிப்பிட்டு வந்தனர். ஆகவே, ஜனாதிபதியும் பிரதமரும் ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு வேட்புமனு வழங்கப்படமாட்டாது என உறுதியளிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் அவர்களுக்கு வேட்புமனு வழங்கப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்களே ஏற்கவேண்டும்–என்றார். (த)

# விநாயகர் எதிர் வைகறை இறுதியில்-இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியை எதிர்த்து புதுமட வைகறை அணி பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை மோதவுள்ளது.

குறித்த இறுதியாட்டத்திற்கு பிரதம விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவஞானம் சிறிதரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனோல்ட், வடமாகாணசபை உறுப்பினர் க.கஜதீபன், சுழிபுரம் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் நா.ஐங்கரன், இலங்கைவங்கியினது மேற்தரக் கிளையின் பிரதம முகாமையாளர் ரி.செந்தில்நாதன், சங்கானை மக்கள் வங்கியின் முகாமையாளர் க.கலிஸ்ரா, யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் த.தேவராஜா, யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியின் பிரதம முகாமையாளர் க.ரவீந்திரராஜா, கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன், நியூ நெல்சன் லேணர்ஸ் உரிமையாளர் தி.டயஸ் ஆகியோரும் கௌரவ விருத்தினர்களாக யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் காப்பாளர் நா.பேரம்பலம் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியும் யாழ்.மாவட்ட தாச்சிவிளையாட்டுச்சங்கத்தின் எண் பார்வையாளருமான எம்.ஆர். மோகனதாஸ், இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஞ்தன குமாரவடு, கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் தலைவர் து.யோகராசா, பண்டத்தரிப்பு ஜே/176 பிரிவு கிராம அலுவலர் எஸ். ராஜ்கண்ணா, பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ம.திலீபன், சுன்னாகம் தெற்கு கே.ஆர்.எஸ் அரிசி ஆலையின் உரிமையாளர் கே.ஆர்.சிவலோகநாதன், யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கத்தின் காப்பாளர் செ.இலகுநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் ஏஞ்சல், உடுவில் மகளிர் அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 13வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் 15வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் வெற்றிபெற்று சம்பியன் ஆகின.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற 13 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 53:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியின் சஜித் தெரிவானார்.

தொடர்ந்து பிற்பகல் 4.15 மணிக்கு இடம்பெற்ற 15வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது.



13 வயதுப் பிரிவு



15 வயதுப் பிரிவு

இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 29:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. சிறந்த வீராங்கனையாக உடுவில் மகளிர் கல்லூரி அணியின் மேனுசா தெரிவானார். (ம-86-23)

## ஜி.பி.எஸ். வி.கழகத்தின் தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 4

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டுக் கழகத்தினால் சமீப காலமாக நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டத் தொடரின் தொடர்ச்சியான ஆட்டங்கள் சில இன்றும், நாளை யும் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த ஆட்டங்களுக்கு உரிய நேரத்துக்கு அணிகளைச் சமூகம் தருமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ம)


## சம்பியனானது உடுவில் மகளிர்

யாழ்ப்பாணம் ஜூலை 4

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஸ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் 11வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.

இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 10:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ம-23)






## நாளை மறுதினம் ஹபீஸிற்கு பரிசோதனை தவறு உறுதியானால் ஒரு வருடத்தடை

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டின்போது, பாகிஸ்தானின் பகுதி நேர சுழற்பந்து வீச்சாளர் முகமது ஹபீசின் பந்து வீச்சு சந்தேகமளிக்கும் வகையில் இருப்பதாக நடுவர்கள் முறைப்பாடு தெரிவித்தனர். இதையடுத்து 14 நாள்களுக்குள் அதாவது ஜூலை 4ஆம் (இன்று) திகதிக்குள் அவர் தனது பந்து வீச்சு முறையை பரிசோதனைக்குட்படுத்த வேண்டும் என்பது ஐ.சி.சி. விதியாகும்.

ஆனால் இந்தியாவுக்கு செல்வதற்கு விசா கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் சோதனைக்கான காலப் பகுதியை நீடிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட ஐ.சி.சி, ஜூலை 6ஆம் திகதி முகமது ஹபீசுக்கு பந்துவீச்சு பரிசோதனை சென்னையில் உள்ள சோதனை மையத்தில் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது. (ம)



## விலகினார் சுஷில் குமார்

ஒலிம்பிக் போட்டிகளில் இரண்டு தடவைகள் பதக்கம் வென்ற இந்திய மல்யுத்த வீரர் சுஷில் குமார், காயம் காரணமாக உலக மல்யுத்த தொடரிலிருந்து விலகியுள்ளார்.

பயிற்சியின்போது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாகவே சுஷில் குமார் உலக மல்யுத்த தொடரிலிருந்து விலகியுள்ளார். இந்த விலகலின் மூலம் ஒலிம்பிக் தொடருக்கான தகுதிச்சுற்று தொடருக்கான வாய்ப்பினையும் அவர் தவறவிட்டுள்ளார். (ம)

## யங்ஹென்றிஸை வீழ்த்தியது பொம்மர்ஸ்



யாழ்ப்பாணம், ஜூலை 4

தொண்டமானறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்படும், அணிக்கு 9பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.


அதில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் பொம்மர்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இந்திய அணியில் நீடிப்பேன்



சிம்பாப்வே தொடருடன் நின்றுவிடாது இந்திய அணியில் தொடர்ந்து நிரந்தர இடம்பிடிக்க உறுதியாகவுள்ளதாக இந்திய அணியின் இளம் வீரர் மனேஸ் பாண்டே தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே தொடருக்கான ரஹானே தலைமையிலான இந்திய அணியில் மனேஸ் பாண்டே இடம்பெற்றுள்ளார். நீண்ட காத்திருக்குப்பின் அவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பு அவரது திறமைக்காக கிடைத்த வாய்ப்பு என்பதை விட மூத்த வீரர்கள் பலர் ஓய்வு எடுத்துக் கொண்டதால் கிடைத்த வாய்ப்பு என்றே கூற வேண்டும், ஆனாலும் இவரது திறமையை குறைத்து எடை போடுவதற்கில்லை. இந்த நிலையில் தனது தேர்வு, தனது எதிர் காலம் ஆகியவை தொடர்பாக மனேஸ் பாண்டே தெரிவித்ததாவது எனது திறமையை வெளிப்படுத்த ஒரு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது, கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்தி, இந்திய அணியில் நீண்ட காலம் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன். சிம்பாப்வே அணியை எளிதால் நினைத்து விட முடியாது. இரண்டு வருடத்துக்கு முன்னர் இருந்த சிம்பாப்வே வேறு தற்பொழுது உள்ள சிம்பாப்வே வேறு. எமது அனுபவ வீரர்கள் இல்லாத இந்திய அணியின் வெற்றிக்கு இயலுமான அளவுக்கு ஒத்துழைப்பு வழங்குவேன். என்றார். (ம)



ஆஷஸ் தொடருக்கு இன்னும் 4 நாள்கள் மட்டுமே!

# இலங்கை சுமாரான தொடக்கம்


## கருணாரத்ன சதம்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டத்தின் முதலாம்நாள் முடிவில் இலங்கை 272–8 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மிஷ்பா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய களத்தில் கருணாரத்னவுடன் சில்வா. அணியின் ஓட்டம் 15ஆக இருந்தபொழுது இலங்கையின் முதல் இலக்காக சில்வா ஒன்பது ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கருணாரத்னவுடன் இணைந்து தரங்க நிதானிக்க சரிவில் இருந்து மீண்டு பலமான நிலைமையை அடைந்தது இலங்கை. மேலதிக இலக்குச் சரிவு இல்லாமல் நூறு ஓட்டங்கள் எட்டப்பட்டது. அரைச் சதத்தைப் பதிவுசெய்வார் என்று எதிர்பார்த்த வேளையில் நான்கு ஓட்டங்களால் தவறவிட்டு நடையைக் கட்டினார் தரங்க. திரிமன்னே, மத்தியூஸ் இருவரும் வந்த வேகத்தில் பவிலியன் திரும்ப, மீண்டும் சரிவுகண்டது இலங்கை. ஒரு முனையால் இலக்குகள் சரிந்தாலும் மறுமுனையில் கருணாரத்ன நிதானித்து நின்று நம்பிக்கை கொடுத்தார். தொடர்ந்தும் அதே பாணியில் பயணித்து சதத்தைக் கடந்தார். அனால் அதற்கப்பாலும் அவரை அனுமதிக்கவில்லை பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள். கருணாரத்ன ஆட்டமிழந்த அதே பந்துப் பரிமாற்றத்தின் அடுத்த பந்தில் விடைபெற்றார் பிரசாத். தற்பொழுது இலங்கை 248–7. சிறிது நேரம் தாக்குப்பிடித்த சந்திமாலும் 24ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முதலாம் நாள் முடிவில் இலங்கை 272–8 என்ற நிலையில் உள்ளது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக சாஜ் 4 இலக்குகளையும் அஷ்ஜுர் அலி மற்றும் ரஹற் அலி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

(ம)



பவுண்டரியை விளாசும் கருணாரத்ன

## எந்தத்தவறும் செய்யவில்லை

### -ரெய்னா

தொழிலதிபர் ஒருவரிடமிருந்து இலஞ்சம் பெற்றதாக லலித் மோடி கூறியுள்ள குற்றச்சாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பரிசீலித்து வருவதாக சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ரெய்னா தெரிவித்ததாவது எனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானவை. கிரிக்கெட் ஆட்டத்தை நான் மிகவும் நேசிப்பவன், பற்றுதலுடன் அந்த ஆட்டத்தை ஆடி வருகிறேன். எனவே எனக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள தற்போது பரிசீலித்து வருகிறேன். சமீபத்தில் ஊடகங்களில் என்னைப் பற்றி வந்த செய்திகளை முன்வைத்து உலகம் முழுதும் உள்ள எனது ரசிகர்களுக்கு நான் தெரிவிப்பது என்னவென்றால் கிரிக்கெட் ஆட்டத்தில் நான் சரியான உணர்வுடன், உயர்ந்த பட்சநேர்மையுடன்செயற்பட்டுவருகிறேன். நான் எந்தவித தவறான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. என் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானவை. நான் எந்த அணியை பிரதிநிதித்துவம் செய்தாலும் உண்மையுடையவனாகவே பிரதிநிதித்துவம் செய்வேன் – என்றார். (ம)

## இந்தியா -பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் பகலிரவு ஆட்டமாக அமையவேண்டும்



டுபாயில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரினை பகல்–இரவு டெஸ்ட் தொடராக நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் ரஷித் லத்திப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நவம்பர்மாதம் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடர் பகலிரவு டெஸ்ட்டாக நடைபெறவுள்ளமை உறுதியாகியுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தியா –பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடருக்கு இந்திய அரசு இன்னமும் அனுமதிகொடுக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சானியா மிர்ஸா, ஹிங்கிஸ் இணை இரண்டாவது சுற்றுக்கு தகுதி

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் விம்பிள்டன் ரென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சானியா மிர்ஸா, சுவிற்ஸர்லாந்தின்தின் மார்டினா ஹிங்கிஸ் இணை 2ஆவது சுற்றுக்கு முன்னேறி யுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்ஸா, சுவிற்ஸர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் இணையை எதிர்த்து சீனாவின் சாய் ஜெங், கஜகஸ் தானின் ஸாரினா டியாஸ் இணையை 6:2, 6:2 என்ற நேர் செற்களில் வென்று 2ஆவது சுற்றுக்குள் நுழைந்தது. விம்பிள்டனில் இது வரை இல்லாத அளவுக்கு நேற்று முன்தினம் கடும் வெப்பநிலை நிலவியது. 35.7 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது. இதனால் வீரர், வீராங்கனைகள் கடும் அவதிக்குள்ளாயினர். (ம)



சானியா

# எதிர்பாராத சோகத்தில் இங்கிலாந்து இறுதிக்கு முன்னேறியது ஜப்பான்



கோலைத் தவறவிடும் இங்கிலாந்து கோல் காப்பாளர்

மகளிர் உலகக்கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதியில் இங்கிலாந்தின் லாரா பாஸ்செட் செய்த தவறு இங்கிலாந்தின் பக்கமே கோலாக மாற ஜப்பான் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

கனடாவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்துத் தொடரின் 2ஆவது அரையிறுதியில் நடப்பு சம்பியன் ஜப்பான் அணியும், இங்கிலாந்தும் மோதின. ஆட்டத்தின் முதல் பாதியிலேயே இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை அடித்து சம ஆதிக்கத்தில் இருந்தனர்.

இரண்டாவது பாதியில் எந்தவொரு அணியாலும் எளிதில் கோலைப் பதிவுசெய்துவிட முடியவில்லை. இந்தநிலையில் ஆட்டம் முடிய 30 செகன்களே இருந்த நிலையில், இங்கிலாந்தின் லாரா பாஸ்செட் பந்தை அடிக்க, அது எதிர்பாராத விதமாக இங்கிலாந்தின் கோல் வளைக்குள்ளேயே புகுந்தது. இதையடுத்து 2:1 என்ற கோல் கணக்கில் ஜப்பான் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது. நாளை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் ஜப்பான் – அமெரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (ம)

## விம்பிள்டனில் தீ விபத்து

இங்கிலாந்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் 3ஆவது நாளான நேற்று முன்தினம் இரவுநேர ஆட்டங்கள் முடிந்த சிறிது நேரத்தில் தீ விபத்து ஏற்பட்டதற்கான அபாய ஒலி எழுப்பப்பட்டது. இதையடுத்து முன்எச்சரிக்கை நடவடிக்கையாக பிரதான ஆடுகளத்தில் இருந்து சுமார் 3 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர்.

நிலைமையின் தீவிரம் உணரப்பட்டு உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டன. ஆனால் தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தக்கூடிய அளவுக்கு பாரதூரமான பிரச்சினைகள் எவையும் ஏற்படவில்லை. அங்குள்ள மின் சாதன அறையில் மின்கசிவு காரணமாக சிறிய அளவில் தீவிபத்து ஏற்பட்டதாகவும், பிரச்சினை சரி செய்யப்பட்டு விட்டதாகவும் ஒருங் கிணைப்பாளர்கள் தெரிவித்தனர். (ம)



## உங்களுக்குத் தெரியுமா?

**வேட்பாளரைதெரிவுசெய்யும் போதுகருத்தில் கொள்வதற்கு பெரும்பாலான அரசியல் கட்சிகள் பஃவ்ரல் ஏற்பாட்டில் மார்ச் 12 பிரகடனத்தில் இணங்கிய பொதுவான அளவுகோல்கள்**

| | |
|---|---|
| 1 | குற்றவியல் சார்ந்த தவறொன்றுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அல்லது இடைநிறுத்திய சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும் |
| 2 | இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பில் குற்றவாளியாக்கப்படாத, சமூக அங்கீகாரம் பெற்ற, நன்னடத்தையுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும். அதேபோல், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றியசார்த்துதல்களுக்குஉள்ளானவர்கள் பற்றிவிழிப்புடன் இருக்கல் வேண்டும். |
| 3 | மதுசாரம், போதைவஸ்து, சூதாட்டம், கசினோ, விலைமாதர் விடுதி போன்ற பணஈட்டல்கள் உட்படநாட்டின் நல்லிருப்பிற்கு பங்கம் விளைவிக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒருவராக அல்லது ஈடுபட்டுவரும் ஒருவராக இராதிருத்தல் வேண்டும். |
| 4 | இயற்கை உயிர்மூலக் கட்டமைப்பைச் சிதைத்துவிடக் கூடிய சுற்றாடல் ரீதியாக தீங்குபயக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒருவராக அல்லது ஈடுபட்டுவரும் ஒருவராக இராதிருத்தல் வேண்டும். |
| 5 | அரசியல் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்யாதஒருவராக இருத்தல் வேண்டும். |
| 6 | மக்கள் பிரதிநிதி ஒருவராவதற்கு முன் நாட்டிற்கு பின்னடைவை ஏற்படுத்தக் கூடிய நிதிசார் ஒப்பந்தங்களில் ஈடுபட்ட ஒருவராக அதேபோல், மக்கள் பிரதிநிதி ஒருவராக இருந்து கொண்டு தமது அரசியல் அதிகாரத்தைத் துஸ்பிரயோகம் செய்து அரசாங்கத்துடன் நிதிசார் ஒப்பந்தங்களில் ஈடுபட்ட ஒருவராக அல்லது அத்தகைய ஒப்பந்தமொன்றின் தரப்பினர் ஒருவராக இராதிருத்தல் வேண்டும். |
| 7 | வேட்புமனு கையளிக்கின்ற வேட்பாளர் தன்னைப் பிரதிநிதிப் படுத்தும் பிரதேசத்தின் குடியிருப்பாளர் ஒருவராக அல்லது அம்மக்களுடன் தொடர்புகளைக் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும். |
| 8 | வேட்புமனு வழங்கும்போது பெண்கள் மற்றும் இளம் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

மக்களே உங்கள் வேட்பாளர்களை தெரிவுசெய்வதில்
உங்கள் உரிமையில் விழிப்பாயிருங்கள்!

அனுசரணை -கரீத்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக்.

## 65 நிமிடங்களில் ஆட்டத்தை முடிவுக்குகொண்டுவந்து

# மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார் ஷரபோவா



சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் மிகவும் உயரிய தொடரான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னாள் சம்பியன் ரஷ்யாவின் மரிய ஷரபோவா 6:3, 6:1 என்ற நேர் செட்டில் ஹோகன்கம்பபை வெளியேற் றினார். இந்த ஆட்டத்தை முடிவுக்கு கொண் டுவர ஷரபோவா எடுத்துக்கொண்டது வெறும் 65 நிமிடங்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

மற்ற ஆட்டங்களில் ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர் 6:3, 6–4 என்ற நேர்செற் கணக்கில் ராட்வன்ஸ்காவை யும், அமெரிக்காவின் மாடிசன் கீஸ் 6:7, 6:3, 6:4 என்ற செற் கணக்கில் சுவிற்ஸர்லாந்தின் ஸ்டெபானி வோஜிலியையும் வீழ்த்தினர். (ம)


**வாடகைக்கு**

நல்லூரில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
தனியறை, குளியலறை,
சமையலறை,ஹோல் உத்தியோகத்தர் குடும்பம்.
முற்பணம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு : 078 521 0573

**சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்**

மக்கள் வங்கியில் 22 வருடங்கள் சேவையாற்றி
இன்றுடன் ஓய்வு பெறும்
**கந்தையா ஞானச்சந்திரன்**
தனது ஓய்வு காலத்தில் சகல நலன் களையும்
பெற்று சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



முகாமையாளர்களும், ஊழியர்களும்
மக்கள் வங்கி
சாவகச்சேரி, கொடிகாமம்
கைதடி கிளையினர்.
(61631)(9.3.7)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் பெருமையுடன் வழங்கும்

# யாழ் இந்துவின் முத்தமிழ் மாலை

125 YEARS



ரூபா. 1000

நர்த்தன ஷேத்திராவின்
நிருத்திய அர்ப்பணம்
கோபி தாஸின்
வயலின் இசை
ஜோன் கலிஸ்ரஸின்
ஒரு கூத்தனின் குறிப்பேடு (தனிநடிப்பு)

இடம் : சபாலிங்கம் அரங்கம், யாழ் இந்துக் கல்லூரி.
காலம் : 11.07.2015 மாலை 6 : 00 மணி

பிரதான அனுசரணை :
METRO TRAVELS & TOURS
MICRO PC SYSTEMS Zero Your Electricity Bill

இணை அனுசரணை :
CITY HARDWARE & STORES
Sharanga Money Exchange
ANDRA PRINTERS

☎ 075 5203703 - G.Rajeev

ஊடக அனுசரணை
உதயன்

நுழைவுச் சீட்டு கிடைக்கும் இடங்கள்:
1. METRO TRAVELS AND TOURS (PVT) LTD, 272/1, Stanley Road, Jaffna.
2. MICRO PC, 218, Hospital Road, Jaffna.
3. SAARANGA JEWELRY 157/1, Kasthuriyar Road, Jaffna.
4. CITY HARDWARES 55,57 Stanley Road Jaffna.
5. ANDRA PRINTERS 356A, Kasthuriyar Road, Jaffna.
6. JAFFNA HINDU COLLEGE OBA OFFICE


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 4.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.